22 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம் ™
VLAMBARAM™
416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)
அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs
416.315.9397
www.mahendran.ca
Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca

நதி 22 பாலம் 15 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் AUGUST 01, 2012

# இலங்கை அரசின் LLRC அறிக்கை நிறைவேற்றுத்திட்டம்

19 ஆவது மனிதஉரிமை சபையின் மாநாட்டில் அமெரிக்க அரசு சமர்ப்பித்த, இலங்கை அரசின் நல்லிணக்க ஆணைக் குழுவின் அறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகளை, இலங்கை அரசை நிறைவேற்ற வற்புறுத்தும் பிரேரணை இந்திய அரசின் திருத்தத்துடன் மார்ச் 2012 இல் நிறைவேற்றப்பட்டது.

அப்பிரேரணையில் இப்பரிந்துரைகளை எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றது என ஓர் அறிக்கை 22ஆவது மனிதஉரிமை சபையின் மாநாட்டில் (மார்ச் 2013) சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் கேட்கப்பட்டிருந்தது. இதைத்தொடர்ந்து இப்பரிந்துரைகளை நிறைவேற்ற இலங்கை வரைந்துள்ள திட்டம் பற்றி கலந்துரையாட இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் அமெரிக்க அரசாங்க செயலாளர் ஹிலாரி கிளிண்டனை மே 18, 2012 இல் சந்தித்தார். இச்சந்திப்பு அமெரிக்க அரசாங்க செயலாளரின் அழைப்பின் பேரிலேயே நடைபெற்றது. இச்சந்திப்பின் போது இலங்கை அரசு தனது LLRC அறிக்கை நிறைவேற்றுத்திட்டத்தை அமெரிக்க அரசாங்க செயலாளரிடம் கையளித்திருந்தது. அதுபற்றி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமெரிக்க அரசாங்க செயலாளரின் பேச்சாளர் Victoria Nuland இலங்கை அரசின் LLRC அறிக்கை நிறைவேற்றுத்திட்டம் மிகவும் திறமையான ஒரு திட்டம் என்று கூறியிருந்தார்.

ஆனால் சிங்கள மக்களுக்கு சிங்கள ஊடகங்கள் மூலம் இலங்கை வெளி விவகார அமைச்சின் செயலாளர் அமுனுகம மே 24, 12 இல் தெரிவிக்கும் போது இலங்கை அரசின் LLRC அறிக்கை நிறைவேற்றுத் திட்டம் எதையும் அமைச்சர் பீரிஸ் அமெரிக்க அரசாங்க செயலாளரிடம் கையளிக்கவில்லை என தெரிவித்திருந்தார். அமைச்சர் பீரிஸ் அமெரிக்க அரசாங்க செயலாளருடன் வெறும் பேச்சுவார்த்தைகளை மட்டுமே நடத்தினார் என்றும் கூறியிருந்தார்.

இவ்வாறான ஒரு LLRC அறிக்கை நிறைவேற்றுத்திட்டம் அமெரிக்க அரசிடம் கையளித்திருந்தது IMF நடவடிக்கை மூலம் உறுதிப்படுத்தப்பட்டது. இலங்கைக்கான US GSP உதவித்திட்டம் பற்றி IMF பேச்சு வார்த்தை நடத்தியதும் அக்கூட்டத்தில்

தொடர்ச்சி 02ஆம் பக்கம்

## 2012 ஒலிம்பிக்கில் கனடாவின் முதலாவது பதக்கம்



| | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1. | China | 13 | 6 | 4 | 23 |
| 2. | United States | 8 | 8 | 6 | 22 |
| 3. | France | 4 | 3 | 4 | 11 |
| 4. | DPR Korea | 3 | - | 1 | 4 |
| 5. | Kazakhstan | 3 | - | - | 3 |
| 6. | Italy | 2 | 4 | 2 | 8 |
| 7. | Korea | 2 | 2 | 3 | 7 |
| 8. | Germany | 2 | 2 | 1 | 5 |
| 9. | Russia | 2 | 1 | 4 | 7 |
| 10. | South Africa | 2 | - | - | 2 |

Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099
Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Sales & LEASING
MARKVILLE TOYOTA
KUMAR JEGASOTHY
905.294.8100 & 416.798.7234
Cell: 416.451.0565
கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கெள்ள அழைக்கவேண்டியவர்
>குமார் ஜெகசோதி <
9 ஆண்டுகள் அனுபவம்
E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை
• 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை
MONEY TRANSFER
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3 416.267.8221
3351 Markham Rd. #109 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5 Markham & Eglinton Tel:416.264.3232
3351Markham Rd., #129 Markaham & Steeles Tel: 416.609.2022

# இலங்கை...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இலங்கைக்கு உரிய GSP சலுகைகள் எதுவும் நிறுத்தப்படாமல் தொடருவதாக முடிவெடுக்கப்பட்டதும், இலங்கை அரசிற்கு சாதகமாகவே மற்றும் எல்லா முடிவுகளும் எடுக்கப்பட்டதற்கும் இந்த அறிக்கையே காரணமாகும். இது தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த US வர்த்தக பிரதிநிதி Ron Kirk கூறுகையில் இலங்கை அரசுக்கு சாதகமாக தாங்கள் எடுத்த முடிவிற்கு, இலங்கை அரசு மனிதஉரிமைகள் சம்பந்தப்பட்ட விடயங்களில் முன்னேற்றகரமான நடவடிக்கைகளை எடுப்பது பற்றி அளித்த அறிக்கைதான் காரணம் என்றார்.

இவ்வாறு இலங்கை அரசு தயாரித்து அமெரிக்காவிடம் சமர்ப்பித்த LLRC அறிக்கை நிறைவேற்றுத்திட்டம் கடந்த யூலை 26, 2012 இல் ஊடகங்களுக்கு இலங்கை அரசால் கையளிக்கப்பட்டது. இதில் LLRC அறிக்கையில் சமர்ப்பிக்கபட்ட 285 பரிந்துரைகளுக்குமான இலங்கை அரசின் நிறைவேற்றுத்திட்டம் விபரிக்கப்பட்டுள்ளது.

### அவற்றுள் சிலவற்றின் சுருக்கம்.

1. LLRC **பரிந்துரை 9.9 தொடக்கம் 9.37 வரை**: பொதுசனத்திற்கு ஏற்பட்ட காயங்கள் மற்றும் உயிரிழப்புகளுக்கான காரணங்களை ஆராய்ந்து, அதில் தவறுகள் நடத்திருந்தால் அதுபற்றி விசாரணை நடத்தி குற்றம் செய்தவர்களை தண்டித்தல்.
**இதற்கான அரசின் திட்டம்:** இராணுவத்தின் மீதான விசாரணை ஆரம்பமாகி விட்டது. இன்னும் 12 மாதங்களில் விசாரணைகள் முடிவடைந்து ஒழுக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிடும். இதற்கு பாதுகாப்பு அமைச்சு பொறுப்பு எடுக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கான தண்டனைகள் இன்னும் 24 மாதங்களில் வழங்கப்பட்டு விடும். இதற்கு நீதி அமைச்சும் சட்டமாஅதிபரின் திணைக்களமும் பொறுப்பு எடுக்கிறது.

2. LLRC **பரிந்துரை 9.23:** பொதுமக்கள் சரணடைந்த பின்னர் அல்லது கைது செய்யப்பட்ட பின்னர் காணாமல் போனது பற்றிய குற்றச்சாட்டுகளை விசாரித்து அதில் தவறுகள் நடத்திருந்தால் அதுபற்றி விசாரணை நடத்தி குற்றம் செய்தவர்களை தண்டித்தல்.
**இதற்கான அரசின் திட்டம்:** இதற்கான விசாரணைகள் ஏற்கெனவே ஆரம்பமாகி விட்டன. இன்னும் 12 மாதங்களில் விசாரணைகள் முடிவடைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவிடும். இதற்கு பாதுகாப்பு அமைச்சு பொறுப்பு எடுக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கான தண்டனைகள் இன்னும் 24 மாதங்களில் வழங்கப்பட்டு விடும். இதற்கு நீதி அமைச்சும் சட்டமா அதிபரின் திணைக்களமும் பொறுப்பு எடுக்கிறது.

3. LLRC **பரிந்துரை 9.39:** சனல் 4 வெளியிட்ட விவரணச்சித்திரத்தில் கூறியவற்றை பற்றி விசாரணை நடத்தி அதன் மீது நடவடிக்கை எடுத்தல்.
**இதற்கான அரசின் திட்டம்:** சனல் 4 வெளியிட்ட விவரணச்சித்திரத்தில் கூறியவற்றின் விசாரணைகள் இராணுவத்தால் நடைபெற்று முடிவடைந்துள்ளது. அவ்விசாரணையில் வெளிவந்த விடயங்கள் அடுத்த 6 மாதங்களில் அமல்படுத்தப்படும். இதற்கான பொறுப்பை பாதுகாப்பு அமைச்சும், அரச அதிபரின் செயலகமும் எடுக்கிறது.

4. LLRC **பரிந்துரை 9.215:** பொலிஸ் சேவைகள் தொடர்பாகவும் பொது சேவைகள் தொடர்பாகவும் ஒரு சுயாதீன விசாரணை நடத்துதல்.
**இதற்கான அரசின் திட்டம்:** இவ்வாறான சுயாதீன விசாரணைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. இதற்கான பொறுப்பை நாடாளுமன்ற தெரிவுக்குழு எடுக்கிறது.

5. LLRC **பரிந்துரை 9.171 & 9.227:** அரச படைகளை வடக்கு கிழக்கில் இருந்து படிப்படியாக அகற்றி அங்கு குடிசார் நிர்வாகத்தை நடைமுறைப்படுத்தல்.
**இதற்கான அரசின் திட்டம்:** ஏற்கெனவே 95% குடிசார் நிர்வாகத்தில் இருந்து அரச படைகளின் தலையீடு விலக்கப்பட்டுள்ளது. தற்போது அரச படைகள் 5% மட்டுமே குடிசார் நிர்வாக விடயங்களில் ஈடுபடுகின்றன. அடுத்த 6 மாதங்களில் அரசபடைகள் முற்றாக குடிசார் நிர்வாக விடயங்களில் ஈடுபடுவதில் இருந்து தம்மை விலக்கிக்கொள்ளும். இதற்கு பாதுகாப்பு அமைச்சு பொறுப்பு எடுக்கிறது.

6. LLRC **பரிந்துரை 9.204:** சட்டவிரோத ஆயுதக்குழுக்கள் கலைக்கப்பட வேண்டும். LLRC இக்குழுக்களின் பெயர்கள் சிலவற்றை தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அவையாவன EPDP, கருணாகுழு, TMVP மற்றும் மேஜர் சீலன் குழு.
**இதற்கான அரசின் திட்டம்:** இந்த LLRC பரிந்துரையை நிறைவேற்ற எந்த ஒரு திட்டமும் கொடுக்கப்படவில்லை.

மேற்கூறப்பட்டவை இலங்கை அரசின் LLRC அறிக்கை நிறைவேற்றுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள சிலவற்றின் சுருக்கம் ஆகும்.

# தமிழ் கூட்டமைப்பு பேச்சு வார்த்தைகளை தட்டிக்கழிப்பது தவறு!

நாம் தமிழ் தேசிய கூட்டமைப்புடன் மாத்திரம் பேசி இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது. இதற்கு நாடாளுமன்றத்தின் மூலமே நிரந்தரமான இறுதித் தீர்வை காண முடியும். எனவே, கூட்டமைப்பினர் புலிகள் போன்று புதிய நிபந்தனைகளை விதித்து, பேச்சுவார்த்தைகளை தட்டிக் கழிப்பது தவறு என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார். தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டுமன்றி இந்நாட்டின் சகல அரசியல் கட்சிகளும் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் ஊடாக இனப்பிரச்சினைக்கு சகல தரப்பினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வை காண வேண்டும். இது என்னுடைய தனிப்பட்ட பிரச்சினை அல்ல. இது இந்நாட்டு மக்கள் எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினை. எனவே, சகல அரசியல் கட்சிகளுக்கும் இந்தப் பிரச்சினையை வெற்றிகரமாக தீர்த்து வைக்கும் கடமையும், பொறுப்பும் இருக்கிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அலரி மாளிகையில் ஊடகவியலாளர்களை சந்தித்து பேசியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடபகுதியில் தேர்தல் எப்போது நடத்தப்படும் என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த ஜனாதிபதி, 2013ம் ஆண்டு ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் வடமாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டு வருகிறதென்று கூறினார். இந்த தேர்தலை நடத்துவதற்கு முன்னர் அரசாங்கம் பல முன் ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று தெரிவித்தார்.

கடந்த கால யுத்தத்தினால் தமிழர்கள் மாத்திரம் பாதிக்கப்படவில்லை. முஸ்லிம்களும் சிங்களவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். நல்லிணக்க ஆணைக்குழு தனது சிபாரிசுகளில் வடபகுதியில் இடம்பெயர்ந்த தமிழர்கள் மட்டுமன்றி, முஸ்லிம்கள், சிங்களவர்கள் ஆகியோரையும் மீள்குடியேற்ற வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளது. நாம் அதனையும் செய்து முடித்த பின்னரே தேர்தலை நடத்த வேண்டிய கடப்பாட்டினை கொண்டுள்ளோம்.

1981ம் ஆண்டின் வாக்காளர் அட்டவணை மாத்திரமே இப்போது வடபகுதியில் உத்தியோகபூர்வ ஆவணமாக இருக்கின்றது. இதனடிப்படையில் கடந்த காலத்தில் நடந்த தேர்தலின் போது வாக்காளர் இல்லாத காரணத்தினால் சிலர் 200 வாக்குகளுக்கும் குறைந்த வாக்குகளைப் பெற்று நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களும் இடம்பெற்றன. எனவே, மக்களுக்கு சுதந்திரமாக சென்று வாக்களிப்பதற்கான ஒரு சுமுகமான சூழ்நிலையை அடுத்தாண்டில் உருவாக்கியதற்கு பின்னரே வடபகுதி தேர்தலை நாம் நடத்துவோம்.

தற்போது வடபகுதியில் வாக்காளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைந்திருப்பதனால் வடபகுதியில் இருந்து நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்து அனுப்பப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை 8ல் இருந்து 6 ஆக குறைந்திருக்கிறது. அடுத்தாண்டு ஜூன் மாதம் பூர்த்தி செய்யப்படும் புதிய வாக்காளர் இடாப்பில் மக்கள் தொகையை ஒப்பிட்டு பார்த்த பின்னரே நாடாளுமன்ற பிரதிநிதிகளின் எண்ணிக்கையை கூட்டுவதா? இல்லையா? அல்லது இதேநிலையில் வைத்திருப்பதா என்று முடிவெடுக்கப்படும். நல்லிணக்க ஆணைக்குழுவை நான் தான் நியமித்தேன். அக்குழுவின் சிபாரிசுகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை இப்போது நிறைவேற்றப்பட்டுள்ளது.

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜே பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201,*
*TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059 FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca*
*Web: www.vlambaram.com*

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

## வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. *Vlambaram Publications Inc.,*
   *5215 Finch Ave. E. #201,*
   *Toronto, ON M1S 0C2*
2. *Tel.: 416.282.8059*
3. *Fax: 416.282.4978*
4. *email: vlambaram@sympatico.ca*
5. *web: vlambaram.com*

## வாசகர் எண்ணம்

*பத்திரிகை ஆசிரியர்*

காலத்தோடு வளரும் கணினிகள் கற்போம்
கணனி கவலைகள் போகவே
நற்றமிழில் அகணியாம் நல்லறிஞன் எழுதுகிறார்
விளம்பரத்தில் விளம்பரத் திற்காக அல்ல
மூத்தோர் முதற்கொண்டு இளையோரும் கற்கவென
பற்றுடனே மனம்மகிழ பணியாற்றும் பாவாலனே
வாழ்த்துகிறேன் உன்முயற்சி வழுவாது எந்நாளும்
விளம்பரதத்தில் தொடர்ந்திடுவீர் வீரத் திருமகனே
எழுத்துலகில் மட்டுமல்ல ஏற்றமுற சமூகத்தில்
நல்லறிஞர் நாடுபோற்ற வாழ்ந்திடுவீர்.

- முருகேசு மயில்வாகனன்

## வாசகர் எண்ணம்

'நினைவாற்றல்', 'வெகுளாமை' ஆகிய தலைப்புகளில் கடந்த நாட்களில் விளம்பரம் பத்திரிகையில் தொடர் கட்டுரையாக வெளிவந்து பலரையும் பயன்படச் செய்து பரவசத்தில் ஆழ்த்தியது. வாசகர் A.S. குமாரலிங்கம் அவர்கள் 'சொல்லொன்று செயலொன்று என்ற உலகில் சொல்லே செயலாக வாழுகின்றான் அகணி அவர்கள்' என்பதை நிறைவாக மிகப் பொருத்தமாகச் சுட்டிக் காட்டியிருந்தார்.

நினைவாற்றல் குறைந்தோ அல்லது அற்றோ இருக்கின்ற முதியோர் பலர் படும்பாடு சொல்லில் அடங்காது. அதேபோன்று கோபத்தை அடக்கமுடியாமல் அவதியுறும் பலரையும் அன்றாட வாழ்க்கையில் கண்கூடாகக் காண்கிறோம். ஆகவே அகணியின் இவ்விரு கட்டுரைகளில் அளப்பரிய நன்மைகளை வாசகர்களைப் பெறச் செய்த விளம்பரத்திற்கு நன்றி. 'காலத்தோடு வளரும் கணினிகள்' என்ற தொடர் கட்டுரையை வாசகர்களாகிய நாம் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம்.

பத்மநாதன் தம்பையா.
ஸ்கார்புறோ.

# றொறொன்ரோ மாநகர மண்டபத்துக்கு வருக!

## சுய வழித்துணைச் சுற்றுலா

### மன்றக் கூடம்

மன்றம் கூடும் வேளைகளில் மன்றக் கூடத்துக்கு வந்து, பொதுமக்களுக்குரிய மாடிக்கூடத்தில் அமர்ந்து பார்வையிடுமாறு பொதுமக்களை நாம் அழைக்கிறோம். மன்றம் கூடாத நாட்களில் பாதுகாப்புக் கருதி மன்றக் கூடம் மூடப்பட்டிருக்கும். மன்றம் கூடும் வேளைகளில் மன்றக் கூடத்துக்கு வருவோர் வளைந்த படிவரிசையின் அருகில் உள்ள சிறிய கண்ணாடி-மின்னகர்த்திக்குச் சென்று C குமிழை அழுத்தவும். மன்றம் கூடும் வேளையில் அதன் கூடத்தில் இருப்பவர்கள் அமைதி காக்கவும்.

(மன்றக் கூடத்துள் புக விரும்பாதோர் பின்வரும் பகுதியைக் கடந்து அடுத்த பக்கத்தில் உள்ள அறிவுறுத்துரைகளை வாசிக்கவும்).

மாதந்தோறும் றொறன்ரோ மாநகராதிபதியும், மாநகராட்சி மன்றத்தின் 44 அங்கத்தவர் களும் மன்றக் கூடத்தில் கூடி, மாநகர முடிபுகளை எடுப்பார்கள். ஒவ்வொரு கூட்டமும் அநேகமாக இரண்டு நாட்கள் நீடிப்பது வழக்கம். பொதுமக்கள் கூட்டங்களைப் பார்வையிடலாம். நடுவில், மாநகராதிபதியின் பீடத்துக்கு முன்னே, அமரும் மன்ற எழுதுநருக்கு, மன்ற நிகழ்ச்சி நிரல், நிகழ்ச்சிக்குறிப்புகள் என்பவற்றைத் தயாரிக்கும் பொறுப்பும், முன்மொழிவுகள், வாக்களிப்புகள் என்பவற்றைப் பதியும் பொறுப்பும் உண்டு. பொதுமக்களுக்குரிய கூடத்தில் ஏறத்தாழ 250 பேர் அமர வசதி உண்டு. இங்கு எதிரொலி எழாவாறு கம்பளம் பதிக்கப்பட்டள்ளது. உட்கூரையில் தும்புடன் கூடிய சாந்து பாய்ச்சி எதிரொலி எழாவாறு மேலும் தடுக்கப்பட்டள்ளது. இருக்கைகளின் முன்னே ஒலிபெருக்கிகள் பொருத்தப் பட்டுள்ளதால், மன்றத்தில் இடம்பெறும் உரையாடலை அனைவரும் செவிமடுக்க முடியும். பொதுமக்களுக்குரிய கூடத்தின் பின்னே ஊடகர்களுக்கான கூடம் உண்டு.

மன்றக் கூடத்தின் அகலம் 46 மீட்டர். ஆக உயர்ந்த மையத்தில் அதன் அகலம் 12 மீட்டர். ஒரே உருளைத் தூணில் அது நிலைகொண்டுள்ளது. சாளரங்களுக்கு வெளியே 23 சோடி கொங்கிறீட் பாளங்களில் உட்கூரை நிலைகொண்டள்ளது. உட்கூரையின் எடை ஏறத்தாழ 2032 தொன். அது ஓரொட்டுமர வார்ப்படத்தால் ஆனது. வார்ப்பச்சினுள் இட்ட கொங்கிறீட் காய்வதற்கு ஏறத்தாழ 40 நாட்கள் பிடித்தன.

'மிதக்கும் சுவர்' எனப்படும் வளைந்த சுவர், மன்றக் கூடத்தையும் அங்கத்தவர் கூடத்தையும் பிரித்து நிற்கிறது. மிதக்கும் சுவரின் மறுபுறம் அமைந்துள்ள அங்கத்தவர் கூடம் ஓர் அந்தரங்கப் பகுதி. இங்கு மாநகர அங்கத்தவர்கள் மாநகர மன்றக் கூட்டத்தில் குறுக்கிடாது, தமது விடயங்கள் குறித்துக் கலந்துரையாடலாம். நீங்கள் மன்றக் கூடத்தில் நின்றால், மின்னகர்த்திக்குச் சென்று, ஓராம் மாடித்தளம் செல்வதற்கு 1-ஐ அழுத்தவும். நீங்கள் இரண்டாம் மாடித்தளத்தில் நின்றால், கீழே உள்ள வட்டமாடத்துக்கு இட்டுச்செல்லும் வளைவுப் படிவரிசைகளுள் ஒன்றுக்குச் செல்லவும். உங்கள் சுற்றுலா தொடங்கிய சுவராணி ஓவியத்தை நோக்கி நடந்து, வெளியே அமைந்துள்ள நேதன் பிலிப்ஸ் சதுக்கத்தை அடையவும். நேதன் பிலிப்ஸ் சதுக்கம் 36 ஆண்டுகள் மாநகராட்சி மன்றத்தில் அங்கத்தவராகவும், அவற்றுள் 8 ஆண்டுகள் மாநகராதிபதியாகவும் விளங்கிய நேதன் பிலிப்ஸ் அவர்களின் பெயரே இந்த சதுக்கத்துக்கு சூட்டப்பட்டுள்ளது. இலவச கேளிக்கைகள், இசைநிகழ்ச்சிகள், விழாக்கள், பொருட்காட்சிகள், ஒன்றுகூடல்கள் என்பவற்றை நாடும் மக்களை ஈர்க்கும் களமாக இது விளங்குகிறது. வில்லாளர் சிற்பம், அமைதித் தோட்டம், பளிங்குத் தடாகம்/உறைபனிச்சறுக்குத் திடல் என்பன அதன் பெருஞ் சிறப்புகள். உலகின் மிகப்பெரிய தரைக்கீழ் ஊர்திச்சாலைகளுள் ஒன்று இந்த சதுக்கத்தின் கீழே அமைந்துள்ளது. இங்கு 2,400 கார்கள் நிறுத்த வசதி உண்டு.

மன்றக் கூட, கோபுரக் காட்சி மாநகர மண்டபத்தை நோக்கும்பொழுது, மன்றக் கூடத்தை தன்னகத்தே கொண்ட வட்டக் கட்டமைப்பும், இருபுறமும் ஓங்கும் வளைகோபுரங்களும் தென்படும். இடதுபுறம் (மேற்கே) எழும் கோபுரம் 20 மாடி உயரம் கொண்டது. அதைவிட உயர்ந்த கிழக்குப் புறத்துக் கோபுரம் 27 மாடிகள் கொண்டது. இம்மாநகர மண்டபம் மொத்தம் 8,700 சதுர மீட்டர் கண்ணாடித் தகடுகள் கொண்டது. நீங்கள் ஒரு விமானத்தில் அல்லது உலங்கு வானூர்தியில் மேலே பறந்து கீழே பார்த்தால், இக்கட்டிடம் இரண்டு இமைகளுக்கு இடைப்பட்ட விழி போன்று தென்படுவதை அவதானிப்பீர்கள்.



**தமிழ்: மணி வேலுப்பிள்ளை**

### வில்லாளர்

மாநகர மண்டப கட்டிடக்கலைஞர் வில்ஜோ றெவெல் (Viljo Revell) தனது நண்பரும், சிறந்த பிரித்தானிய சிற்பியுமாகிய ஹென்றி முவரிடம் (Henry Moore), இந்த சதுக்கத்துக்கென $100,000 செலவில் ஒரு சிற்பத்தை வாங்க விரும்பினார். மூவருடன் கதைத்து சிறிது காலத்துள் றெவெல் இறந்து விட்டார். எனினும் அவருடைய எண்ணம் இறக்கவில்லை என்பது வெளிப்படையாகவே புலப்பட்டது. அப்பொழுது அது ஒரு பெருஞ் சர்ச்சையைக் கிளப்பியதுண்டு. முவர் தொடக்கத்தில் மூவழி உரு இலக்கம் - 2 (Three-Way Piece No. 2) என்று தலைப்பிட்ட மேற்படி உருவுக்கான நிதி, ஒரு தனியார் ஒப்பத்தொகை நிதியத்தின் ஊடாகத் திரட்டப்பட்டது. 1966-ல் நிலைநிறுத்தப்பட்ட மேற்படி உருவின்மீது றொறன்ரோ வாசிகளும், இம்மாநகரத்துக்கு வந்து செல்வோரும் விரைந்து பற்றுக் கொண்டதோடு நிற்காது, அதன் பெயரை வில்லாளர் என்று குறுக்கிவிட்டார்கள்!

### அமைதித் தோட்டம்

சதுக்கத்தின் நடுவில் உள்ள மரங்களும், செடிகளும் அமைதித் தோட்டத்தைக் குறிப்பவை. 1984-ல் மாநகரத்தின் 150-வது ஆண்டுநிறைவு கொண்டாடப்பட்ட வேளையில் அமைதித் தோட்டம் அதிகாரபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. புனித பாப்பரசர் இரண்டாவது ஜோன் போல், ஹிரோஷிமா அமைதி நினைவுச் சின்னத்திலிருந்து தருவிக்கப்பட்ட தணலைக் கொண்டு, அணையாத் தீபத்தை ஏற்றினார். நாகசாக்கி ஊடாகப் பாயும் ஆறுகளில் கோலியெடுத்த நீரை இங்குள்ள தடாகத்தில் அவர் ஊற்றினார். ஒரு மாதம் கழித்து மாட்சிமை தங்கிய அரசி எலிசபெத் அமைதித் தோட்டத்தை அதிகாரபூர்வமாக நேர்ந்தளித்தார்.

கற்சுவர்க் கூரை சேதமுற்ற தோற்றம் கொண்டது. உலகில் பிணக்கு நிலவுவதைக் குறிப்பதற்காகவும், நாகரிகம் ஒடியக்கூடியது என்னும் விடயத்தை உணர்த்துவதற்காக வுமே இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது.

கதிர்மணிக்கூடு, றொறன்ரோ வாசிகளுக்கு மாநகராதிபதி நேதன் பிலிப்ஸ் அவர்களின் அன்பளிப்பு. எந்திரவியலரும், புவி-இயற்பியலருமாகிய ஜி.ஆர்.ஜோன்சன் (G.R. Johnson), மாநகர ஆதன ஆணையாளர் எச்.எச்.றொஜேர்ஸ் (H.H. Rogers), கட்டிட வியலர் ஜோன் சி. பார்க்கின் (John C. Parkin) ஆகியோருடன் கலந்துசாவி இக்கதிர்மணிக்கூட்டை வடிவமைத்தார். மெருகிட்ட கருங்கல் உருளையில் அதன் வெண்கலச் சட்டம் நிலைகொண்டுள்ளது. இதன் அளவு: 2.4 மீட்டர்.

### பளிங்குத் தடாகம் / உறைபனிச்சறுக்குத் திடல்

இந்த சதுக்கம் ஒரு மக்கள் சதுக்கம் என்று புகழப்படுவதற்கு ஏதுவான சிறப்புகளுள் இது ஒன்று. ஆழமற்ற இத்தடாகம், பனி விழும் பருவத்தில் (கொங்கிறீட் தரையுடன் கூடிய குளிர்க் கட்டுக்கோப்பின் உதவியுடன்) ஓர் உறைபனிச்சறுக்குத் திடலாக மாறுகிறது - உறைபனிச்சறுக்கு விளையாட்டுக்கு மக்களை ஈர்க்கும் இடமாக மாறுகிறது. இம்மாநகரத்துக்கு வந்து செல்வோர் உறைபனியில் சறுக்கும் காலணிகளை வாடகைக்கு எடுக்கலாம். உள்ளக உடைமாற்று கூடங்களை அவர்கள் பயன்படுத்தலாம்.

### சுதந்திர அணிவளைவுகள்

1989 யூன் 29-ம் திகதி கூடிய மாநகராட்சி மன்றம் மேற்படி பளிங்குத் தடாகத்தின்மேல் கவிந்துள்ள அணிவளைவுகளுக்கு 'சுதந்திர அணிவளைவுகள்' என்று பெயர் சூட்டுவதை அங்கீகரித்தது. தென்மத்திய சுதந்திர அணி-

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
• Detailing
• Motor Shampoo
• Interior Shampoo
• Exterior Wash
• Waxing
• Repairs
• Safety Certification
• Overall Maintenance
• Under Coating
• Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6


# ஒவ்வொரு மனிதனும் ஆரோக்கியம் வளமான வாழ்வையே விரும்புகிறார், உள்நிலையிலும் வெளிப்புறத்திலும் இயற்கையோடு இயைந்திருப்பதே உண்மையான ஆரோக்கியத்தின் அடிப்படையான விளக்கம்

'அற்புதமான அனுபவம்! இங்கிருக்கும் ஒருங்கிணைப்பாளர்களும் தன்னார்வ தொண்டர்களும் மசாஜ் செய்வோரும் இப்படியொரு மகத்தான அனுபவத்தை எனக்கு வழங்கியுள்ளனர். இங்கு எனக்கு அடிப்படையான யோக ஆசனங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. மேலும் என் வாழ்க்கை முறையால் மிகுந்த மன அழுத்தத்திற்கு உள்ளாகும் எனக்கு அமைதியான தியானமும் தரப்பட்டது. இந்த அனுபவம் மிகமிக அற்புதமாக இருந்தது. எழில் கொஞ்சும் பசுமையான சூழ்நிலை, தியான மண்டபங்கள் மேலும் அங்கு நடத்தப்பட்ட வகுப்பு என அனைத்துமே மிக அற்புதம்', என்பவர் இளம் வயதுக்காரரான திரு. சுனில் முரளிதரன், பெங்களூரைச் சேர்ந்த இன்ஜினியர்.

அப்படி எங்குதான் சென்றார் திரு. சுனில்? யோகா செய்ய வேண்டுமென்றால் குருவை தேடிச் செல்ல வேண்டும், மசாஜ் செய்ய வேண்டுமென்றால் கேரளத்திற்கு டிக்கெட் போட வேண்டும். இரண்டும் ஒரு சேர அதுவும் தன்னார் தொண்டர்களுடன் என்று பார்கையில் 'ஈஷா யோகா மையம்' என திட்டவட்டமாக புரிகிறது. கண்களில் உற்சாகத்துடன் புத்துணர்வோடு பேசும் சுனிலிடம் தென்படுவதோ ஆரோக்கியப் புன்னகை.

'எனக்கு இருதய பிரச்சினை இருந்தது, அச்சமயத்தில்தான் நான் ஈஷா மையம் சென்றேன், அப்போது என்னால் சிறிது தூரம் கூட நடக்க இயலவில்லை. நான் மையத்தில் தொடர்ந்து நான்கு வாரங்கள் தங்கி சில யோகாப் பயிற்சிகள் மற்றும் சில வைத்திய முறைகளை கடைப்பிடித்தேன். அதன் மூலம் பை-பாஸ் அறுவை சிகிச்சையை தவிர்த்துவிட்டேன். 6 கி.மீ மலையேற்றம் செல்லும் அளவிற்கு உடல் நலம் தேறியது. எனக்கு அளிக்கப்பட்ட மருத்துவத்தினால் மட்டும் இது சாத்தியமில்லை. மையத்தின் சூழ்நிலை, உணவு, மக்களின் அன்பு, அரவணைப்பு இவையே நான் முழுவதுமாக நிவாரணம் பெற துணையாயிருந்தது' என தான் மறுவாழ்வு பெற்ற அனுபவத்தை நம்முடன் பகிர்ந்து கொள்பவர் ஈரோட்டை சேர்ந்த தொழிலதிபர், திரு. சதாசிவம் அவர்கள்.

திரு. சதாசிவம் அவர்களுக்கு சத்குருவின் வழிகாட்டுதலோடு சித்தா, ஆயுர்வேதா, சிறிதளவு நேச்சுரோபதி, யோகா இவற்றின் சீரான கலவையாய் கோவை ஈஷா யோகா மையத்தில் அமைந்துள்ள ரெஜிவினேஷன் சென்டரில் (Rejuvenation Center) சிகிச்சை வழங்கப்பட்டது.


இவர்களுக்கு மட்டுமல்ல நாள்தோறும் ரெஜிவினேஷன் சென்டருக்கு வந்து செல்வோர் பலரின் அனுபவங்களும் இவ்வாறே அமைந்துள்ளது. 20 வருடங்களாய் இன்சுலின் ஊசி போட்டுக் கொண்டவர்களும் இன்சுலின் தேவையின்றி போன கதையும் இங்குண்டு. ஒரு சிலருக்கு மறுவாழ்வு கொடுப்பதாயும் மற்றும் சிலருக்கு புத்துணவூட்டுவதாயும் விளங்கும் ரெஜிவினேஷன் சென்டரை பற்றி சத்குருவின் வார்த்தைகளில், 'இங்கு உடலின் முழு அமைப்புமே முற்றிலும் புதிய விதத்தில் கையாளப்படுகிறது. உங்களுடைய உடல் அணுக்களையும் வளர்சிதை மாற்றத்தையும் தூண்டிவிடுவதன் மூலம் உங்கள் உடலே அதனை திருத்தி அமைத்துக்கொள்ளச் செய்யப்படுகிறது. நீங்கள் எம் மாதிரியான மருந்து உட்கொண்டாலும் உங்கள் உடல்தான் தன்னை தானே திருத்திக் கொள்கிறது. மருந்தல்ல, அதனால் இங்கு சரிவிகிதமான உணவின் மூலமும், சரியான உடற்பயிற்சியுடன் உடலிற்கு தேவையான காலமும் கொடுத்து குறிப்பிட்ட சிலவகையான மூலிகைகள் மற்றும் சில பொருட்களின் உதவியுடன் உங்கள் உடல் இயக்கத்தை பெரிய அளவில் புத்துணர் வூட்ட முடியும். இன்றைக்கு வயோதிகம் என்றால் மருந்து, மாத்திரை, ஆஸ்பத்திரி என்றாகிவிட்டது. உங்கள் உடலில் செயல்படும் புத்துணர்ச்சி முறை சரியாக தூண்டப்படுமானால் வயோதிகம் என்பது இம்சையாக இருக்காது' என்னும் சத்குரு அவர்கள், 'இந்த ரெஜிவினேஷன் சென்டர் ஒரு அழகியல் கூடத்தை (SPA) காட்டிலும் பல விதங்களில் வித்தியாசமானது' என்றும் சொல்கிறார்.

ஈஷா யோகா மையம் தொடங்கிய புதிதில் இங்கு வந்து செல்வோருக்கு உதவும் விதமாய் தொடங்கப்பட்ட யோக மருத்துவ மனையின் தேவை பெருகவே 6 ஆண்டுகளுக்கு முன்னர் ரெஜிவினேஷன் சென்டராய் புது வடிவம் பெற்றது. இங்கு சித்த மருத்துவ முறை, ஆயுர்வேத மற்றும் ஸ்விடிஷ் மஸாஜ் முறைகள் குறிப்பிட்ட வகையான நேச்சுரோபதி சிகிச்சைகள், பழங்கால யோக முறைகளோடு சில அரிய மூலிகைகளை பயன்படுத்தியும் தேவைக் கேற்ப சிகிச்சை வழங்கப்படுகிறது. இங்கு வழங்கப்படும் ஒவ்வொரு சிகிச்சை முறைக்கும் அத்துறையை சேர்ந்த கை தேர்ந்த நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு உள்ளனர்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

பாரம்பரியமாக ஆயுர்வேத சிகிச்சை முறையில் அளித்து வருபவர்களால் இங்கு மசாஜ் செய்யப்படு கிறது. இவர்கள் பிரத்யேகமாக கேரளத்திலிருந்து வரவழைக்கப் பட்டுள்ளனர். நேச்சுரோபதிக்கும் ஸ்விடிஷ் மசாஜிற் கும் அம்முறைகளில் கை தேர்ந்தவர்கள் உள்ளனர். சித்த மருத்துவத்திலும் ஆங்கில மருத்துவத்திலும் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களும் மையத்திலேயே உள்ளனர். அனைத்திற்கும் முத்தாய்பாக சத்குரு அவர்களால் இவ்வுடல் குறித்து பயிற்சியளிக்கப்பட்ட பிரமச்சாரிகள் இச்சிகிச்சைகளில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

புத்துணர்வு என்றால்! பெரும்பாலான அழகியல் கூடங்கள் ஒருவருக்கு இனிமையான இளைப்பாறலையே வழங்குகின்றன. ஆனால் அவர்களுக்கு உண்மையில் புத்துணர்வு என்பதை பற்றி தெரிந்திருக்க வில்லை. இந்த அழகியல் கூடங்கள் நமக்கு ஒரு நிலையில் வேலை செய்யதான் செய்கின்றன. ஆனால் நாம் இங்கு புத்துணர்வு என்பதை முற்றிலும் மாறுபட்ட ஒரு பரிமாணத்தில் அணுகுகிறோம். ஆரோக்கியம் என்பது தனியொருவர் தன் உடலை எவ்வாறு பயன்படுத்தி அல்லது துஷ்பிரயோகப்படுத்தி இருக்கிறார். எவ்வாறான வாழ்க்கை முறையை கடைப்பிடிக்கிறார் என்பவைகளை பொறுத்து தனியொருவருடைய உடல் மாறுபடுகிறது, நீங்கள் யோகப் பயிற்சிகளை தொடர்ந்து செய்து வருகையில் எல்லா விதத்திலும் ஐந்து வயதாவது நீங்கள் குறைந்துள்ளதை கவனிக்க முடியும். இப்பயிற்சிகள் உங்கள் சக்திநிலையிலும் உங்கள் உடலின் உயிரோட்டத்திலும் பெரிய அளவில் தாக்கம் ஏற்படுத்துவதால் உங்கள் வயதை நீங்களே மறந்து போகும் அளவிற்கு இப்பயிற்சிகள் உங்களை மாற்றி அமைக்கிறது. இதுவே ரெஜிவினேஷன் சென்டரின் மையநோக்கமும் கூட.



சத்குரு வாசுதேவ்

ரெஜிவினேஷன் சென்டரில் இருவகையாய் ஒருவரின் உடலில் ஏற்படும் இடர் அணுகப்படுகிறது. திரு. சதாசிவம் அவர்கள் மேற்கொண்டது 'யோகா மார்கா' என்னும் 21 நாள் சிகிச்சை நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியில் கிட்டத்தட்ட எல்லாவகையான நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படு கிறது. அதில் சர்க்கரை நோய் பைல்ஸ், தலைவலி, உடற்பருமன், சைனஸ், மூட்டு வலி, ஹப்பர் டென்ஷன், இருதயம் சம்பந்தமான பிரச்சினைகளும் உள்ளடக்கம். இவ்வகையான நோய்களுக்கு முன்னர் குறிப்பிட்டபடி சித்த மருத்துவம், ஆயுர்வேத தெரபிகள் போன்ற மாற்று மருந்துகளின் தனித்துவமான கலவை வழங்கப்படுகிறது. இவ்வகுப்பு செய்வதற்கு ஈஷா யோகா அடிப் படை வகுப்பை செய்திருக்க வேண்டும். ஏனெனில் மார்கா நிகழ்ச்சியை பிணைக்கும் நூலிழையாய் யோகா விளங்குகிறது.

சத்குரு அவர்களால் இம்முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ள ஈஷா பிரமச்சாரி களான மா உஜ்ஜீவலாவும் மா சமபுத்தியும் இது பற்றி பேசும் போது 'நாம் இங்கு அவர்களுக்கு சரியான சூழ்நிலை உருவாக்கி, அவர்களுடைய ஆரோக்கியத் திற்கு தேவையான ஸ்திரமான அடித்தளம் அமைத்துக் கொடுக்கிறோம். அவர்கள் வீட்டிற்கு சென்றாலும் தன் வாழ்க்கை சூழ்நிலையை எவ்வாறு உருவாக்கி உன்னதமான ஆரோக்கியத்தை உணரலாம் என்பதற்கும் இங்கு முன்மாதிரி அமைத்துக் கொடுக்கிறோம். அத்தோடு அல்லாமல் இங்கு வருவோருக்கு அடிப்படையான, ஆனால் மிக சக்தி வாய்ந்த யோகப் பயிற்சி களும் கற்றுத் தருகிறோம்' என்கின்றனர்.

ரெஜிவினேஷன் சென்டரில் 6 வருட அனுபவம் கொண்ட இருவரும் இங்கு வகுப்புகள் நடக்கும் பொழுது நிகழ்ச்சியில் பங்குபெறும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி சிகிச்சை அளித்து வருகின்றர்.

சிகிச்சை அளித்து நல்வாழ்வு வழங்கும் சிகிச்சை வகுப்புகள் ஒருபுறமிருக்க புத்துணர்வூட்டும் புத்துணர்வு நிகழ்ச்சிகளும் மறுபுறம் நடந்து கொண்டிருக்கிறது. திரு. சுனில் அவர்கள் மேற்கொண்டது ஆயுர் ரசாயனா எனப்படும் ஒரு புத்துணர்வு நிகழ்ச்சியைத் தான் சரி, வயயோதிகத்தில் தான் சிகிச்சை என்றால் இளமையில் என்ன என்று இவரை பார்த்து நீங்கள் கேட்கலாம். இன்றைய பரபரப்பான வாழ்க்கை சூழலில் வயது வேறுபாடின்றி நோய் என்பது எல்லா தரப்பினருக்கும் பொதுவாகி போய்விட்டது. மன அழுத்தம், அதனால் ஏற்படும் உளைச்சல், உடல் சோர்வு, விளைவு... உடல் மற்றும் மன சூழலில் சிக்குண்டு, துவண்டுப் போய்விட்டனர்.

இன்றைய இளைஞர்கள். இன்றைய கம்யூட்டர் யுவதிகளுக்காக திரு. சுனில் அவர்கள் மேற்கொண்டதை போன்ற ஆயுர் நிகழ்ச்சிகளும் ரெஜிவினேஷன் சென்டரில் உள்ளது.

இந்த புத்துணர்வு நிகழ்ச்சிகளை பற்றி மா சமபுத்தி பேசுகையில் 'இங்கு எல்லாவித மான ஆயுர்வேத மசாஜ்களும் வழங்கப்படு கின்றன. பங்கேற்பாளர்கள் தங்கள் சௌகரியத்தை பொறுத்து ஆயுர்ரயனாவின் வெவ்வேறு நிகழ்ச்சிகளை தேர்தெடுக்க முடியும். அடிப்படையாக பார்த்தால் எல்லா ஆயுர் நிகழ்ச்சிகளும் ஒரே நோக்கத்திற்கா உருவாக்கப்பட்டவை தான். அவர்கள் இங்கு செலவிடும் நாட்களை பொறுத்து ஆயுர் ரசாயனாவின் வெவ்வேறு நிகழ்ச்சிகளை தேர்தெடுக்க முடியும். அடிப்படையாக பார்த்தால் எல்லா ஆயுர் நிகழ்ச்சிகள் ஒரே நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டவை தான். அவர்கள் இங்கு செலவிடும் நாட்களை பொறுத்து அவர்களுக்கு செய்யப்படும் மசாஜ்களும் அதிகரிக்கும். நம்முடன் அதிக நாட்கள் அவர்கள் செலவு செய்கையில் அவர்களுடைய உடல் புத்துணர்வு இன்னும் சற்று அதிகமாக தூண்டப்படும். நம்முடைய நோக்கமே அவர்களுக்கு எது சிறந்ததோ அதை வழங்குவது தான். அதோடு மட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சியின் பகுதியாக, அருகில் உள்ள பசுமை நிறைந்த மலைவாழ் கிராமங்களுக்கு நடைபயணமாக சென்று வருவதும், இயற்கையுடன் சற்று நேரம் செலவழிப்பதும் ஒருவரை மேலும் புத்துணர்வடையச் செய்யும்' என்கிறார்.

ஆயுர் ரசாயனா 2½ நாட்களும், ஆயுர் ரசாயனா இன்டென்சிவ் 5 நாட்களும், ஆயுர் சம்பூர்ணா 7 நாட்களும், ஆயுர் சஞ்ஜீவினி வகுப்பு 9 நாட்களும் நடைபெறுகின்றன. இந்த வகுப்புகள் அனைத்திலுமே ஒருவருடைய அடிப்படை ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக சில சித்த மருந்துகளும், ஆயுர்வேத மற்றும் ஸ்விடிஷ் மசாஜ்களும் அடக்கம். ஆயுர் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு ஈஷா யோகா வகுப்புகள் செய்திருக்க வேண்டிய அவசிய மில்லை, 7 வயதிற்கு மேற்பட்ட எவரும் இந் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ளலாம்.

சுநேத்ரா என்றொரு கண் சிகிச்சை நிகழ்ச்சியும் இம்மையத்தில் வழங்கப்படுகிறது. 'சு' என்றால் நல்ல, 'நேத்ரம்' என்றால் கண்கள் என்று பொருள். பொதுவாக கண்நோய்களில் 95% நோய்கள் இங்கு கற்றுத்தரப்படும் பயிற்சிகளை தொடர்ந்து செய்து வந்ததன் மூலம் கண் கண்ணாடியை கழற்றியவர்கள் ஏராளம்.

'யோகா மார்கா' வகுப்பு குழந்தைகளுக்காக பிரத்யேகமாகவும் நடத்தப்படுகிறது. குழந்தைகளுக்கான நிகழ்ச்சியில்

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

சனிக்கிழமை வோக் - இன் 9.00 am - 5.00 pm வரை

தலைவிதியே மாறுதாம்!
மோட்கேஜ் விதி
மாறினால் என்ன ?

மாற்றம் ஒன்றே மாறாதது !

Our New Rates:
5 Yr Fixed Rate : 3.09 %
5 Yr Variable Rate : 2.90 %
OAC

# மோட்கேஜ் கிளினிக்



## 416-644-3555

**CENTUM Rapid Mortgages Inc.**
FSCO LIC # 10156

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

rapid realty inc. ⟹ "Rapid Response; Rapid Results"

# லண்டன் ஒலிம்பிக் போட்டிகள் ஓர் மதிப்பீடு

333

லண்டனில் மிகவும் பிரம்மாண்டமாக நடைபெறவிருக்கும் 2012ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்கும், இதற்கு முன்பு லண்டனில் நடைபெற்ற இரண்டு ஒலிம்பிக் போட்டிகள் பற்றிய சுவாரஸ்ய தகவல்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

எஸ். கணேஷ்



| | 1908 (ஏப்ரல் 27- ஒக்டோபர் 31) | 1948 (யூலை 29- ஓகஸ்ட் 14) | 2012 (யூலை 27- ஓகஸ்ட் 12) |
|---|---|---|---|
| வீரர்களின் எண்ணிக்கை | 22 நாடுகளைச் சேர்ந்த 36 வீராங்கனைகள் உட்பட 2035 வீரர்கள் இடம்பெற்றனர். | 59 நாடுகளைச் சேர்ந்த 385 வீராங்கனைகள் உட்பட 4099 வீரர்கள் இடம்பெற்றனர். | 200 நாடுகளைச் சேர்ந்த 10490 வீரர்கள் இதில் பாதி பேர் வீராங்கனைகள் பங்குபெறவுள்ளனர். |
| விளையாட்டுகளின் எண்ணிக்கை | போலோ, சைக்கிள் போலா உட்பட 22 விளையாட்டுகள் பங்குபெற்றன. | கூடைப்பந்து, மகளிர் படகுப்போட்டி மற்றும் முதன் முறையாக அறிமுகமான பளுதூக்குதல் உட்பட 17 விளையாட்டுகள் பங்குபெற்றன. | புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மகளிர் குத்துச்சண்டை உட்பட 26 விளையாட்டுகள், பாரம்பரிய ஒலிம்பிக் விளையாட்டும் சபையேற உள்ளது. ஆனால் இதற்கு பதக்கம் கிடையாது. |
| தொடக்க நிகழ்வு  | முறையான வீரர்கள் அணிவகுப்பு நடத்தப்படவில்லை. பட்டதாரிகள், கல்லூரி மாணவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். விழா மதியம் நடைபெற்றது. | சர்வதேச ஒலிம்பிக் ஆணையத்தின் உறுப்பினர்கள் மன்னருக்கு ராஜ விருந்து கொடுத்தனர். நாடுகளின் அணிவகுப்பு நடைபெற்றது. ஒலிம்பிக் ஜோதி கொண்டுவரப்பட்டது. ஒலிம்பிக் கீதம் இசைக்கப்பட்டது. இந்த விழாவும் மதியம் நடைபெற்றது. | பிரபல இயக்குனர் டேனி பாய்லின் தலைமையில் 27 மில்லியன் யூரோ செலவில் 10,000 தன்னார்வலர்களைக் கொண்டு பண்ணை விலங்குகள் வாழும் இருப்பிடம் போன்று இயற்கையாக வடிவமைத்துள்ளனர். இந்த தொடக்க விழா "Isles of Wonder" என்றழைக்கப்படுகிறது. விழா இரவு நடைபெற உள்ளது. |
| விளையாட்டு அரங்கம் | மேற்கு லண்டனில் வடக்கில் உள்ள செப்பர்டு புஷ் பகுதியில் முதன் முறையாக ஒலிம்பிக்குக்காக 70,000 மக்கள் அமரும் வகையில் அப்போதைய மதிப்பிற்கு 60,000 யூரோ செலவில் மைதானம் கட்டப்பட்டது. இந்த இடம் தற்போது ஒயிட் சிட்டி என்றழைக்கப்படுகிறது. | இரண்டாம் உலகப்போர் முடிந்த காலம் என்பதால் புதிய மைதானம் எதுவும் கட்டப்படவில்லை. தற்காலிகமாக வெம்பிலி மைதானத்தில் நடைபெற்றது. | லண்டன் 2012 மைதானம் 500 மில்லியன் யூரோ செலவில் கட்டப்பட்டது. 80,000 மக்கள் அமரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. |
| போட்டிகளுக்கான செலவு | அரசாங்கத்தின் செயல்பாடு இன்றி, ஒருங்கினைப்பாளர்களின் நன்கொடையின் மூலமும், டிக்கெட் விற்பனையில் கிடைத்த பணத்தில் நடத்தப்பட்டது. 60,000 யூரோவிலிருந்து 80,000 யூரோ வரை செலவு செய்யப்பட்டது. (இன்றைய மதிப்பில் 5.7 மில்லியன் முதல் 7.6 மில்லியன் யூரோ வரை) | போர் முடிந்த நேரம் என்பதால் சிக்கனமாகவே நடத்தப்பட்டது. 6 லட்சம் யூரோ செலவானது (இன்றைய மதிப்பில் 18.5 மில்லியன் யூரோ) 10,000 யூரோ வருமானமும் கிடைத்தது. | 9.3 பில்லியன் யூரோ பட்ஜெட் என்று அமைச்சர்கள் தெரிவித்துள்ளனர். மேலும் 476 மில்லியன் யூரோ அவசர தேவைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. |
| டிக்கெட் விலை  | முதல் தர டிக்கெட் விலை 2 சில்லிங்ஸும் 6 பென்ஸ்களும் (விலைவாசி உயர்வுகளின் படி இன்றைய மதிப்பில் 11.36 யூரோ) | இன்றைய மதிப்பில் 3.85 யூரோவிற்கு விற்கப்பட்டது. நிறைய டிக்கெட்டுகள் தொடக்க விழா முதல் நிறைவு விழா வரைக்குமாக இருந்தது. இவை நின்று பார்ப்பதற்கு 12.92 யூரோவும் உட்கார்ந்து பார்க்க 64.62 யூரோவும் ஆனது. | தரமான இருக்கையில் அமர தொடக்கவிழாவிற்கு £20.12 & £2,012. யூரோவும், மற்றும் 100 மீற்றர் தடகளப் போட்டியின் இறுதிப்போட்டிக்கு 725 யூரோவும் ஆகும். ஆனால் 90 சதவிகித டிக்கெட்டுகள் 100 யூரோ அல்லது அதற்கும் குறைவான விலையிலே விற்பனை செய்யப் பட்டுள்ளது. 16 வயதுக்குட்பட்டவர்களுக்கு அவர்கள் வயதிற்கேற்ப விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உதாரணத்திற்கு 10 வயது சிறுவனுக்கு 10 யூரோ என்ற அளவில் உள்ளது. |
| ஒலிம்பிக் தீபம் | ஒலிம்பிக் ஜோதி அப்போது இல்லை. இந்த முறை 1928ம் ஆண்டு தான் அறிமுகமானது. ஒலிம்பிக் வளையங்களும் 1914ம் ஆண்டு வரை இல்லை மற்றும் ஒலிம்பிக் கீதமும் 1920ம் ஆண்டு வரையில்லை. | வெம்பிலி மைதானத்தில் தொடக்க விழா மதியம் நடைபெறுவதற்கு முதல் நாள் இரவே கொண்டுவரப்பட்டது. | ஒலிம்பிக் ஜோதி லண்டனிலிருந்து மே 19ம் திகதி தொடங்கி 70 நாட்களுக்கு 8000 பேர் கைகளுக்கு சென்ற பின்னர் ஒலிம்பிக் மைதானத்தை அடையும். |
| விளையாட்டு சாதனைகள்  | 100 மீற்றர் ஓட்டத்தில் 10.8 நொடியில் கடந்து சாதனை (தென் ஆப்ரிக்காவின் ரெஜி வாக்கர்). மாரத்தான் 2மணி 55 நிமிடம் 18.4 நொடி (அமெரிக்காவின் ஜானி ஹேயஸ்). 1500 மீற்றர் நீச்சலில் 22நிமிடம் 28.4 நொடி (பிரிட்டனின் ஹென்றி டெய்லர்) | 100மீற்றர் 10.3 நொடி (அமெரிக்காவின் ஹாரிசன் டில்லியர்டு). மாரத்தான் 2மணி 34 நிமிடம் 51 நொடி (அர்ஜென்டினாவின் டெல்போ கபேரியா). 1500மீற்றர் நீச்சலில் 19 நிமிடம் 18.5 நொடி (அமெரிக்காவின் மெக்கலின்) | 2008ம் ஆண்டு ஒலிம்பிக் சாதனை 100மீற்றர் 9.69 நொடி (ஜமைக்காவின் உசேன் போல்ட்). மாரத்தான் 2மணி 06 நிமிடம் 32 நொடி (கென்யாவின் சம்மி வன்ஜிரு). 1500மீற்றர் நீச்சலில் 14 நிமிடம் 38.92 நொடி (அவுஸ்திரேலியாவின் கிராண்ட் ஹாக்கெட்) |
| பிரிட்டன் வென்ற பதக்கங்கள் | எல்லா காலங்களுக்குமாக பிரிட்டன் 56 தங்கப்பதக்கத்துடன் 146 அதிகபட்ச பதக்கங்கள் வென்றது. | 3 தங்கத்துடன் 23 பதக்கம் வென்று 12வது இடத்தை பிடித்தது. | 2008 ஒலிம்பிக்கில் 19 தங்கத்துடன் 47 பதக்கங்கள் வென்று நான்காவது இடத்தை பிடித்தது. |
| நன்கொடையாளர்கள்  | ஆக்ஸோ நிறுவனம் தான் அதிகாரப்பூர்வமாக போட்டியாளர்களுக்கெதிராக ஆக்ஸோ குளிர்பானம், சாப்பாடு, பாயாசம், பால், வாழைப்பழம் என்று சகலமும் வழங்கியது. | போர் முடிந்த சமயமானதால் உணவுக்கும் எரிபொருளும் பங்கீட்டு இருந்ததால் சிலர் மட்டுமே நன் கொடையாளர்களாக இருந்தனர். பார்வையாளர்களுக்கும், போட்டியாளர்களுக்கும் மைதானத்திற்கு வெளியே கொக்கோ கோலா பானம் வழங்கப்பட்டது. | உலகத்தரம் வாய்ந்த 11 நிறுவனங்கள் நன்கொடை வழங்குகின்றன coco cola உட்பட. இவற்றில் முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனங்களான Adidas, BMW, BP, British Airways, BTL, ED and Lloyds TSB ஆகியனவும் அடங்கும். |
| கதாநாயகர்கள் | ஒரே போட்டியில் மூன்று தங்க பதக்கங்களை வென்று நீச்சல் வீரரான ஹென்றி டெய்லர் சாதனைப் படைத்தார். | இரண்டு குழந்தைகளுக்கு தாயான Fanny Blankers-Koen 100மீட்டர், 200மீ, 80மீ உயரம் தாண்டுதல் மற்றும் 400மீ தொடரோட்டம் ஆகிய போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்று சாதனைப் படைத்தார் | ஓட்டபந்தயத்தில் Jamaican Usain Bolt இவர்களைப் போன்று உலகசாதனை படைப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது. |
| ஊடகம் | ஒலிம்பிக் போட்டிகள் குறித்த தகவல்கள் பத்திரிக்கைகள், சுவரொட்டிகள் மற்றும் இதழ்கள் மூலம் மக்களுக்கு தெரிவிக்கப்பட்டன. | விளையாட்டுகள் வானொலி மூலமாக 58 நாடுகளுக்கும், பிரிட்டனில் தொலைக்காட்சி மூலமாகவும் ஒளிபரப்பட்டது. பிரிட்டனில் மட்டும் 5 லட்சம் பேர் போட்டிகளை கண்டு ரசித்தனர். | நவீன தொழில்நுட்பத்தின் மூலம் 4 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கண்டு ரசிக்க உள்ளனர். |
| இருப்பிடம் | ஒலிம்பிக் கிராமம் இல்லாததால் வீரர்கள் தங்கும் விடுதிகளிலும், ஓட்டலிலும் தங்கவைக்கப்பட்டனர். பார்வையாளர்களுக்கு நீச்சல்குளம், அரங்கம், உடற்பயிற்சி கூடம், தங்கும் வசதியும் வழங்கப்பட்டது. | பார்வையாளர்கள் Middlesex and Buckinghamshire நாட்டிலுள்ள பள்ளிகளிலும் RAF இல்லங்களிலும் தங்க வைக்கப்பட்டனர். பெண்கள் வசதியான ஓட்டல்களிலும் இல்லங்களிலும் தங்க வைக்கப்பட்டனர். | ஒலிம்பிக் கிராமமானது யூரோ 712 மில்லியன் யூரோ செலவில் அமைக்கப்பட்டுள்ளது. 2,818 அடுக்குமாடி குடியிருப்புகளுடன் அனைத்து தொழில்நுட்ப வசதியுடன் தயாராகியுள்ளது. |
| சர்ச்சை  | பின்னிஷ் விளையாட்டு வீரர்கள் ரஷ்யாவின் கொடியை ஏந்தி செல்ல விரும்பவில்லை. பிரிட்டன் விளையாட்டு வீரர்கள் நீக்கப்பட்டு ஐரீஷ் வீரர்கள் அவர்களுக்கு பதிலாக சேர்க்கப்பட்டனர். 400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் அமெரிக்காவை சேர்ந்த இரண்டு வீரர்கள் பங்கு பெற்றதால் அவர்களது வெற்றி நிராகரிக்கப்பட்டது. இந்த போட்டியில் பிரிட்டனைச் சேர்ந்த Wyndham Halswelle வெற்றி பெற்றவராக கருதப்பட்டார். | இரண்டாம் உலகப் போர் முடிவடைந்ததை தொடர்ந்து 12 ஆண்டுகளுக்கு பிறகு சோவியத் யூனியனைச் சேர்ந்த ஜேர்மனியும், ரஷ்யாவும் ஒலிம்பிக் போட்டிக்கு அழைக்கப்பட்டன. செக்கோஸ்லோவாக்கியா சர்வதேச ஜிம்னாஸ்டிக்ஸ் கூட்டமைப்பின் தலைவரான Marie Provaznikova சோவியத் நாட்டில் பாதுகாப்பு இல்லை என கருதி ஒலிம்பிக் நடைபெற்ற கிராமத்தில் தங்கியிருந்தார். | 2008ஆம் ஆண்டு பெல்ஜியத்தின் ஒலிம்பிக் தீபம் இடையூறாக இருப்பதாக ஜப்பான் மனித உரிமைக்குழு தெரிவித்தது. இதன் முக்கிய சர்ச்சை என்னவெனில், லண்டனில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டியின் பாதுகாப்பு பணிக்காக ஒப்பந்தம் செய்யப்பட்ட தன்னார்வ ஊழியர்களில் 7500 பேர் மட்டுமே தரமுடிந்தது என்றும், மீதமுள்ள 3500 தரமுடியவில்லை என்றும் G4S தெரிவித்துள்ளது. |
| pint of beer ன் விலை? | 2d (pence) | 6d (pence) | £3.17 |

# நிலைமாறும் CONDOLAND

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 371

எம்மவர்களின் அனேகர் யூலை 1983 இற்கு பின்பாகவே கனடா நோக்கி வந்தனர் என்பது உலகறிந்த உண்மை. என்னுடைய நண்பர் பலர் அப்பொழுது கொழும்பில் தொழில்புரிந்து கொண்டு இருந்தார்கள். அவர்களில் சிலர் இலகுவாக ரொறொன்ரோ வரக்கூடியதாக இருந்தது. இலங்கையில் நிலைமை மோசமடைய குறிப்பாக 1990 களிற்கு பின்னர் மிகப்பெரிய அளவில் கனடாவிற்கு வரத்தொடங்கினர். இது ஒரு சரித்திரமாக பதிந்து விட்டது தமிழர் வாழ்வில்.



1986 களிற்கு முன்பாக ரொறொன்ரோவில் அதியுயர் அடுக்குமாடிக்கட்டிடத்தில் மக்கள் வாழ்வது குறைவாகவே காணப்பட்டது என்பது பலர் அறிந்திரா உண்மை. 1986 இற்கு முன்பாக GTA (Greater Toronto Area) பகுதியில் 146 அடுக்குமாடிக் கொண்டோ கட்டிங்களே காணப்பட்டன.

அப்பொழுது நகரப்புறங்கள் அழகாக தூய்மையாக, நிழல்தரும் ஒழுங்கான நேர்கோடான மரங்களின் அமைப்புகள், பார்ப்பதற்கு ரசனைதருவதாகக் காணப்பட்டன. ஒப்பீட்டளவில் அமைதியாக காணப்பட்ட காலம் எனக் கொள்ளலாம். தனிவீடுகள், இரண்டுசேர்ந்த வீடுகள் பெரிய வளைவுடன் காட்சியளித்தன. பாடசாலைகள், நூலகங்கள், வாசிகசாலைகள் யாவற்றையும் இலகுவாக சென்றடையக் கூடியதாக அமைக்கப்பட்டு இருந்தன. வாகன நெருக்கடிகள் இப்பொழுதுள்ள மாதிரி இருக்கவில்லை எனவும் கொள்ளலாம்.

இன்று, ரொறொன்ரோவின் எல்லைப் பகுதியில் மட்டும் 520 அடுக்குமாடிக் கட்டிடத்தொகுதி கட்டி முடிக்கப்பட்டு மக்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். சராசரியாக 159 அடுக்குமனைகள் ஒவ்வொரு அடுக்குமாடிக் கட்டித்திலும் உள்ளன. மொத்தமாக 82,680 பேர் அடுக்கு மாடி மனைகளில் மக்கள் வாழ்கின்றனர்.

இப்பொழுது (யூலை 2012) மேலும் 162, அடுக்குமாடிக் கட்டிடத்தொகுதியில் கட்டப்பட்டுக் கொண்டு அல்லது விற்பமை செய்து கொண்டு இருக்கின்றனர். இப்பொழுது கட்டப்படுபவை முந்தைய காலத்தில் கட்டப்பட்டதை விட உயரமாகக் கட்டப்படுகின்றன. இன்றைய அடுக்கு மாடிக்கட்டித்தின் சராசரி அடுக்குமாடி மனைகள் 276 ஆகக் காணப்படுகின்றது. எனவே கட்டப்பட்டும், விற்பனையில் இருந்து கொண்டு இருக்கும் மொத்த அடுக்குமாடி மனைகளின் எண்ணிக்கை (162 x 276 = 44,712) ஆக உள்ளன.


இன்று வடஅமெரிக்காவில் ரொறொன்ரோவிலேயே அதிகூடிய அடுக்குமாடி மனைக் கட்டிடங்கள் கட்டப்படுகின்றன. ரொறொன்ரோவில் வாழும் மக்கள் அதிகரித்த வருமானம், பிந்திய வயதிலான திருமணங்கள், தனித்து வாழ்வது, இருவர் சேர்ந்து வாழ்வது, அழகான உடுப்புகள் அணிவது, இரவு களியாட்டங்களில் நேரத்தை போக்குவது, வீடு, மனையை பராமரிப்பதற்கு நேரம் செலுத்துவதை தவிர்ப்பது போன்ற பல காரணங்கள் புதிய தலைமுறையை அடுக்குமாடி மனை வாழ்வைத் தெரிவு செய்ய வைக்கின்றன. இதனாலேயே இவ்வாறு அதிகரித்த அடுக்குமாடி மனைகள் தொடர்ந்து நிர்மாணம் செய்யும்


தொடர்ச்சி 14ஆம் பக்கம்

HomeLife/GTA
Realty Inc. Brokerage* *Independently Owned & Operated

Raja Mahendran, P. Eng.
Broker/Owner
"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

CONDO FOR RENT
KENNEDY & HWY 401
1 Bedroom condo for rent.
1 Parking.
Newer building.
Easy access. Rent $1200+


CONDO. FOR SALE
KENNEDY & HWY 401

1+ Den condo.
Close to HWY 401, mall.
Asking Price $259,000

OFFICE SPACE
FOR LEASE

1st Floor 745sq.ft.
Embassy plaza.
2nd floor. 2200 Sq.ft
Resonable rent.

SPACE FOR SALE
FINCH & MIDDLEFIELD
Close to main entrance
High traffic area.
Underground Parking
available.

COMMERCIAL / RETAIL
FOR SALE
FINCH & MIDLAND

4,672 Sq.ft.
Asking price
$799,900.
Available for
Medical office.

HOUSE FOR SALE
14TH & BOX GROVE

3 Bedroom house.
1760 Sq.ft. Hardwood
floor. Asking Price
$469,900

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969 & 145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

## ரொரன்ரோ நகரசபை எல்லைக்குட்பட்ட தேவைகள், பிரச்சினைகளுக்கு இலவசமாக தீர்வு தேவையா?

# அழையுங்கள் 311 தொலைபேசி இலக்கம்

## கனடிய தகவல் தொடர் 177

ஒன்றிணைக்கப்பட்ட ரொறொன்ரோ நகர எல்லையினுள்

1. வாழ்பவர்கள்
2. வர்த்தகம் செய்பவர்கள் மற்றும் வர்த்தகம் ஆரம்பிக்க விரும்புவர்கள்
3. நகரத்திற்கு புதிதாக வருகை தந்தவர்கள்
4. நகரம் தொடர்பான தகவல்களை நகரத்திற்கு வெளியே இருந்து தொலைபேசியினூடாக அழைத்து அறியவிரும்புவர்கள்

(நகரத்திற்கு வெளியே இருந்து அறிய விரும்புபவர்கள் அழைக்க வேண்டியது 311 இலக்கம் அல்ல (416) - 392 - 2489 ஆகும்.

போன்றவை யாவரும் தங்களின் தேவைகள் பிரச்சினைகளுக்கு நகரசபை அதிகார வட்டத்தினுள் தீர்வு காண வேண்டுமாயின் அழைக்க வேண்டிய **ஒரே தொலைபேசி இலக்கம் - 311 என்பதாகும்.** மிக விரைவான பதில்கள் துரித கதியில் வழிகாட்டல்கள் யாவும் அற்புதமான முறையில் கிடைக்கும் என்பதனை அறிந்து கொண்டீர்களா?

சுமார் நூறு தொடர்பு நிலையங்கள் தற்போது நகரில் இயங்கிகொண்டுள்ளன.

1. ஒரு கிழமைக்கு சராசரி 48,000 அழைப்புக்களுக்கு தற்போது இந்நிலையங்கள் பதில் வழங்கிகொண்டு செயல்படுகின்றன.

அழைப்புக்கள் சம்பாஷணைகள் யாவும் ஒலிப்பதிவில் போவதால் அழைப்பு இலக்கம் - (Reference number) ஒன்று தருவார்கள். அதே இலக்கத்தினை குறிப்பிட்டு தங்கள் அழைப்பினை தொடர்ந்தும் இன்னொரு நாளில் தொடரலாம்.

2. இச்சேவை என்பது நகரசபையினால் இலவசமாகவே வழங்கப்படுகின்றது. கட்டணம் எதுவும் இச்சேவை வழங்கும் இடத்தில் சேவைகளுக்காக அறவிடப்படுவதில்லை.

3. மொழி என்பது ஒரு பிரச்சினையாக எவருக்கும் இருக்கமாட்டாது. பல்லின மக்கள் வசிக்கும் ரொறொன்ரோ நகரில் 180 மொழிகளில் சேவை வழங்குவார்கள். ஆங்கிலமொழியில் திறமையான பரிட்சயம் இல்லாத நம்மவர்கள் "ரமிழ்" (Tamil) என குறிப்பிட்டால் போதும். தமிழ் மொழியில் சேவை வழங்கும் உத்தியோகத்திற்கு இணைப்பு தொடர்புபடுத்தப்படும்.

ரொறொன்ரோ நகரசபையின் அதிகாரத்தினுள் உள்ள சேவைகளாக இருத்தல் வேண்டும். சில நேரங்களில் கனடா மத்திய அரசு, மாகாண அரசின் அதிகார எல்லைக்குள் உட்பட்ட சேவையாக இருந்தால் அந்தந்த பகுதிகளுடன் தொடர்பு கொள்ளுமாறு ஆலோசனை வழங்கலாம். ஆனால் ரொறொன்ரோ நகரசபையின் அதிகார வட்டத்தினுள் உள்ள பிரச்சினைகள் தேவைகளாக இருந்தால் அதனை தீர்ப்பதற்குரிய முழுமையான வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் இவ் அழைப்பின் போது கிடைக்கும்.

உதாரணமாக பொதுவாக ரொறொன்ரோவில் வசிக்கும் மக்களுக்கு பின்வரும் கேள்விகள் எழலாம்.

3 1 1
toronto at your service

1. எங்கள் பகுதியில் நாம் கட்டி வைக்கும் குப்பைகள், பொருட்கள் போன்றவற்றினை எப்போது எடுத்துச் செல்வார்கள்?

வெளியே வீச என வைத்த கட்டில், மெத்தை, குழியலறை உபகரணங்களை எதற்காக வெளியே வைத்தபோதும் எடுத்துச் செல்லப்படவில்லை.?

வெளியே வைத்த உபயோகமற்ற குளிர் சாதன பெட்டி, அடுப்பு, போன்றவற்றினை யார் வந்து எடுத்துச் செல்வார்கள்?

உபயோகமற்று குப்பையில் வீசும் உபகரணங்களை எந்த விதிகளின் அடிப்படையில் ரொறொன்ரோ நகரசபை எடுப்பது வழமையாகும்?

2. ரொறொன்ரோவின் தொடர்மாடிகளில் வாடகைக்கு குடியிருப்பவர்களின் தேவைகள் சரியாக நிறைவேற்றபடவில்லையெனில் அதனை எங்கு முறைப்பாடு செய்து நடவடிக்கை எடுப்பது?

3. ரொறொன்ரோ நகர சபை அதிகாரத்தினுள் இயங்கும் அம்புலன்ஸ், பொலிஸ், தீயணைப்பு படை பிரிவுகளின் சேவையில் அதாவது சந்தேகங்கள் முரண்பாடுகள் என வந்தால் அதனை எப்படி கையாள்வது?

4. தங்களின் வீடு என்ற ஒரு சொத்துக்காக செலுத்தும் நகரசபையின் வரியில் (Property Tax) நகரசபை செய்த மதிப்பீட்டில் சந்தேகமாய் உள்ளது. இதனால் அதிக பணம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளேன் போல் தெரிகின்றது. இதற்கு எப்படி தீர்வு காணலாம்?

5. அடுத்தவர் வளர்க்கும் நாய் ஒன்று தீடீர் என கடித்து விட்டால் எங்கே முறைப்பாடு செய்து? எப்படி நட்டஈடு பெறுவது?

தங்கள் வீடுகளுக்குள் சில இடங்களில் பிராணிகள் மிருகங்கள் உள்ளே வந்து விட்டால் அதனை அகற்ற முடியாத நிலமை ஏற்பட்டால் அடுத்து என்ன செய்வது?

பக்கத்து வீட்டு நாய் அடிக்கடி சத்தம் போட்டு குரைத்து நிம்மதியினை குழப்பினால் எங்கே முறைப்பாடு செய்வது?

6. ரொறொன்ரோ நகர எல்லைக்குள் வர்த்தகம் தொழில் செய்ய விரும்புவோர் அதற்குரிய அனுமதிப்பத்திரத்தை எங்கே? எப்படி பெறுவது?

7. நகரசபையினால் நடைமுறைப்படுத்தும் குழந்தைகள் பராமரிக்கும் நிலயங்களில் சேவைகளை எப்படி? எங்கே பெறுவது?

8. நகரசபையின் நீர் குழாய்களின் (City's sewer system) ஏற்படும் தாக்கங்கள் காரணமாக தங்கள் வீட்டு நீர் குழாய்களில் ஏதாவது வெடிப்புக்களை உருவாக்கி அது பெரும் பாதிப்பினை உருவாக்கினால் நகரசபையின் உதவியுடன் எவ்வாறு அதனை நிவர்த்தி செய்வது?

9. குறிப்பிட்ட துறைகளில் திறமையுள்ளவர்கள் உட்பட ரொறொன்ரோவில் வாழ்பவர்கள் பொதுவாக தொழில் ஒன்றினை தேடிப் பெற்றுக்கொள்ள விரும்பினால் அதனை எப்படி பெற்றுக்கொள்வது?

10 வருமானம் குறைந்தவர்கள் நகரசபையின் உதவியுடன் விலை மலிவான குடியிருப்புக்களை எங்கே தேடி எப்படி விண்ணப்பித்து பெற்றுக்கொள்வது?

வீடுகளில் ஆண்களினால் துன்புறுத்தப்படும் பெண்கள், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட நிலையில் துன்புறுத்தப்படும் பிள்ளைகள் புகலிட, வதிவிடம் எங்கே? எப்படி? தேடி பெறுவது?

11. தங்கள் வீட்டு எல்லைகளில் வேலி போடும் போது (Create the line of fence) பக்கத்து வீட்டுகாரனுடன் ஒரு உடன் படிக்கைக்கு வரமுடியவில்லை யானால் அதனை எப்படி தீர்ப்பது?

12. ரொறொன்ரோ நகர எல்லைக்குள் இயங்கும் நூலகங்கள் தொடர்பான



**சிவ. பஞ்சலிங்கம் B.Com.,**
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 10ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
**HomeLife/GTA Realty Inc.**
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

High Demand in Future
Big lots, Acre land
Bungalow
1, 2 Acres
HWY 48, Stouffville
New Market

**Daisy Mart**
Brand New
convenience store at Tim Hortons
North of Newmarket
at Leslie Main Road

10% profit appreciation
brand new homes
3,000 sqft.
only $5,000 deposit
February 2014 closing
Near HWY 400

**For Sale**
Markham & Ellesmere
3 Bedrooms Condo.
for sale

10 % down / commercial mortgage/ Private lenders
Antony P. Thangarajah
Mortgage Agent
Dir.: 416.457.0651
Tel./Fax: 416.431.5115

**Renovate and Sell**
Old detached
bungalow near
University of Toronto



Sell your home
# faster
and more **money**

| Skyridge/Keeler | Meadowvale/Sheppard | Townline/Taunton | Markham Rd /Denison St | Fincham Rd/16th Avenue |
|---|---|---|---|---|
|  $340,000 |  $369,900 |  $374,990 |  $409,900 |  $429,000 |
| 3 Bedrooms, 2 W Rooms | 3 Bedrooms, 3 W Room Hardwood Floor | 4 Bedrooms, 3 W Rooms | 4 Bedrooms, 3 W Rooms | 3 Bedrooms, 2 W Rooms Eat-In Kitchen |
| Hoover Park & Reeves Way | Brock/Tauton | 9th Line & Hoover Park | 9th Line/Highway 7 | Markham/Mcnicoll |
|  $459,000 |  $489,000 |  $498,000 |  $539,900 |  $539,900 |
| 3 Bedrooms, 3 W Rooms Gas Fireplace | 4 Bedrooms, 3 W Rooms Hardwood Floor | 3+1 Bedrooms, 3 W Rooms Hardwood, Ceramic Floors | 4 Bedrooms, 3 W Rooms Gas Fireplace | 3+1 Bedrooms, 4 W Rooms Hardwood Floor |
| Ellesmere/Meadowvale | 14th & Box Grove By-Pass | Castlemore / 9th Line | Steels Ave / Staines | Mccowan/16 Ave |
|  $549,000 |  $599,000 |  $624,900 |  $649,900 |  $769,000 |
| 4+1 Bedrooms, 4 W Rooms Hardwood Ceramic Floors | 3 Bedrooms, 3 W Rooms Hardwood ,Ceramic Floors | 4 Bedrooms,3 W Rooms Hardwood Floor | 4 Bedrooms, 4 W Rooms Ceramic Floor | 4 Bedrooms, 4 W Rooms Family Size Kitchen |

**When you list your home with Mike,you receive these Guarantees.**

Your home advertised 24 hours a day until it is sold

Your home advertised in full color prints ads every week until it is sold

Our team of specialists for the same price as hiring a single agent

**Your home sold in 30 days or we buy it**



RE/MAX

**Elaguppillai Srinathan (Mike) B.Sc**

Sales Representative

**Direct 416 - 276-1225**

Email: esrinathan@yahoo.com

KZG 647-200-5833

Ph1-7800 Woodbine Ave

Markham, ON L3R 2N7

Office: 905-470-9800

Fax: 905-470-7770

I can also assist you Mortgage financing, Home Inspection Real Estate lawyer

# ஒவ்வொரு...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

பெரியவர்களுக்கான சிகிச்சைகளோடு, இயற்கை பகுதியில் தினசிர நடை- பயணமும், உற்சாக விளையாட்டுகளும், பொழுதுபோக்கு அம்சங்களும் உள்ளடங்கும், இவ்வகுப்பு செய்வதற்கு ஈஷா யோகா செய்திருக்க வேண்டும். 7 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும்.

சிகிச்சை முறைகளில் சித்த மருத்துவம் பெரும்பான்மையாக இருப்பதற்கு சத்குரு அவர்கள் தரும் விளக்கம், 'சித்த மருத்துவம் ஆயுர்வேதத்தை காட்டிலும் சில ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்தது. இது மிக, மிக பழமையான மருத்துவமுறையாகும். இம்மருத்துவ முறையில் குறிப்பிட்ட சூழலில் வளர்க்கப் பட்ட மூலிகைகளை மட்டும் பயன்படுத்து கின்றனர். இதில் பலவாரியான மருந்து கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இவை ஒருவருடைய உடல் அமைப்பின் மூலத்தையே தொடவல்லவை. பொது வாக மருத்துவமுறைகள் நோயை மட்டுமே அணுகும், ஆனால் சித்த மருத்துவமுறையில் ஒருவரின் உடல் அமைப்பின் அடிப்படையையே தொட இயலும். ஏனென்றால் சற்றே பார்கையில் நோய் என்பது மனிதனால் உருவாக்கப் பட்டதே. பொதுவாக மருத்துவத்தில் மருத்துவர் உங்களுக்காக எல்லாம் செய்துவிடுவார். ஆனால் யோகாவில் நீங்கள் தான் எல்லாம் செய்ய வேண்டும். இப்படி இருக்கையில் பழமை வாய்ந்த யோகாவும் சித்தாவும் இணையும்போது ஆச்சரியப்படத்தக்க வகையில் பலனளிக்கின்றன. நம் அனுபவத்தில் மருத்துவரீதியாக கைவிடப் பட்டவர்களுக்கும் இந்த காம்பினேஷன் அதி அற்புதமாக வேலை செய்திருக்கிறது' என்கிறார்.

ரெஜீவினேஷன் வகுப்புகளை தவிர பொதுவாக ஆசிரமத்திற்கு வருவோரும் இம்மையத்தில் உள்ள வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம். வாக்- இன் மசாஜ் எனப்படும் வசதியையும் இங்கு வருவோர் பயன்படுத்திக் கொள்ளலாம். தங்கள் விருப்பப்படியோ அல்லது இங்கு தரப்படும் அறிவுறுத்தலின் படியோ ஒருவர் தெரிபிகளை செய்து கொள்ள முடியும். தங்கள் வருகையை முன்பதிவு செய்து கொள்வது மிக அவசியம்.

இங்கு வகுப்புகளில் கற்றுக் கொண்டதை தொடர்ச்சியாக செய்து வருவதன் மூலமும் வாழ்க்கை முறையை ஒரு சீராய் மாற்றி அமைத்துக் கொள்வதன் மூலமும் ஒருவருக்கு ஆரோக்கியம் என்பது எட்டா கனியாய் அல்லாமல் தினசரி வாழ்க்கையில் நிதர்சனம் ஆகும்.

வாருங்கள் இளைப்பாறுங்கள், உயிர்ப் படையுங்கள், புத்துணர்வு பெறுங்கள்.

# ரொறொன்ரோ...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

வளைவின் அடிமட்டத்தில் உள்ள தாவரச் சாடியில், மேற்படி அணிவளைவுகளுக்கு 'சுதந்திர அணிவளைவுகள்' என்று பெயர் சூட்டியதைக் குறித்து 1991 ஆவணி மாதம் (பேழின் சுவர்த் துண்டு ஒன்றில்) ஒரு கூற்று பொறிக்கப்பட்டது. பொறிக்கப்பட்ட கூற்று: சுதந்திரம் ஈட்டி, அதனைக் கட்டிக்காக்கப் போராடிய கனடியர் உட்பட்ட கோடிக் கணக்கான மக்களுக்கும், சுதந்திரம் இன்மையால் வருந்தி இறந்த பல கோடிக் கணக்கான மக்களுக்கும், ரொறன்ரோவாழ் மக்கள் இந்த அணிவளைவுகளை நேர்ந்தளிக்கி றார்கள். நாங்கள் புரிபவை அனைத்தும் அவர்கள் புரிந்தவை போலாகுக. சுதந்திரத்திலேயே மனித அகம் பூரிக்க முடியும். மனித சுதந்திர வேட்கையை எதிர்த்து எதுவுமே வென்று நிலைக்க முடியாது.

மரங்கள், தகவல் பொறிப்புகள் இட்டுச் செம்மைப்படுத்துவதற்காக, ரொறன்ரோவில் இயங்கும் இரு சேர்ச்சில் சமாசங்கள் நிதி திரட்டும் இயக்கத்தை ஆரம்பித்தன. ஆறு கனடிய மாகாணங்களைச் சேர்ந்த மக்களிட மிருந்து நன்கொடைகள் கிடைக்கப்பெற்றன. 2004 யூன் 6-ம் திகதி மாநகராதிபதி டேவிட் மிலர் இதனை மீள நேர்ந்தளித்தார்.

மாநகர சுதந்திரம் என்பது மரபுசார்ந்த ஓர் அடையாளப் படைச்சடங்கு. அப்பொழுது ஒருவர் அல்லது ஒரு படையணியினர் இம்மாநகரத்துள் அணிவகுத்து வர அனுமதி அளிக்கப்படும். தற்காலத்தில் வீரதீரப் பணியைக் கௌரவிப்பதற்கே இவ்வாறு செய்யப்படும். அயலில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்கள் ரொறன்ரோவில் அமைந்துள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்கள் இரண்டைப் பார்ப்பதற்கு நேதன் பிலிப்ஸ் சதுக்கம் ஒரு சிறந்த இடம். கிழக்கே பார்த்தால், பழைய மாநகர மண்டபத்தை (Old City Hall) காணலாம். அதுவே இன்றைய மாநகர மண்டபத்தின் முன்னோடி. ஈ.ஜே.லெனொ-க்ஸ் (E.J. Lennox) என்பவரால் வடிவமைக்கப்பட்ட பழைய மாநகர மண்டபம் 1899-ம் ஆண்டு திறந்துவைக்கப்பட்டது. இப்பொழுது அங்கு மாகாண நீதிமன்றுகள் இயங்கி வருகின்றன. மேற்கே பார்த்தால், ஒஸ்குட் மண்டபத்தை (Osgoode Hall) காண்பீர்கள். 170 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சட்டவியற் சின்னமாக அது விளங்கி வந்துள்ளது. மேல் கனடா சட்ட சமாசம் (Law Society of Upper Canada) மேல் நீதிமன்று (Superior Court Of Justice), ஒன்ராறியோ மேன்முறையீட்டு நீதிமன்று (Ontario's Court of Appeal) என்பன அங்கு இயங்கி வருகின்றன.



## சேர்ச்சில் சிலை

(நேதன் பிலிப்ஸ் சதுக்கத்தின் தென்மேற்கில் உள்ள புற்றரையில் அமைக்கப்பட்டுள்ளது)

இரண்டாம் உலகப் போரின்பொழுது பிரித்தானிய பிரதம அமைச்சராக விளங்கிய வின்ஸ்டன் சேர்ச்சில் அவர்களுக்கே (Sir Winston Churchill) முதன்முதலாக ரொறன்ரோ மாநகரத்தின் சுதந்திர அணிவகுப்பு மரியாதை அளிக்கும் எண்ணத்தை மாநகராதிபதி நேதன் பிலிப்ஸ் 1958-ல் முன்வைத்தார். ஹென்றி ஜாக்மன் (Henry Jackman) அவர்களும், ஜாக்மன் குடும்பமும் தயாள சிந்தையுடன் அளித்த நிதியுதவி கொண்டு, ஆஸ்கார் நீமோன் (Oscar Nemon) எழுப்பிய சேர்ச்சில் சிலை 1977-ல் திரைநீக்கம் செய்துவைக்கப்பட்டது. திரைநீக்கத்தின் 25-வது ஆண்டுநிறைவின் பொழுது, சிலையைச் சுற்றி வாங்குகள்,

# அழையுங்கள்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

தகவல்கள்?

13. நகர சபையினால் வழங்கப்படும் முதியோருக்கான சேவைகளை எங்கே? எப்படி பெறலாம்?




15. ரொறொன்ரோ நகரத்திற்கு உல்லாச பிரயாணியாக வருகை தந்தவர் தேவையான தகவல்களை எப்படி பெறுவது? எங்கேயெல்லாம் சுற்றி பார்க்கலாம்? என்ற விபரங்களை வழங்கும் தகவல் இடம் எது?

16. தங்கள் வீட்டு வளவுகளில் மரங்கள் ஏதாவது நாட்ட விரும்பினால் சில இடங்களில் நகரசபையே அதனை இலவசமாக செய்துவிடும். வீட்டின் முன்னால் உள்ள மரங்களை அகற்ற வேண்டுமானாலும் அது நகரசபையின் எல்லைக்குள் இருந்து அதில் தாங்கள் அவர்களின் அனுமதியின்றி கை வைத்தால் நட்டஈடு கொடுக்க வேண்டி வரும்

இத்தகைய விடயங்களில் எழும் கேள்விகளுக்கு எங்கே எப்படி விடை தேடுவது?

ரொறொன்ரோ போக்குவரத்து சேவை தொடர்பான தகவல்களை எங்கே எப்படி பெறுவது?

மேற்குறிப்பிட்டவை உதாரணத்திற்காக ஒரு குறிப்பிட்ட கேள்விகள் மட்டுமே (Sample Questions) இப்படி பல ஆயிரக்கணக்கான கேள்விகள் எழலாம்.

இயன்றவரை சரியாக பதில்களும் வழிகாட்டல்களும் வழங்க என நகரசபை பல மில்லியன் டொலர்கள் செலவில் தகவல் பிரிவினை ஏற்படுத்தியுள்ளது. இலகுவான முறையில் தகவல்களை பெற்று ஒவ்வொருவருக்கும் உள்ள தேவைகள், பிரச்சினைகளுக்கு இலகுவாக தீர்வு காணுங்கள். **அழைக்க வேண்டியது இலகுவான ஒரு தொலை பேசி இலக்கம் - 311**

***பின் குறிப்பு*** *கனடாவின் ஏனைய நகர சபைகளிடம் இத்தகைய சேவைகள் இருக்கலாம். அதற்கு அந்தந்த நகரசபை பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு அறிந்து கொள்ளலாம்.*

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling

Relocation Service
Ottawa> > > < < < GTA



நந்தா ஐயாத்துரை

Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# முதியோர் பற்றிய ஆலோசனைகள் 'சத்யமேவ ஜெயதே'



விஜய் தொலைகாட்சியில் 'சத்யமேவ ஜெயதே' என ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சி ஒன்று எம் சிந்தையைத் தொட்டது. அந்த அளவுக்கு நாம் போகாவிட்டாலும் சிலபல யோசனைகளை நாமும் கடைப்பிடிக்க லாம் போல். சத்யமேவ ஜெயதே நிகழ்ச்சி பெரும்பாலும் வட இந்திய பகுதி ஆய்வுக்கு எடுக்கப்பட்ட இடமாகும். முன்பு அறுபது அறுபத்தைந்து வயதுக்குள் பெரும்பாலான மக்கள் இறப்பினைச் சந்தித்து விடுகின்றனர். தற்காலத்தில் உணவுமுறை, வைத்திய முன்னேற்றம், சுகாதார வாழ்வு போன்றவற்றால் வாழ்க்கை தொண்ணூறு வயதை எட்டி நிற்கின்றது.

பெற்றோரின் அனுசரணையுடன் வாழ்க்கை முப்பது வயதுவரை எனின், தமது வாழ்க்கை பிள்ளை வளர்ப்பு, சேமிப்பு, உத்தியோகம் எனப் போய் விடும். 60, 65 வயதோடு உழைப்பு ஊதியமும் நின்று விட ஓய்வு தொடங்கும். பிள்ளைகளுக்கு திருமணம் அவர்களின் குழந்தைகளுக் கான பரிசு எனத் தன் சேமிப்பில் வாங்கிய காணி, பூமி, வீடு என்பனவற்றை எழுதியும் கொடுத்தாயிற்று. அறுபத்தைந்து வயதில் இருந்து உலகத்தைத் துறக்கும் காலம் வரை ஏறக்குறைய முப்பது வருடங்கள்வரை யாரை நம்பி வாழ்வது? ஓய்வூதியம் சிலருக்கு மாத்திரம் வரும். அதுவும் பிள்ளைகளின் திருமணங்கள் போன்றவற்றிற்குப் பட்ட கடன் அடைக்க வேண்டும். அத்தியாவசிய தேவைகளுக்கு போதுமான அரசாங்கத்தின் முதியோர் பாதுகாப்புப் பணம் சிலருக்கு கிடைக்கக் கூடும். பிள்ளைகள் தம்மைப் பார்ப்பார்கள் தானே எனத் தம்பெயரில் உள்ள அசையும் அசையாச் சொத்துக்களை தேவை கருதியோ பெருமை சேர்க்கவோ அவர்களுக்கு எழுதி வைத்து விடுவார்கள்.

தொப்புள் கொடி உறவில்லாத மருமகனோ, மருமகளோ வந்து சேர்ந்தால் பெற்றோர் பாடு வீட்டைவிட்டு வெளியேற வேண்டிய நிலை வந்து சேரும். எல்லா சினிமாக்களிலும் இவை அபரிதமாகவே காணப்படுகின்றன. நிஜ வாழ்விலும் அதுவே நிகழ்கிறது. இதன் முடிவு பெற்றோர் வெளியேற்றம் அல்லது பிள்ளைகள் விவாகரத்து.

கணவனை இழந்த அல்லது மனைவியை இழந்த சோடிகள் தட்டந்தனியே மாடிக் குடியிருப்புகள், வைத்திய பாதுகாப்புக் குரிய கட்டடங்களின் அறைகளில் தனியே வாழ்கின்றனர். தனிமை அவர்களை வாட்டுகின்றன. துணையொன்றின்றி மனஅழுத்தத்துக்குள்ளாகின்றனர். ஒரு துணை கூடவே இருந்தால் பேச்சுத்துணை இருப்பதோடு ஒருவருக்கொருவர் உதவியாகவும் இருப்பர்.

கனடாவில் தனிக்குடும்ப வாழ்க்கைக்கே முன்னிடம் கொடுப்பதால் முதியோர் தாமாகவே தனிக்கூடு சென்று விடுகின்றனர். வாழ்க்கையின் இணைப்பைத் தவறவிட்டாலும் தனிமை மற்றவரைக் கொல்லுகிறது. வாயுள்ளவன் பிழைத்துக் கொள்வான் என்பது போல பிறமுதியோர்களின் நட்பு முதியோர் பொழுதுபோக்கு மையங்கள் என அவர்களது மனப்பாங்கு விரிவடைந்தாலும் அந்த வெறுமையை உணராதவரிலர்.

எம்மவர்களுள் முதியோர் பால் வேறுபாடு காட்டாது சிநேகபூர்வமாகப் பழகுவார்கள். ஆயினும் சிறிது நெருங்கிப் பழகினால் எலும்பில்லாத நாக்கால் வம்பு தும்பு பேசப்படும். அதற்குப் பயந்து கூட்டத்தில் கோவிந்தாவே தவிர தம்முள் நட்பையோ, சகோதரத்துவத்தையோ மேற்கொள்ள பின்னிற்பர்.

வட இந்தியாவில் எமக்குக் காட்டப்பட்ட முதியோர் அமைப்புகளில் இத்தகைய தனித்த வாழ்வு வாழும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் தமக்குள் ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்கிறார் கள். தாரமிழந்தவன் ஒருவன் விதவையை விவாகம் புரிந்தோ அல்லது சேர்ந்தோ ஒரு வீட்டில் வாழ்கிறான். அதனால் தாம் இழந்த தனிமையையும் மன அழுத்தத்தை யும் விலக்கி ஒருவருக்கொருவர் அன்பாக ஆதரவாக உதவியாக வாழ்கிறார்கள் எனவும் அதனால் முன்பைவிட ஆரோக்கியமாகவும், உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வதாகக் கூறுகின்றார். தமது மனைவி/கணவன், பிள்ளைகள், உறவினர் போன்றோருக் கான கடமைகள், பொறுப்புகள் காரணமாகத் தாம் தம் ஆற்றல்களைப் பிரயோகித்துத் தம் விருப்பமான தம் விசேட ஆற்றல்களை வெளிக்கொண்டுவர இயலாதிருந்திருக்கிறார்கள்.

உதாரணமாக தீர்த்த யாத்திரை, உல்லாசப்பிரயாணம், தனி இடத்தில் போயிருந்து காவியமோ, நாவலோ எழுதுதல், பால்ய நண்பர்களைச் சந்தித்து உரையாடுதல் போன்றவை. இவை குடும்பவாழ்வில் நிகழ்ந்தாலும் கூட, தம் குடும்பங்களுடனேயே நிகழும். ஆனால் அத்தருணங்களிலும் தன்பொறுப்புக்களை உணர்ந்திருந்தபடியும், செய்தபடியுமே நிகழும். முதுமையெய்தவும், பொறுப்புகள் ஒவ்வொன்றாக இளையதலைமுறை ஏற்றுக்கொள்ள வீடு பற்றிய ஏக்கங்கள் கவலைகள் பொறுப்புக்கள் ஆகிய சுமைக- ளை இறக்கி வைத்த ஓய்வுநிலை. இப்போது தமது சொந்த விருப்புக்களை நிறைவேற்றும் உல்லாச மனோநிலை வந்துவிடும். ஒருசிலர் மட்டும் தம் தலைமை பறிபோய் விட்டதே எனக் கவலைப்பட்டு வீணாக வீட்டு விடயங்களில் தலையிட்டு அவமதிப்பு ஏற்பட ஆணவம், அதிகாரம் நிலைநாட்ட முடியவில்லையே என நிம்மதி இழப்பர்.

புத்தியுள்ளவர்களோ தம்வாழ்க்கைப் பாதையை திசைதிருப்பி தம் நிறைவேற்ற முடியாத தனிப்பட்ட விருப்புகளை நிறை வேற்ற முயல்வர். தம்பாடசாலை நண்பர், தம்முன்னாள் காதலன், காதலிகள் பற்றிய விபரங்கள் - சந்திக்க முயலுதல், தாம் எழுத நினைத்த காவியம், நாவல்

தொடர்ச்சி 26ஆம் பக்கம்


**ஜூன் 14, 2010 க்கு முன்பு நிகழ்ந்த ஓர் குடும்ப உறுப்பினரின் இழப்பு, பிரேத ஆய்வாளரின் புலனாய்வு மற்றும் பிரேதப் பரிசோதனையில் விளைவை ஏற்படுத்தியதா?**

அப்படியெனில், பிரேதப் பரிசோதனைக்குப் பிறகு ஓர் உறுப்பு கூடுதல் பரிசோதனைக்காக எடுத்து வைக்கப்பட்டிருப்பது சாத்தியமே.

மரணங்கள் புலனாய்வு செய்யப்படும்போது, நோய்க்குறியியல் வல்லுநர்கள் சில சமயங்களில் மரணத்திற்கான காரணத்தைத் தீர்மானிப்பதில் உதவுவதற்காக ஓர் உறுப்பினைத் தக்க வைக்கின்றார்.

கடந்த காலத்தில், குடும்ப உறுப்பினர்களுக்கு, ஓர் உறுப்பு தக்கவைக்கப்பட்டிருப்பது அறிவிக்கப்படாமல் இருந்திருக்கலாம். இப்போது, ஓர் உறுப்பு தக்க வைக்கப்பட்டிருக்கும்போது, அது குடும்பத்தினருக்கு வழக்கமாக அறிவிக்கப்படுகின்றது, மேலும் அந்த உறுப்பின் அப்புறப்படுத்தலைப் பற்றி அவர்களின் விருப்பத்தை சாத்தியமான இடங்களில் கேட்டுப் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

ஒண்டாரியோ ஃபொரென்ஸிக் பாத்தாலஜி சர்வீஸானது, பிரேதப் புலனாய்வையும் பிரே- தப் பரிசோதனையையும் விளைவித்த, ஜூன் 14, 2010க்கு முந்தைய குடும்ப உறுப்பினரின் இழப்பை எதிர்கொண்ட அனைவரையும் நாடி வருகின்றது.

**நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் தனிப்பட்ட பிரதிநிதிகள் (அதாவது ஓர் ஆதனத்தை நிர்வகிக்கும் பொறுப்பில் உள்ளவர்கள்), தங்களின் வழக்குகளில் ஓர் உறுப்பு தக்க வைக்கப்பட்டிருக்கின்றதா என்பதை அறிய எங்களைத் தொடர்பு கொள்ள அழைக்கப்படுகின்றனர்.**

பாதிக்கப்பட குடும்பங்களும் தனிப்பட்ட பிரதிநிதிகளும் உறுப்பானது எரிப்பதற்கோ அல்லது புதைப்பதற்கோ ஓர் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட கோரிக்கை விடுக்கலாம். இதற்கு ஆகும் செலவுகள் ஒண்டாரியோ ஃபொரென்ஸிக் பாத்தாலஜி சர்வீஸ் மற்றும் முதன்மை பிரேத ஆய்வாளர் அலுவலகத்தால் ஏற்றுக் கொள்ளப்படும்.

ஜூன் 14, 2010 க்கு முன்பு தக்கவைக்கப்பட்ட உறுப்புகள் முறையே ஜூன் 14, 2013 முதல் அப்புறப்படுத்தப்படுத்த துவங்கப்படும். இது பிரேதங்கள் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒழுங்குமுறைகளோடு இணங்கியே நடைபெறும்.

**ஓர் இலவச தொலைபேசி எண் அமைக்கப்பட்டுள்ளது. எங்களை 1-855-564-4122 என்ற எண்ணில் எங்களை தொடர்பு கொள்ளலாம் அல்லது எங்களது இணையதளமான Ontario.ca/OrganRetention ஐ காணலாம்.**

Ontario Forensic
Pathology Service
*OrganRetention@Ontario.ca*
26 Grenville Street
Toronto, ON
M7A 2G9

Ontario.ca/OrganRetention • 1-855-564-4122

ஒண்டாரியோ அரசால் கட்டணம் செலுத்தப்படும்.

Ontario

# Universal Community Help

## 1. EXPRESS METRO HOUSING

வருமானம் குறைந்தவர்களுக்கும், Shelter இல் வசிப்பவர்களுக்கும், முதியவர்கள், தனியே வாழ்பவர்கள், தனிப்பெற்றோர் புதிய குடிவரவாளர்கள் அனைவருக்கும் கூடிய விரைவில் 4 கிழமை தொடக்கம் 3 மாதங்களில் Subsidized House பெற்றுத்தருவோம்.

## 2. WALKER OR WHEEL CHAIR OR SCOOTE

இதனுடன் Washroom உட்பட 15,000 டொலர் பெறுமதியான பொருட்களை குறைந்தது 3 மாதத்தில் பெற்றுத்தருவோம். WALFARE OR O.D.S POR WSIB OR PENSION இருப்பவர்கள் உடனே விண்ணப்பிக்கவும். அரச அனுமதி பெற்ற Occupational Therapist ஒருவர் எம்முடன் இணைந்து கடமையாற்றுகிறார். June 7, 8, 16, 18, 23, 25 ஆகிய திகதிகளில் விசேட நேர்முகத் தேர்வுகள் உண்டு.

## 3. FOOT CARE CLINIC

கால்களில் பல்வேறு காரணங்களால் பாதணிகள் பாவிக்க முடியாமல் இருப்பவர்களுக்கு Free Medicated Shoes 3 மாதங்களில் பெற்றுத் தருவோம்.

4. இலங்கை, இந்தியத் தூதரகங்கள் ஊடாக உங்களுக்குத் தேவையான கடவுச்சீட்டு, அடையாள அட்டை, பிறப்பு, இறப்பு, விவாக மரண விவாகரத்துப் பத்திரங்கள் பெற்றுக் கொடுக்கப்படும்.

5. கனடியக் குடிவரவு சட்டப்படி Sponcer செய்து தாமதமாக இருப்பவர்களுக்கு துரிதப்படுத்தி வரவசதி செய்து கொடுக்கப்படும். இலங்கை இந்திய பாகிஸ்தானியர்களும் தொடர்பு கொள்ளலாம்.

6. Separation ஆக இருப்பவர்கள் அனைவர்க்கும் Quick Divorce Certificate வசதி செய்து தரப்படும். இருவரும் தனித்தனி அல்லது இருவரும் முன் கூட்டியே அனுமதி பெற்று வரவும்.

7. எமது பயிற்சி பெற்ற வைத்தியர்கள் மூலம் Special Diet Allowance Form அத்தாட்சிப்படுத்திக் கொடுக்கப்படும்.

8. நீண்டகாலமாக Tax Return பெற்றுக் கொள்ளாமல் தவறவிட்டவர்கள் Special Re Tax Return Service மூலம் Revenue Canada பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும்.

## 9. தானம் - தர்மம் - தொண்டு

புதிய குடிவரவாளர்களே ***Vegetarian Food Bank or U.C.H or Thiruchchenchdoor Murugan Temple*** தொண்டர்களுடன் இணைந்து கொள்வதன் மூலம் அரச உதவியாக 6 மாதப் பணமாக 600 டொலரையும் முதல் மாதம் மேலதிகமாக 250 டொலரையும் பெற்றுக் கொள்ளலாம்.

மேற்குறிப்பிட்டுள்ள சகல சேவைகளுக்கும் ஆகக் குறைந்த அலுவலகக் கட்டணம் அறவிடப்படும்.

***10. Food handling certification certified food handle training.***

***11. UCH Legal Clinic***

**தொடர்புகளுக்கு: *416.744.3011***

***Office Hours -*** 11.00 Am to 4.00 Pm
***Monday to Sunday -*** 416.744.4357
12.00pm to 10.00 pm
***Monday to Sunday -*** 416.554.5040
9.00 am to 9.00 pm
***Special hot line***

***Unite - B - 5***
***2370 Midland ave***
***Midland & Sheppard***
***M1S 5C6***

***Unit - E***
***3005 Isilington Ave.***
***Steel & Isilingtion***
***M9L 2K9***

# நிலையான வெற்றி

## ஓடும் நீர் உறைவதில்லை 147

மனிதர்கள் வேறுபட்டவர்கள். மனித மனங்களின் வேறுபாடு இதற்கான அடிப்படையாகின்றது. பெற்றோர், பிறந்து வாழும் சூழல், நேரடியாகவும், மறைமுக-மாகவும் செலவாக்குச் செலுத்தும் உற்றார், சுற்றார், நண்பர்கள், பகைவர்கள், வீட்டில் வாழும் நாய், பூனை, ஆடு, மாடு என நாம் நாளாந்தம் தொடர்ப்பு கொள்ளும் அத்தனையும் எமது மனநிலையில் சாதகமான அல்லது பாதகமான உணர்வுகளை உருவாக்கி அதன் மூலம் நமது சிந்தனை, சொல், செயல் என்பவற்றை நெறிப்படுத்து கின்றன. நாளாந்தம் நிகழும் சம்பவங்களின் தொகுப்புகள் நமது வாழ்வியல் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்தத் தாக்கங்களின் பிரதிபலிப்புகளாக நமது நடத்தைகளும் எதிர்பார்ப்புக்களும் அமைகின்றன.

மனிதன் - மனத்தின் தனித்தன்மையாளன் - ஒவ்வொருவரும் மற்றவரில் இருந்து மனோபாவ ரீதியில் வேறுபட்டவர்களாக இருப்பினும் ஒரு விடயத்தில் மட்டும் ஒற்றுமை கொண்டவர்களாக ஒருமைப்பாடுடையவர் களாக அமைகிறார்கள். இந்த ஒற்றுமைக்கான விடயம் ஆளுக்காள் வேறுபட்டாலும் அதன் அடிப்படைத்தன்மை ஒன்றே ஒன்றுதான். அதாவது மனிதன் ஒவ்வொருவரும் வெற்றியாளராக வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இருந்து வேறுபடுவதில்லை. ஈடுபடும் விடயம் எதுவாக இருந்தாலும் அதில் வெற்றியடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அடிப்படையாக அமைகின்றது. இந்த எதிர்பார்ப்புத்தான் ஒரு செயற்பாட்டின் தன்மை நேர்த்தியானதா அல்லது எதிர்மறையானதா என்பதைக்கூடக் கருத்தில் கொள்ளலாமல் வெற்றியடைய வேண்டும் என்ற மனோநிலையை உருவாக்குகிறது.

இங்கே வெற்றியடைய வேண்டும் என்ற "எதிர்பார்ப்பு" எனக் குறிப்பிடப்பட்டிருப்பதை மிகக் கூர்மையாக அவதானிக்க வேண்டும். ஏனெனில் அதிபெரும்பான்மையானவர்களது முயற்சிகளின் முடிவுகள் எதிர்பார்ப்புக்களுக்கு எதிர் மாறானதாகவோ அல்லது தொடர்ந்தும் எதிர்பார்ப்புக்களாகவோ அமைவதை அவதானிக்கலாம். ஏனெனில் வெற்றியின் அடிப்படை என்ன என்ற விடயத்தில் ஒவ்வொரு வரும் வெவ்வேறான கருத்தைக் கொண்டிருப்பதும் அல்லது அடிப்படை என்று ஒன்றும் இல்லை அது தானாக நிகழ்வது என்று கருதுவதும் காரணங்களாக அமைகின்றன.

வெற்றியற்றிய எதிர்பார்ப்பில் மிகவும் வேடிக்கையான விடயம் என்னவெனில், காலம் காலமாகப் பலரால் முயற்சி செய்யப்பட்டு அதன் எதிர்பார்ப்பில் எதிர்மாறான பெறுபேறு களைப் பெற்றவர்களது வாழ்வியல் அநுபவங்களை அறிந்தும் அதனைப் புறக்கணித்துவிட்டு அதே முயற்சியில் அதே பாணியில் பலர் ஈடுபடுவதுதான். உதாரணமாக ஒருவருக்கு எவ்வளவு தான் திறமையும் உடல்




வலிமையும் இருந்தாலும் இன்னொருவருக்குக் கீழே ஒரு தொழிலாளி என்ற நிலையில் தொழிற்படுகின்ற ஒருவர் பொருளாதார ரீதியில் சுயபூர்த்தியைப் பெற்றதாக அதாவது ஒரு கோடீஸ்வரராகியதாக வரலாற்றில் இல்லை. அதுமட்டுமன்றி வைத்தியர்கள், பொறியிலாளர் கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள் என்ற வகையில் தமது கல்வியை மேற்கொண்டு அதில் அதிதிறமைச்சித்தி பெற்று ஒரு அறிவியற் புரட்சியை உருவாக்கிவிட்டு இதுவே வெற்றியின் இரகசியம் என்று விறுமாப்படைந்து வேறொருவருக்குக் கீழே வேலைக்கமர்த்தப் பட்டு விரக்தியின் விளிம்பில் ஊசலாடிக் கொண்டு உயிர்வாழும் மனிதர்கள் எண்ணில் அடங்காதவர்கள். இதில் மிகவும் வேடிக்கை யான விடயம் என்னவெனில் அவர்களது குடும்பத்திலேயே யாரோ ஒருவர் இந்தப் பரிதாப நிலையில் இருப்பதை நன்றாக அறிந்தும் அதை அப்படியே தமக்கு நடைமுறைப்படுத்துவதற்கு முன்னிற்பது தான்.

உண்மையில் பலருடைய வாழ்க்கை பரிதாபகரமான தோல்வியை அடைவதற்கு பல காரணிகள் இருப்பினும் பொதுவான காரணியாக அமைவது என்னவெனில் ஒரு குறிக்கோளை மையமாக வைத்து வாழப்பழகாத நிலைதான். ஏனெனில் ஒரு குறிக்கோளை அடிப்படையாக வைத்து எதிர்நீச்சல் போட்டு அந்த நிலையை அடை-வதற்கான மனப்பக்குவத்தைப் பலர் வளர்ப்பதும் இல்லை, வளர்ப்பதில் ஆர்வம் காட்டுவதும் இல்லை. இந்த மனோநிலைக்கு அடிப்படையாக அமைவது அவர்களது வரட்டுக் கௌரவமும் சுயநலமும் தான்.

பல சந்தர்ப்பங்களில் மற்றவர்கள் ஏதாவது ஒரு விடயத்தில் வெற்றியடைந்து விட்டால் அதை மனதார ஏற்றுக்கொள்ளும் பக்குவம் பலரிடம் இருப்பதில்லை. சில சந்தர்ப்பங்களில் அந்த வெற்றிக்கு அதிஷ்டம் தான் காரணம் என்பார்கள். சிலர் அது நேர்மையான வழியில் அடையவில்லை என்பார்கள். தங்களால் முயன்று முடியாமற்போன ஒன்றை மற்றவர்கள் முயற்சி செய்து வெற்றிகண்டால் மனம் உடைந்து போவார்கள். இதைவிட அபாயகர-மானவர்கள் யாரெனில் ஒருவர் ஒரு முயற்சியில் ஈடுபட முனையும் போது அந்த முயற்சி சம்பந்தமான எந்த அடிப்படை அனுபவ அறிவும் இல்லாமல் அந்த முயற்சி வெற்றியளிக்காது என்று ஆலோசனை கூறுபவர்கள். இவ்வாறு ஆலோசனை கூறும் மனிதர்கள் ஏதோ ஒருதுறையில் திறமை பெற்றிருப்பதனால் அது சம்பந்தமாகச் சிலரிடம் ஒரு மதிப்பைப் பெற்றவர்களாக இருப்பார்கள். அந்த மதிப்பை மனதிற் கொண்டு அவரிடம் அவரது நிபுணத்துவம் அல்லாத ஒரு விடயத்தில் ஆலோசனை கேட்கும் போது அது சம்பந்தமான அனுபவ அறிவு இல்லை என்பதை நன்றாக அறிந்திருந்தும் அதை வெளிப்படுத்துவது தனக்கு மரியாதைக்குறைவாகிவிடும் என்ற சுயநலநோக்கில் தவறான வழிகாட்டலுக்கு மற்றவர்களை உட்படுத்திவிடுகிறார்கள். உதாரணமாக சில வைத்தியர்கள் அவர்களது வாடிக்கையாளர்கள் உயிர்ச்சத்து மாத்திரைகளின் பயன்பாடு பற்றிக் கேட்கும் போது அந்த வாடிக்கையாளரது உணவுமுறை பற்றிய எந்தக் கருத்துக்கும் இடமளிக்காது அல்லது அதுபற்றிய தகவல்களைப் பெறாமல் அவசியமில்லை என்று கூறி விடுகிறார்கள். ஒரு வைத்தியரின் அடிப்படைத் தொழில் நோய் வந்த பின்னர் அதை குணப்படுத்துவதா அல்லது நோய்வராமல் தடுப்பதா என்பதை அறியாத பல அப்பாவி மக்கள் இவர்களது வழிகாட்டலுக்குள் அகப்பட்டு அவதிப்படுகிறார்கள். இங்கே இந்த வைத்தியர்களுக்கு நோய்த்தடுப்பு முறை உணவாலும், உயிர்ச்சத்துக்களாலும் உடற்பயிற்சியாலும் செயற்படுத்தப்படவேண்டும் என்பது தெரிந்தும் கூட நோயைக் குணப்படுத்துவதில் காட்டும் அக்கறை அல்லது ஆலோசனையை நோய்த்தடுப்பு சம்பந்தமாகச் செயற்படுத்துவதில்லை. சிலவேளைகளில் நோய்த்தடுப்பு முறைபற்றிய குறிப்பாக உயிர்ச்சத்துக்கள் பற்றிய அண்மைக்கால தகவல்கள் இல்லாமையாலோ அல்லது அவர்களது தொழிலுக்குரிய வருமானத்தைப் பாதிப்பதாக அமையுமாயின் அதைத் தெளிவுபடுத்தி சரியான மூலங்களில் இருந்து அதற்கான தகவல்களைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய மனப்பக்குவம் இவர்களுக்கு இருப்பதில்லை. இதனால் காலப்போக்கில் மற்றவர்களது மதிப்பை இவர்கள் இழந்து விடுகிறார்கள்.

ஒருவரது வெற்றி என்பது அவரது மனோபலத்தில் தங்கியிருப்பதும் அந்த வெற்றியை அடைவதற்குச் சரியான மூலகங்களில் இருந்து தரமான தகவல்களைப் பெறுவதும், எதிர்பார்க்கப்படும் வெற்றியை ஏற்கெனவே அடைந்தவரது நேர்மையான வழிகாட்டலைப் பின்பற்றுவதும் அடிப்படைத் தேவைகளாகின்றன. ஆனால் நிலையான வெற்றி என்பது இவற்றிற்கும் அப்பாற்பட்டதாக அமைந்துள்ளது.

நிலையான வெற்றியை நாம் அடைய வேண்டுமாயின் நாம் செய்ய வேண்டிய அடிப்படை விடயம் என்னவெனில் மற்றவர்களை வெற்றியாளராக்குவதில் நாம் நமது அறிவையும் நேரத்தையும் முதலீடு செய்ய வேண்டும். எப்பொழுது மற்றவர்களது வெற்றி நிரந்தரமாக்கப்படுகின்றதோ அப்போது நமது வெற்றியும் உறுதியானதாகின்றது. இதனால் தான் மற்றவர்களது நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களது வெற்றிக்காக உழைப்பவர்கள், நிரந்தர வெற்றி யாளர்களாகிறார்கள். குழந்தைகளின் வெற்றி பெற்றோர்களின் வெற்றியாக அமைவது போல் ஒருவரது வெற்றியின் அத்திவாரமாக அமைவது அவர் சார்ந்த அவரது முயற்சி சார்ந்த மற்றவர்களது வெற்றியே. இந்த நிரந்தரமான வெற்றியை அடைவதற்கு பிரதிபலன் பாராது மற்றவர்களை முதன்மைப்படுத்தி முன்னேற உதவி செய்யும் மனப்பக்குவம் வேண்டும். உலகில் வெற்றிநாயகர்கள் என்று கருதப்படுபவர்களது அடிப்படை இயல்பு மற்றவர்களது நலனுக்கான உழைப்பாக அமைந்திருப்பதைக் காணலாம். அதிஷ்டவசமாக வடஅமெரிக்காவைச் பொறுத்த வரையில் நிலையான வெற்றியை நாம் அடைவதற்குச் சமமான வாய்ப்புக்கள் எல்லோருக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. இதனால் தான் இக்கண்டத்தைச் சுதந்திரத்துக்கான நிலம் (Land of Freedom) என்கிறார்கள். வெறும் கையுடன் வந்தவர்களில் பலர் நிரந்தர வெற்றியாளர்களாக்கப்பட்டிருக் கிறார்கள். ஏனெனில் இவர்கள் நிரந்தர வெற்றியாளர்களாகியதற்கு அடிப்படையாக அமைந்தது. இவர்களால் பலர் நிரந்தர வெற்றியாளர்களாக்கப்பட்டமைதான். ஆம் வாசகர்களே!

**KG Master**-kgmaster@rogers.com
**www.kgmaster.com**

நிரந்தர வெற்றி என்பது எல்லோருக்கும் சமமாகக்கொடுக்கப்பட்ட ஒன்று. குறிப்பாக இந்த நாட்டில் அந்த நிலையை அடைவதற்கு எண்ணில் அடங்காத வாய்ப்புக்கள் உள்ளன. அதாவது மற்றவர்களது வெற்றியூடாக எமது வெற்றியை நிரந்தரமாக்குவது தான். இது எப்படி என்று சிந்திக்கிறீர்களா? கேளுங்கள் தரப்படும். தேடுங்கள் கிடைக்கும்.

அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் 'விளம்பரம்' பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- நன்றியுடன் KG Master


**அமைதியின் குரல் - Words of Peace**

**- MAHARAJI -**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹாராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**மஹாராஜியின் உரைகள்**



| On DVD | On TV |
|---|---|
| இலவச DVDக்கு அழையுங்கள் **(416) 431-5000** **1 877 707 3221** | **Saturdays at 11:00 am** **Rogers Cable Channel - 20** **Bell Express vu Channel - 219** |

# பெண்களும் யோகாசனத்தின் அவசியமும்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

## YOGA FOR WOMEN

பெண்களும் அவர்களது வெவ்வேறு பருவத்தில் ஏற்படும் பிரச்சினைகளையும் அதனால் அவர்களுக்கு உருவாகும் வெவ்வேறு நோய்களையுப்பற்றியும் ஒவ்வொரு பெண்ணுக்கும் தெரிந்த விடயம்தான். இதிலிருந்து விடுபடுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றித் தான் இந்த கட்டுரையில் பார்ப்போம். இந்த இயந்திர உலகில் பெண்களை சில வாழ்வியல் நெறிமுறைகளையும் சில உடல், மனம் சார்ந்த பயிற்சிகளையும் சிறிது நேரமாவது செய்து வருவதற்கு நேரம் கிடைப்பதில்லை என்ற காரணம் கூறி சமாளித்துவிடுவதைத்தான் நாம் அதிகம் காண்கிறோம். அப்படியானவர்கள் காலம் கழிந்த பின் வருந்துவதுதான் நிச்சயம்.

### யோகா *(Yoga)*

யோகம் என்றால் இணைதல் என்று பொருள் .அதாவது உடலும் மனமும் ஒன்றாக இணைந்து செயல்படுவதாகும். இந்த நிலையில்தான் ஒரு மனிதன் செய்யும் எந்த செயலும் அவனுக்குச் சாதகமான முடிவைக் கொடுக்கும். எனவே உடலையும் மனத்தையும் செம்மைப்படுத்த முடியும் என்ற வழிமுறைகளை கற்பிக்கும் பயிற்சிதான் யோகாசனம்.

### யோகா பயிற்சியால் ஏற்படும் நன்மைகள்

• உடலில் உள்ள இரத்த ஓட்ட மண்டலங்கள் நன்றாக இயங்கும். கழிவுகள் வெளியேறி இரத்தம் தூய்மையடையும். மனக்கட்டுப்பாடு ஏற்படும்.
எண்ணங்கள் சிந்தனைகள் தெளிவுபெறும். இதனால் மன அமைதி ஏற்படுகிறது.

• சுவாச உறுப்புகள் நன்றாக இயங்குவதால் பிராண சக்தி உடல் முழுவதும் நன்றாக பாய்ந்து உற்சாகத்தைக் கொடுக்கும். மலச்சிக்கல் நீங்கும்.

• மனித உடம்பிற்கு ஆதாரமான முகுதுத்தண்டு நன்றாக வலிமை பெற்று நன்றாக இயங்குவதால் நோய்களே வராது.

• பெண்களுக்கு மாதவிடாய் உரிய நேரத்தில் ஏற்படும். அதிகமாக இரத்தம் வெளியேறுவதால் வயிற்றுவலி, உடல் சோர்வு, முகுதுவலி என்பன நீங்கும்.

• பெண்கள் இளம் வயதிலிருந்து யோகா பயிற்சி செய்து வந்தால் கண்டிப்பாக சுகப்பிரசவம் ஏற்படும்.

• குழந்தை பிறந்த பின்பும் பெண்கள் மனத்தாலும் உடலாலும் இளமையுடன் வாழ முடியும்.



• தலைமுடி உதிர்வது நின்று. நன்றாக வளரும்.

• குழந்தை பிறந்தபின்பு உடல் எடை கூடுவது. தொந்தி பெரிதாகிப் பருமலாவது என்பன தவிர்க்கப்படும்.

• குழந்தை பிறந்த பின் கர்ப்பப்பை சம்மந்தமான எந்த நோயும் வராது. மாதவிலக்கு எந்த வயதில் நிற்க வேண்டுமோ அந்த பருவத்தில் நின்றுவிடும். அதன்பின் வயிற்றுவலி கர்ப்பப்பை சம்மந்தமான எந்த நோயும் வராது.

• பெண்கள் இளம் வயதிலிருந்து யோகாசனம் பழகி வந்தால் உடல், மனம் என்பன நன்கு ஆரோக்கியத்துடன் இருப்பதால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் ஆரோக்கியமாகவும் நல்ல எண்ணம் கொண்டவர்களாக விளங்குவர்.

யோகாவில் மூச்சுப்பயிற்சி மற்றும் தியானப்பயிற்சி என்பனவற்றை முறையாக செய்துவருவதால் நரம்புகள் அனைத்தும் வலிமைபெற்று நோய்
எதிர்ப்புசக்தி அதிகரிக்கின்றது. அத்துடன் மன ஒருமைப்பாடு ஏற்படுவதால் மன அழுத்தம் (Stress) நீங்குகிறது.

### கபாலபாதி மூச்சுப் பயிற்சி

யோகாவில் பெண்களுக்கு இது மிக இன்றியமையாதது. இதனை முறைப்படி பழகி தினமும் 5 நிமிடங்களாவது செய்து வரும்போது தோல் முகம் என்பன அழகுறும். ஊளைச்சதைகள் கரைந்து உடலிலுள்ள கழிவுகள் முறையாக வெளியேற்றப்படுகிறது. உடல் எடை மிக விரைவில் குறையும்.

### யோகா செய்யும் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டியவை

1. காலையில் வெறும் வயிற்றில், மாலையில் இரவு உணவுக்கு முன்போ யோகா செய்வது சிறந்தது.
2. மாதவிலக்கு ஏற்படும் காலத்தில் தவிக்கவும்.
3. ஒவ்வொருவரின் வயது, உடல்நிலை, வியாதிகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு பொருத்தமான பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
4. பெண்கள் கருவுற்ற இருமாதங்கள் மட்டும் ஆசனப்பயிற்சிகளை செய்யலாம். அதன்பின் ஆசிரியரின் ஆலோசனைப்படி பொருத்தமான சிலவற்றை மட்டும் செய்ய வேண்டும்.
5. சுகப்பிரசவம் உண்டானால் மூன்று மாதங்களின் பின்பு பயிற்சியை ஆரம்பிக்கலாம். சத்திரசிகிச்சையின் மூலம் பிரசவம் உண்டானால் உடல் நிலை தேறியபின் யோகா ஆசிரியரின் அனுமதியின் பின் படிப்படியாகத் தொடங்கலாம்.

### மனக்கவலை இறுக்கம் நீங்க



'எங்கள் வீட்டுப் பிரச்சினைகளை நேரில் வந்து பார்த்தால் தான் உங்களுக்குத் தெரியும். இத்தனை பிரச்சினையிலும் நான் சமைப்பதே பெரிய விடயம்' என்று சில பெண்கள் கூறுவதை அறிவீர்கள். 'இவ்வளவு நடந்தும் நான் ஏன் உயிருடன் இருக்கிறேன் என்று எனக்கே தெரியவில்லை' இவ்வாறு பல பெண்களின் மனக் குமுறல்களையும் நாளாந்தம் கேட்க முடிகிறது. இவற்றிக்கெல்லாம் யோகாவில் தீர்வு நிச்சயம் உண்டு. ஆரோக்கியம் உங்கள் கையில்தான் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

எனவே கோபம், கவலை வரும்போதெல்லாம் சாந்தி ஆசனம் செய்யுங்கள். வெற்றி நிச்சயம்.




ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

# நிலைமாறும்...

07ஆம் பக்கத்தொடர்ச்சி

போதும், வாடகைக்கு இடம் தெரிவது மிகவும் இறுக்கமாகவே காணப்படுகின்றது. ரொறொன்ரோ பெரும்பாகத்தில் ஏறக்குறைய Vacancy Rate 1% ஆகக்



காணப்படுகின்றது.
2011 இல் ரொறொன்ரோவில் 15,000 புதிய அடுக்குமாடி மனைகள் (High rise Condos) விற்கப்பட்டன. இதே உயரம் குறைந்த வீடுகள் (Low Rise Houses) 1800 இற்கு குறைவாகவே இருந்தது. இதனால் அடுக்குமாடி மனைகளின் விலைகளில் இறக்கம் ஏற்பட்டாலும் தனிவீடுகள், சேர்ந்த வீடுகளின் விலைகளின் விலை இறக்கம் குறைவாகவே இருக்க கூடிய சந்தர்ப்பங்கள்

### GTA CONDO VACANCY

| | |
|---|---|
| Toronto | 1.3% |
| Peel Region | 0.3% |
| Halton Region | 0.3% |
| Yok Region | 0.80% |

வங்கியின் வட்டிவீதம் 1%
முதன்மை வட்டிவீதம் 3%

உள்ளன.

புதிய கட்டிடங்களை நிர்மாணம் செய்யும் தொழில் செய்யும் நிறுவனங்கள் அதிக இலாபம் எடுப்பதற்காக அடுக்குமாடி மனைகளையே நிர்மாணிக்க விரும்புகின்றார்கள். எனவே புதிய புதிய நிறுவனங்கள் இந்த தொழிலில் இறங்குகின்றன. எனவே புதிதாக அடுக்கு மனை வாங்குபவர்கள் நிறுவனங்களின் சரித்திரத்தை பார்த்து வாங்குவது எதிர்காலத்தில் அடுக்கு மனைகளின் விலை குறைந்தாலும் பெயரான நிறுவனங்களின் அடுக்கு மனைகளின் விலை குறைவு ஒப்பீட்டளவில் குறைவாக இருக்கலாம்.



# 19வது ஆண்டு நிறைவு நாளைக் கொண்டாடும்

## SAMY & SONS

**Wholesalers & Retailers**

- ☑ வரவேற்பு
- ☑ விலை
- ☑ தரம்

*Textiles, Jewellery, Gift Items & Fancy Goods, Express Money Transfer, Pawn Broker, Party Item Rental Etc.*

- ☑ தெரிவு
- ☑ நம்பிக்கை
- ☑ நாணயம்

## ஆஹா! ஆஹா!! ஆஹா!!!

## அதிரடி வருடாந்த மலிவு விற்பனை

**யூலை 28ம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் 28ம் திகதி வரை**

**எமது வாடிக்கையாளர்கட்கு! இதோ ஓர் அரிய சந்தர்ப்பம்!!!**

**எழுத்து வடிவில் கொண்டு**
**வரமுடியாத எண்ணற்ற**
**பொருட்கள் எங்கும்**
**கண்டிராத**
**மலிவு விலைகளில்**
**பெற்றுக் கொள்ள**
**வாரீர்! வாரீர்!!**
**விரைந்து வாரீர்!!**
**ஒரு முறை வந்து பாரீர்!!**



**OPEN**
**MON - FRI**
**12 pm - 9pm**
**SAT, SUN & Holidays**
**10am - 9pm**

**குறைந்த விலையில் நிறைந்த சேவை**

## Tel: 416-298-1598


**1884 B Kennedy Road (at Ellesmere)**
**Scarborough, Ontario M1P 2L8**

SALE! SALE!! SALE!!!

**அன்றும், இன்றும் என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்**


# காலத்தோடு வளரும் கணினிகள் - 2

கணினி என்ற சொல் முதலில் கணித்தல் தொழில்களைப் புரியும் பெண்களுக்குரிய பதவியைக் குறிக்கும் சொல்லாக இருந்திருக்கின்றது. பிறகு அவர்கள் செய்யும் வேலையை ஆரம்பகாலக் கணித்தல் இயந்திரங்கள் செய்ததால் அவற்றின் பெயராக மாறிவிட்டது. யார் கணினியை உருவாக்கினார்கள்? என்ற கேள்விக்கு இலகுவான பதில் கிடையாது. கணினிகளின் தோற்றத்திலும், வளர்ச்சியிலும் பல கண்டுபிடிப்பாளர்கள் பங்களித்திருக்கின்றார்கள் என்றுதான் கூற முடியும். கணினியில் உள்ள பாகங்களையும் வெவ்வேறு கண்டு பிடிப்பாளர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். நிரல்படு தன்மை கொண்ட கணினியை (Programmable Computer புரோகிராமபிள் கொம்பியூட்டர்) முதலில் கண்டுபிடித்தவர் ஜேர்மனியில் கொன்ராட் யூஸ் (Konrad Zuse) என்பவர். இவர் 1910ஆம் ஆண்டிற்கும் 1955ம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் வாழ்ந்தவர். நீண்ட பொறியியற் கணித்தல்களைச் செய்வதற்காக கணினியை உருவாக்கினார். இவர் உருவாக்கிய தன்னியக்க கணிப்பான்கள் (Automatic Calculators) கணினியை உருவாக்கியதற்கான பட்டத்தை இவருக்குப் பெற்றுத் தந்தது. நாங்கள் பேராதனைப் பொறியியல் பீடத்தில் கல்வி கற்ற ஆரம்ப காலத்தில் தன்னியக்கக் கணிப்பான்களை (Automatic Calculators) பாவிக்கக் கூடாது என்ற விதி இருந்தது. அப்பொழுது கணித்தல்களுக்கு சிலைட் றூள் (Slide Rule) உடன் போராட வேண்டி இருந்தது. சிலைட் றூளினை முதலில் இங்கிலாந்தில் 1632இல் உருவாக்கினார்கள் என்று கூறப்படுகின்றது. இன்றெல்லாம் மனக்கணக்கு என்ற சொல்லிற்கே இடமின்றி கணிப்பான்கள் செல் தொலைபேசியிலும் (cellular Phones) இடம் பிடித்து ஆட்சி புரிகின்றன. நவீன கணினிகளுக்கான வரைவிலக்கணத்தையும் அடிப்படைக் கோட்பாட்டையும் உருவாக்கியவர் 1946இல் ஜோன் வொன் நியுமான் (John Von Neumann). ஆனால் 1941 வருடத்திலேயே கொன்ராட் யூஸ் உருவாக்கிய z3 கணினியில் ஜோன் வொன் நியுமான் குறிப்பிட்ட தொழிற்பாடுகள் அநேகமாக இருந்தன எனலாம். கொன்ராட் யூஸ் உருவாக்கிய கணினியில் மென்பொருட்களையும் (Programs or software), தகவல்களையும் (Data) ஒரே நினைவகத்தில் சேமிக்கும் வசதி இருக்கவில்லை.



1944இல் ஐபிஎம் IBM (International Business Corporation) உடன் இணைந்து ஹவார்ட் மார்க் (Havard Mark) ஒரு கணினியை உருவாக்கினார். இது 5 தொன் நிறை கொண்டதாகவும், 51 அடி நீளம் கொண்டதாகவும், 8 அடி உயரம் கொண்டதாகவும் இருந்தது. தற்காலத்தில் Computer Bug என்ற சொல் கணினிகளோ அல்லது மென்பொருட்களோ கொண்டுள்ள பிழைகளைக் குறிக்கும் சொல்லாக இருக்கின்றது. ஆனால் இந்தச் சொல்லு எவ்வாறு பாவனைக்கு வந்தது என்று கவனிப்போம். ஹவார்ட் மார்க் இனது கணினியில் பாவிக்கப்பட்ட குற்று அட்டையில் உள்ள துவாரத்தை ஒரு இறந்த பூச்சியின் இறகு மறைத்ததால் எற்பட்ட பிழையைத்தான் முதலில் Bug என அழைத்தார்களாம். இதனை கவனித்து அதனால் ஏற்பட்ட தவறைத் திருத்தியவர் (debugging செய்தவர்) கிரேஸ் கொப்பர் (Grace Hopper). இப்பொழுதெல்லாம் ஏற்படும் பிழைகளை bug என்றும் திருத்திக் கொள்வதை debugging என்றும் சொல்லிக் கொள்கின்றோம். ஆனால் இந்தச் சொல் எவ்வாறு பாவனைக்கு வந்தது என்று நம்மில் பலருக்குத் தெரியாது. ஆம் வாசகர்களே! இவ்வாறான கணினி பற்றி நாங்கள் அறிந்தும், அறியாமலும் உள்ள பல விடயங்களை இந்தத் தொடர்கட்டுரையில் அலசப்போகின்றோம். 1946இல் கொன்ராட் யூஸ் அவர்கள் பிளான்கல்குல் (Plankalkul) எனப்படும் முதலாவது படிமுறை நிரல்படு மொழியை (Algorithmic Programming Language புரோகிராமிங் லாங்யூஜ்) உருவாக்கினார்.

முதலாவது மின்னணுவியல் அல்லது இலத்திரனியல் கணினியை கண்டுபிடித்தவர்கள் பேராசிரியர் ஜோன் அற்றனசொவ் (Professor John Atanasoff), மற்றும் அவரின் பட்டதாரி மாணவன் கிளிவ்வோர்ட் பெரி (Clifford Berry) ஆகியோர். இவர்கள் இதனை லோவா மாநிலப் பல்கலைக் கழகத்தில் (Lowa State University) 1939 ஆம் ஆண்டிற்கும் 1942ஆம் ஆண்டிற்கும் இடையில் செய்தார்கள். ஆனால் பிரஸ்பர் எக்கேற் (Presper Eckert) மற்றும் ஜோன் மெவுச்லி (John Mauchly) ஆகியோர் முதலில் ENIAC (Electrical Numerical Integrator and Calculator) எனப்படும் எண்ணியக் கணினியை (Digital Computer) உருவாக்கி உரிமைப் பதிவையும் செய்தார்கள். மேலும் இந்தக் கணினியை பல எண்ணிக்கையில் உற்பத்தியும் செய்தார்கள். இவர்களின் ஆய்விற்கான நிதியை அமெரிக்க இராணுவம் அளித்தது. இவர்கள் உருவாக்கிய ENIAC இல் 17468 வெற்றுக் குழாய்களும் (Vacuum Tubes), 70000 தடைகள் (Resistors), 10000 மின் தேக்கிகள் (Capacitors), 1500 அஞ்சல் சுருள்கள் (Relays), 6000 நிலைமாற்றிகள் (Switches) என்பன காணப்பட்டன. இதனைப் பார்க்கின்றபொழுது ஆரம்பகாலக் கணினிகள் எவ்வளவு சிக்கலான பெரிய அளவினதான உபகரணமாக இருந்திருக்கிறது என்பதை




அறிந்து கொள்ளலாம். கணினிகளின் கண்டுபிடிப்புக்கள் படிப்படியாக பலரின் திறமையால் வளர்ந்து வந்திருக்கின்றது. பல கண்டுபிடிப்புக்கள் உரிய முறையில் பதிவு செய்யப்படாமையினால் வரலாற்றில் இடம் பெறாத சூழ்நிலைகளும் ஏற்பட்டுள்ளன. 1949ம் ஆண்டிற்கும் 1952ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் விஞ்ஞானத் துறையில் ஏற்பட்ட பல சவால்களை இக்காலத்தில் உருவாகிய கணினிகளால் தீர்த்து வைக்கப்பட்டன என அறியப்படுகின்றது. இதனாலும் ஆர்வத்துடன் பலர் கணினி ரீதியிலான கண்டுபிடிப்புக்களில் இறங்கினார்கள். இந்தத் தொடர்கட்டுரையில் இன்றைய கணினிகளைப் பற்றி ஆராய்வதற்கு முன்பாக சுருக்கமாக பழைய வரலாற்றையும் அலசிக்கொண்டிருக்கின்றோம். UNIVAC (Universal Automatic Computer) இனை உருவாக்குவதில் பிரஸ்பர் எக்கேற், ஜோன் மெவுச்லி ஆகியோர் ஈடுபட்டார்



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 22ஆம் பக்கம்



# கடன் தொல்லையினால் வருந்துகிறீர்களா ?

# GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY

# வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை

# GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினூடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவனைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்.................

## ARE YOU CONCERNED ABOUT YOUR DEBTS ? ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

இத்துறையில் பல வருட அனுபவமிக்க ARU KRISH ஜை

இன்றே அழையுங்கள்

**இலவச ஆலோசனைகளுக்கு**

# (416) 556-9287

**Credit Revolving Center**

**(GTA Square )**

5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

# தென் இந்தியாவின் துவாரகா : குருவாயூர்



## கேரளா சுற்றுலா இடங்கள் - 14

சென்ற இதழ் தொடர்ச்சி...

குருவாயூர் கோயில் சதுர வடிவில், மலையாள கட்டட பாணியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் கூரைகள் செப்புத் தகட்டால் வேயப்பட்டுள்ளன. இதன் கிழக்கு கோபுர வாசலில் இருந்தே குருவாயூரப்பனை பக்தர்கள் தரிசிக்கும்படியும், சித்திரை விஷு தினத்தன்று காலைக் கதிரவனின் ஒளிக் கற்றைகள் குருவாயூரப்பன் திருவடிகளில் விழுமாறு கூரை அமைக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் கிழக்கு - மேற்கில் இரு கோபுரங்கள் கிழக்குக் கோபுரம் வழியே நுழைந்தால் வெளிப் பிரகாரம் வரும். இங்கு, பொன் முலாம் பூசப்பட்ட சுமார் நூறு அடி (33.5 மீட்டர்) உயரக்கொடி மரமும் இதன் இருபுறமும் 13 அடுக்குகளுடன் 7 மீட்டர் உயரமுள்ள தீபஸ்தம்பங்களும் உள்ளன. இங்குதான் செண்டை மேளங்கள் முழங்க, அலங்கரிக்கப்பட்ட யானைகள், காலையில் நாராயணனை வழிபட வரிசையாக நிற்கும். கொடிமர மண்டபத் தூண்களின் கீழ் அமர்ந்து பக்தர்கள் பாகவதம் அல்லது நாராயணீயம் படிப்பது வழக்கம்.

மூலஸ்தானத்தின் இரு புறமும் பிரசண்டன், அனந்தானந்தர்கள் உள்ளனர். கருவறைப் படிக்கட்டுக்குக் கீழே இந்திரனும் மண்டபத்தில் கருடனும் தென்கிழக்கு மூலையில் அக்னியும் உள்ளனர். தெற்கில் கணபதி, தட்சிணாமூர்த்தி, எமன், வீரபத்ரர், விக்னேச்வரர், ஐயப்பன், சப்தமார்கள் ஆகியோரும், மேற்கில் அனந்தசயனனும் சுப்பிரமணியரும், வடக்கில் சோமனும் வைச்ரவணனும், வடகிழக்கில் நிர்மால்யதாரி, ஈசானன், பிரம்மா ஆகியோரும் உள்ளனர். கிணற்றில் வருணன் உள்ளார். ருத்ர குளத்தில் இருந்து பகவதி சந்நிதிக்குப் பின்புறம் உள்ள சிறு வழி மூலமாகவும் இந்த சந்நிதிக்கு வரலாம். பிரகாரத்தின் தென்கிழக்கு மூலையில் கூத்தம்பலம் உள்ளது. இதன் வடக்கில், தர்ம சாஸ்தா மேற்கு பார்த்தபடி வீற்றிருக்கிறார். வடக்குப் பிரகாரம் திரும்பியதும் யானைப் பந்தல் மண்டபம் வரும். இதன் மேற்கூரையில் சிறு துவாரம் உள்ளது. இந்த மண்டபத்தில் கிருஷ்ணனாட்டம் நடக்கும். ஒரு முறை கார்த்திகை மாதம் சுக்ல பட்ச ஏகாதசி அன்று நாரதரும் ஆதிசங்கரரும் ஆகாய மார்க்கமாகச் சென்று கொண்டிருந்தனர். அப்போது நாரதர், குருவாயூரப்பனை தரிசிக்க விரும்புவதாகச் சொன்னார். ‘விக்கிரக வழிபாடு, இறைவன் நாமத்தை உச்சரிப்பது ஆகியவை தேவையில்லை’ என நினைத்து, வர மறுத்தார் ஆதிசங்கரர். அதனால் அவர் இந்த இடத்தில் மூர்ச்சித்து கீழே விழுந்தார். அவர் கண் விழித்தபோது விஷ்ணு தரிசனம் கிடைத்தது. அதனால் இங்கு 41 நாள் தங்கி, பூஜை முறைகளை வகுத்து விட்டு, தனது பயணத்தைத் தொடர்ந்தார். அதனால்தான் அந்த துவாரம் உள்ளது என்பது ஐதீகம். இரவில் அந்த இடத்துக்கு சீவேலி வரும்போது வாத்தியங்கள் இசைப்பதை சற்று நிறுத்தி மீண்டும் இசைப்பர்.

4. An indivitual community time (min) to work has mean 73 min. and standard deviation 12 min. How early should the person leave home to be sure of arriving at work on time atleast 80% of the time? (Grade 12)

5. If u = (5, -5, 2) v = (1, 8, -4) and w = (-2, -1, 2) express x = (-3, 6, 8)
   a. In terms of u, v and w
   b. In terms of the unit vectors u, v and w (For Gr 12)

6. If OE = - 2/5 OD +7/5 OF and OG = 1/5 OD + 4/5 OF
   a. In what ratio does D divided GE?
   b. In what ratio dies F divide GE.

7. The shadow cast by a mean standing I m from a lamp post is 1.2 m long. If the man is 1.8m tall and walks away from the lampost at a speed of 120m/m at what rate in the shadow lengthening after 5 sec? (For Gr. 12)

# முதியோர்...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒரேநோக்கோடு இருந்து எழுதுதல், பால்ய நண்பர்களை சந்தித்து பாடசாலைக் குறும்புகள், ஆசிரியர்களின் பட்டப்பெயர்கள், ஆண், பெண் ஆசிரியர் களிடையேயான கவர்ச்சிக் காதல்கள், தத்தம் கணவன்/மனைவி பற்றிய குற்றங்களைக் கூறி ஆதரவும் ஆறுதலும் பெறுதலை விமர்சித்தல். இப்படி ஏராளம்.



முதியோருக்கு நிற்சிந்தனையான வாழ்க்கை கிடைத்தாலும், இயற்கையால் வகுக்கப்பட்ட எதிர்ப்பாலின் துணையொன் றின் அவசியம் பற்றிய உணர்வு பேசாத பொருளாக இருந்தாலும் அதுவே அவர்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும். முதியவர்கள் பலர் வாழ்க்கைத்துணைகளை இழந்திருப்பார்கள். அவர்களின் தனிமை அவர்களின் உள்ளத்தை வாட்டி எடுக்கும். பகலில் ஓரளவு சகித்தாலும் இரவுத் தனிமை அந்த இழப்பை மென்மேலும் வருத்தும்.

படைப்பின் நோக்கமே துணைவன், துணைவி என்பது தானே. அதாவது இங்கிலீசில் சொல்வது போல பெண் என்பவளை சிறந்தபாதி என்பது.
எனவே அந்தப்பாதி போனாலும் அந்த வெறுமையை எத்தகைய வெளிப்புறக்கவர்ச்சிகளாலும் உடைக்க முடியாது.

இயல்பு வாழ்க்கை, இயற்கை வாழ்க்கை ஒரு துணையைத் தேடுவது. கலாசாரமும் பண்பாடு காரணமாக ஒரு தோழமை தேவையெனின் துணை இல்லாத ஒரு ஆண், ஆணையோ, பெண், பெண்ணையோ சேர்த்துக் கொள்வர். அது பின்னர் தன்னினச் சேர்க்கை என ஓரறிவு தொடக்கம் ஏழுவகைப் பிறப்பிலும் உயிர்களிடம் காணப்படுவதாகவும் அறிஞர் கூறுவர்.
எது எப்படியோ, இருபாதிகள் இணையும் போதுதான் வாழ்வு சிறக்கும். இயற்கையின் நியதியும் அஃதே. தனிமையில் நித்திரைக்குப் போகும் போது தம் எதிர்பாலாரை நினைந்தும், அவரில்லாத வெறுமையை உணராதவரும் இருக்கமாட்டார்கள். இதன் பரிகாரமாக 'சத்யமேவ ஜயதே' காட்டிய இரண்டாம் குடும்ப வாழ்வு இயற்கையோடு கூடியதாகக் கணித்து இரு எதிர்ப்பால் நண்பர்களின் தோழமை வாழ்வும், இயல்பானதே எனப் புரிந்து கொள்ள முடிகிறது.

89 வயது முதியவரும் 65 வயது முதியபெண்ணும் ஒரு வீட்டில் இரண்டாம் குடும்பவாழ்க்கை மேற்கொண்ட போது தாம் எந்த வகையான நன்மைகள் அடைந்தார்கள் என்பதை கூறும் நேர்காணல் ஒன்றையும் 'சத்யமேவ ஜெயதே' காட்டி நின்றது. இந்த வகையான அண்டைவீட்டு அனுபவம் ஒன்றை 2005 ஆண்டு அளவில் அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் எழுதியிருந்தமை நினைவில் வருகிறது. அவரது அண்டைவீட்டில் வசித்த ஒரு ஆபிரிக்க இனத்தவர் தன் மனைவியோடு நீண்டகாலம் அந்நியோன்யமாக வாழ்ந்து வந்தாராம். பின்வளவுத் தோட்டத்தில் நீண்ட நேரம் சோடியாக உலாவி வருவார்களாம். வெளியே போகும்போதும் சோடியாகவே செல்வார்களாம். ஒருநாள் அந்த மனைவி இறந்து விட்டாளாம். அவர் என்னபாடுபடுவாரோ, தற்கொலை செய்வாரோ என நினைத்து இவரே கண்ணீர் சொரிந்தாராம். அவரை வெளியே காணவும் முடியவில்லையாம். ஒரு வாரம் போனபின் கார் ஒன்று வந்து நின்ற சத்தம் கேட்க இவர் திரும்பிப் பார்த்திருக்கிறார். பக்கத்து வீட்டுக்காரர் ஒரு வெள்ளை மாதுடன் வந்திறங்கியிருக்கிறார். பழையபடி அந்த மாதுடன் கைகோர்த்தபடி தோட்டத்தில் உலாவுகிறார். வெறுமையான இடம் நிரப்பப்பட்டுவிட்டது.

சிலர் காதல் என்பது தோல்புரையளவு என நினைக்கிறார்கள். அதற்கு ஓர் இழப்பு ஏற்பட்டால் தோலுக்கு இனிமை சேர்க்க வேறொன்று தேவைப்படும். ஆனால் நம்மவருக்கு காதல் என்பது ஆன்மாவோடு சம்பந்தப்பட்டது எனப்பாடம் கேட்டோம். ஆன்மீகத் தொடர்பு எனப்பயிற்பட்டதால் ஆன்மாவின் கற்பாக்கி துயருறுகிறோம்.

ஆயினும் வாழ்க்கை இனிதாகக் களிக்கப்படுவதற்கு இரண்டாம் குடும்ப வாழ்வு அவசியம் என்ற நிலை எதிர்காலத்தில் இடம்பெறக் கூடும். ஏனெனில் சிறிது சிறிதாக மரபு மீறல்கள் நடந்து கொண்டுதான் இருக்கிறதல்லவா!

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at ***Scarborough & Stouffville***
***Contact: 647.340.9490 / 647.831.0363***

**BUY, SELL or LEASE**

**Dinesh Jeganathan**
**Sales Representative**



cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife Today Realty Ltd.**, Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

## CAR FOR HIRE

Wedding, Airport, Temple, Special occasion ஆகிய தேவைகளுக்கும், Limousine தேவைக்கும் அழையுங்கள்.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## திருமண சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
416.992.8782 / 905.472.8533

## TUTION

தரம் 5 தொடக்கம் தரம் 10 ஆம் வகுப்பு மாணர்களுக்கு விஞ்ஞான (Science) பாடம் University of Toronto இல் life Science படித்தவரால் உங்கள் வீடுகளிற்கு வந்து கற்பிக்கப்படும்.

**_SCAR.GOLF CLUB & ELLESMERE_**

2 Bedroom bsmt for rent in September 01, 2012. தொடர்புகளுக்கு: 647.966.3786

## TUITION

உங்களுக்கு ஆங்கிலம் பேச வருகிறதில்லையா? உங்களுக்கு ஆங்கிலேயர் போல் பேசவேண்டுமா? அப்படியானால் நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்
தொடர்புகளுக்கு: 416.300.4775

## இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுடச் செய்தரப்படும்.
Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக (University) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

மேலும் பக்கங்கள் 24, 25

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட விவாகரத்தான 36 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.831.4772

## JOB JOB JOB

**_KIPLING & STEELES_**

பகுதியில் Body works & painting வேலைக்கு ஆள் தேவை. தொடர்புகளுக்கு
416.667.1626 / 647.831.9005

## JOB JOB JOB

வயோதிபர் மற்றும் சிறார்களை பராமரிக்க சான்றிதழ் பத்திரம் வைத்திருப்பவரும் கரிசனையுடன் பணியாற்றக்கூடியவருமான கிறிஸ்தவ பெண்மணி ஒருவர் வேலைக்கு உண்டு.
647.693.3107 / 416.300.4775

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் விவாகரத்து பெற்ற 35 வயதுடைய ரொறொன்ரோவை சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 647.918.5520

## HOUSE FOR SALE - COLOMBO

கொழும்பில் அழகிய தொடர்மாடிகள் அதி நவீன வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு. 2 அறைகள், 3 அறைகளுடன் மொத்தம் 3 இடங்களில் (Temples Road, Samundra மாவத்தை, College Ave.) மொத்தமாக 70 வீடுகள் விற்பனைக்கு உண்டு. (Sea Side view & Land side view) உங்களுக்கு பிடித்தமான முறையில் வீட்டு வேலைகள் முடித்துத்தரப்படும். (GYM, Roof Top BBQ மற்றும் பல). உங்களுடைய வீடுகளை பதிவு செய்து உங்கள் முதலீட்டை உறுதிப்படுத்துங்கள்.
kulagan: **_647.880.1416_**

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

Metro Appliance இல் secretary வேலைக்கு ஆள் தேவை. பெண்கள் விரும்பத்தக்கது. ஆங்கிலம், தமிழ் நன்றாக பேசத்தெரிந்தவர்கள் வரவேற்கப்படுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 416.454.4466

## RENOVATION SPECIALISTS

- **_Kitchen & Pantry_**
- **_Flooring & Tiling_**
- **_Basement Completion_**
- **_Bathroom improvements_**
- **_Deck & Patio_**

**_Before selling homes for attractive upgrades to get high value in the market or After buying homes for affordable and innovative upgrades_**

**_We Customize your needs!_**

**_Contact : Varma (416) 857-9773_**

## CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder. Any condition.
தொடர்புகளுக்கு: 647.448.2569

**_MARKHAM & SHEPPARD_**

Computer Store ஒன்றிற்கு Sales person தேவை. பெண்கள் விரும்பத்தக்கது.
idealstairs21@gmail.com

## COMPUTER REPAIR

- கணனி திருத்தவேலைகள்
- கணனி தேவைகள்
- அடிப்படை கணனி பயிற்சி
- இலவச ஆலோசனைகள்



**ProWin Computers.**
**2383 Eglinton Ave. East**
**(Wind Mobile Store) Kennedy & Eglinton**
**416 - 879 7489 / 647 - 340 5568**

## RENOVATION

Renovation, repairs & paint. போன்ற வேலைகளுக்கு
அழையுங்கள்: 647.998.3535

**_Experienced Hardwood installer_**

Monday - Friday - 8.00am - 6.00pm.
தொடர்புகளுக்கு: 416.613.1919

## காணி வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் Brown Road இல் கலட்டிச் சந்திக்கு அருகில் 3 பரப்புக் காணியுடன் 5 அறைகள் கொண்ட அனைத்து வசதியும் நிறைந்த வீடு விற்பனைக்கு உண்டு. யாழ். பல்கலைக்கழகம் தொழில் நுட்பக்கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி என்பன மிகக் குறுகிய தூரத்தில் உள்ளன.
தொடர்புகளுக்கு: **_416.899.5553_**

## ROOM FOR RENT

### WARDEN & FINCH

Condo. வில் சகலவசதிகளுடன் கூடிய இரண்டு அறைகள் வாடகைக்கு உண்டு. தனித்தனியாகவும் வாடகைக்கு கொடுக்கப்படும். அருகாமையில் பஸ் வசதியுடன் உடனடியாக இருந்து வாடகைக்கு விடப்படும்.
**தொடர்புகளுக்கு: 647.402.9490**

## OFFICE SPACE FOR RENT

### MORNINGSIDE & SHEPPARD

Real Estate, Mortgage, Insurance offices **போன்றவையும்** Show Room **உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு.** **_Including High-speed Internet, Electricity, Heating, Water._**

**_Pl. Call: Murale - 416.569.4065_**

## HOUSE FOR RENT

### MIDDLEFIELD & STEELES IN MARKHAM

**_Newly renovated 4 bedroom house for rent. 2 full washrooms. Close to TTC, York transit, shoppers Drug Mart, banks, post office, super Markets, walmart. Enrgy certified. All floors are hardwood & laminated._**

**_Contact: 416.857.9773_**

## PRIVATE TUTORING

### By 25 years experienced teacher

- Math - Grade 9 – 12 & college & university students
- Pre university students calculus (Summer classes)
- We do computer repair and
- Physics – Grade 11 – 12
- Computer subject Grade 9 – 12

**_We do custom application programming for you business (Web base and non web base too)_**

Contact: **_Siva M. Easwaramoorthy_** (B.sc. and Computer Programmer)
அழையுங்கள்: **_416.271.8467 / 416.265.9138_**

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
**_www.vlambaram.com_**



உங்கள் தணியாத தாகத்தை
சாந்திப்படுத்தவும்
ஒரு முறை அருந்தினால் மீண்டும்
அருந்தத் தூண்டும் இயற்கைச்
சுவையுடன் கூடிய
SHERBET / FALUDA
குளிர்பானம்
Niru BRAND®
SHERBET
Drink
with Jelly
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ml
FALUDA
NO PRESERVATIVES
NET WT./POIDS NET : 290 ML
அன்றும், இன்றும் என்றும் புதிய
தரமான தயாரிப்புக்களை அறிமுகப்படுத்தும்
நிரு பிராண்டின் புதிய தயாரிப்பு
சகல தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

# கணித மேதைகளை பிரமிக்க வைத்த தமிழர்

## ராமானுஜன் தேடிய சூத்திரம்


• உலகில் தோன்றிய முதல் மனிதன் யார்?
• இரு முகில்களுக்கு இடையிலான தூரம் எவ்வளவு?

ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் தன் பெற்றோரிடம் கேட்ட கேள்விகள் இவை. அந்தச் சிறுவன் வேறு யாருமல்ல. தமிழ்நாடு கும்பகோணத்தில் இறை தொண்டு செய்து வாழும் குடும்பத்தில் 1887 இல் பிறந்த கணித மேதை சிறினிவாச ராமானுஜன் தான் அந்தச் சிறுவன்.

ஏழு வயதிலேயே உயர்பள்ளிக்கு (High School) க்குப் போகிறார். பன்னிரண்டாவது வயதில் Lonley இன் திரிகோணகணித நூலில் உள்ள எல்லா கணக்குகளையும் செய்து முடித்து விடுகிறார். G.S. Carr இன் கணித நூலில் உள்ள ஆயிரக்கணக்கான சமன்பாடுகள் மற்றும் கேத்திரகணித தேற்றங்களை எல்லாம் அந்தச் சின்னவயதிலேயே ஒருகை பார்த்து விடுகிறார். புதுப்புதுச் சூத்திரங்களை (Formulas) உருவாக்கி ஆசிரியர்களை மூக்கில் விரலை வைக்கச் செய்கிறார்.

தவா மயில்வாகனம்
M.Ed (Math)
***Holand***

பின்நாளில் இங்கிலாந்தில் கணித மேதை G.H. Hardy உடன் இணைந்து பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. அங்கே அவரது கணிதப்பயணம் தொடர்கிறது. அவரது அசாத்திய திறமை கண்டு கணித மேதைகள் பிரமித்துப் போயினர். கணிதத்தில் குறிப்பாக எண்ணியலில் அவரது கண்டறிவுகள் இலண்டனில் பிரசுரமாகின. அவர் உருவாக்கிய சூத்திரங்கள் இன்னும் பல துறைகளில் பயன்படுத்தப்படுகின்றன. பை (π) எண்ணின் தசமதானங்களை விரைவில் கண்டறிவதற்கு அவரது சூத்திரமே பயன்படுத்தப்படுகிறது. 32 வயது மட்டுமே வாழ்ந்த ராமானுஜன் தன் இறுதி நாட்களில் குழும எண் என்று தமிழில் சொல்லப்படக்கூடிய Partition Number P(n) மீதான தன் ஆய்வை




மேற்கொண்டிருந்தார். இந்த இடத்தில் குழும எண் என்றால் என்ன என்பதை சொல்லியாக வேண்டும். ஒரு நேர்முழு எண்ணை எத்தனை முறையில் வெவ்வேறு குழுக்களாக பிரிக்கலாம் என்பதே P(n) ஆகும். உதாரணத்திற்கு, இரண்டை இரண்டு வகைகளில் குழுக்களாக பிரிக்கலாம்.

2 = 2 2 = 1 + 1

அதனால் P (2) = 2 என்று ஆகும்.

நான்கை ஐந்து வகைகளில் பிரிக்கலாம்.

4 = 4 4 = 1 + 3
4 = 2 + 2 4 = 1 + 1 + 2
4 = 1 + 1 + 1 + 1

அதனால் P (4) = 5 என்று ஆகும்.

இந்த வகையில்
P (0) = 1 P (1) =1 P (2) = 2
P (3) = 3 P (4) = 5 P (6) = 11
P (10) = 42

ஆனால் 100 ஐ எத்தனை குழுக்களாக பிரிக்கலாம் தெரியுமா? நூறின் எல்லாக் குழுக்களையும் எழுத குறைந்தது ஒரு வருடங்களாவது தேவை. ஏனென்றால் P (100) = 190569292 ஆகும்.

இந்த குழும எண்களை எவ்வாறு இலகுவாக ஒரு சூத்திரம் மூலம் கண்டறியலாம் என்பதை கணித மேதை Euler ஏற்கெனவே ஆய்வு செய்து ஒரு சூத்திரத்தைக் கண்டறிந்தார். ஆனால் அந்தச் சூத்திரம் ஒரு நேரடியான சூத்திரம் அல்ல. அதை ஒரு சுழல்நிலைச் சூத்திரம் என்று குறிப்பிடலாம். அதாவது
P (n) = P (n-1) + P (n-2) - P (n-5) - P (n-7) + P(n-12).
இங்கு N என்பது ஒரு நேர்முழு எண்ணாகும். உதாரணத்திற்கு
P (1) = P (1-1) = P (0) = 1
P (2) = P (2-1) + P(2-2) = P (1) + P (0) = 1+1 =2

இப்படியாக தொடர் கணிப்புக்களை செய்ய வேண்டும். ஆனால் Euler கண்டுபிடிக்காத ஒரு நேரடிச் சூத்திரத்தை ராமானுஜன் தேடினார். இதற்காக நிறையச் சிந்தித்தார். இறுதியில் ஒரு சூத்திரத்தைக் கண்டறிந்தார். அந்தச் சூத்திரத்தை எவ்வாறு கண்டறிந்தார் என்பது பல கணிதவியலாளர்களுக்கு இன்னமும் புரியாத புதிராகவே உள்ளது.

அவர் கண்டறிந்த சூத்திரமானது:

$$P(n) = \frac{1}{2\pi\sqrt{2}} \times \frac{d}{dn}\left(\frac{e^{\pi\sqrt{2}/3n-1/36}}{\sqrt{n-1/24}}\right)$$

ராமானுஜனின் மூளையில் பளிச்சிட்ட இந்தச் சிக்கலான சூத்திரத்தைக் கொண்டு P(n) ஐ அண்ணளவாகவே கணிப்பிடலாம். உதாரணத்திற்கு P(10) இந்தச் சூத்திரம் மூலம் 41, 62 ஆக வரும். P(n) ஐ திட்டவட்டமாக கணிப்பிடுவதற்கு தான் கண்டறிந்த சூத்திரங்களில் மாற்றங்களைச் செய்து ஒரு சூத்திரத்தை உருவாக்க கடைசிவரை முயற்சி மேற்கொண்டிருந்தார் ராமானுஜன். அவர் தேடிய அந்தச் சூத்திரம் இறுதிவரை அவருக்கு கிடைக்கவே இல்லை. ராமானுஜன் தன் கைப்பட எழுதிய பல கணித ஆய்வுகளின் பிரதிகள் அடங்கிய கோவைகள் உலகின் பல பல்கலைக் கழகங்களின் நூலகங்களில் வைக்கப் பட்டுள்ளன. Amsterdam பல்கலைக்கழக நூலகத்திலும் உள்ளது. அவர் விட்டுச் சென்றவை அவரைத் தொடர்ந்து வரும் கணிதவியலாளர்களுக்கு மூலவளங்களாக அமைகின்றன. இந்த வகையில் ஜேர்மனிய கணிதமேதை Rademacher ராமானுஜனின் P(n) சூத்திரத்தை நீண்டகாலமாக ஆராய்ந்து அது சரியானது என்று நிரூபித்தார். அது மட்டுமல்லாது அந்தச் சூத்திரத்தில் ஒரு சிறு மாற்றத்தைச் செய்து ராமானுஜன் தேடிய அந்த திட்டவட்டமாக P(n) ஐ கணிக்கக் கூடிய சூத்திரத்தை உருவாக்கினார். Rademacher இது நடந்தது 1943 இல். ராமானுஜன் 1920 இல் மறைந்து.


**TUTORING**
By Qualified & Experienced Tutors

KEEN TUTORING CENTRE

GRADE 6 - 12, IB , MCAT, UNIVERSITY 1st & 2nd YEAR
> PHYSICS, CHEMISTRY, BIOLOGY
> MATH, FUNCTIONS, CALCULUS
> ENGLISH & FRENCH

**Call ( 64) 341 3975 / (647) 869 3974**

**கணித பாட வேலைப் புத்தகங்கள் (work books) கழிவு விற்பனையில் தரம் 1 இல் இருந்து 8வரை**

Math

நீங்கள் எதற்காக இந்த புத்தகங்களை உங்கள் பிள்ளைகளுக்கு வாங்க வேண்டும்

1. இவை பாடசாலை பாடவிதானத்துக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டவை
2. பயன்படுத்த இலகுவானவை
3. கணிதபாடம் செய்யும் வேகத்தை இவை விரைவில் அதிகரிக்கும்
4. எவராலும் இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடியவை
5. ஒவ்வொரு பகுதியிலும் அதிகளவான பயிற்சிகள்
6. A- இலிந்து A + ஆனான புள்ளிகளைப் பெறலாம்

உங்கள் பிள்ளைகளின் கோடைகால விடுமுறையை வீணடிக்காதீர்கள். இவற்றை வாங்கி உங்கள் அன்புக்குரியவர்களுக்கு சிறந்த பிறந்த நாள் பரிசாகக் கொடுக்கலாம். இந்தப்புத்தகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் உங்கள் பிள்ளைகளைச் சுயமாகக் கற்றுக்கொள்பவர்களாக்கலாம்.

நாங்கள் இப்புத்தகங்களை உங்கள் வீட்டுக்கே வினியோகிப்போம்.

**இந்தப் புத்தகங்கள் அடக்கும் பகுதிகள்.**

1. எண் உணர்வு
2. அமைப்புக்களும் அட்சரகணிதமும்
3. அளவுகள்
4. நிகழ்தரவும் தரவு நிர்வாகமும்
5. கேத்திரகணிதம்

தொடர்புகளுக்கு: **416.738.8824**

**யோகா சோதிடம்**

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# சன்மானம்

கடந்த வாரம் ஒருநாள் நான் வழக்கம்போல கீழ் அறையில் அமர்ந்து படித்துக் கொண்டிருந்தேன். மனைவி மேலே தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று மேலேயிருந்து சத்தம் வந்தது. அப்படிக் கத்தினால் இரண்டு காரணம்தான் இருக்கும். ஒன்று, சுடுதண்ணீர் பானையை காலிலே போட்டுவிட்டார். இரண்டு, 649 லொத்தரில் 10 மில்லியன் டொலர் விழுந்து விட்டது. இரண்டையும் சமாளிக்கும் தைரியத்தை மனதில் உண்டாக்கிக் கொண்டே மேலே ஓடினேன். தொலைக்காட்சியில் பிரபல எழுத்தாளர் திரு. வெங்கட் சாமி நாதனின் உருவம் தெரிந்தது. ஒரு நிகழ்ச்சியில் இவர் நிபுணராக அழைக்கப்பட்டு கருத்து சொல்லிக் கொண்டிருந்தார்.

என்னுடைய மனைவிக்கு வெங்கட் சாமி நாதன் என்றால் மிகப் பெரிய ஆதர்சம். அவருடைய ஒரு புத்தகத்தையும் படித்தது கிடையாது. இது வேறுவிதமான மரியாதை. ரொறொன்ரோவில் எங்கள் வீட்டுக்கு அவர் மூன்று தடவை வந்து மனைவி சமைத்த உணவை உண்டிருக்கிறார். புத்தகங்களை எப்படி வெ.சா கறாராக விமர்சிப்பாரோ அப்படியே கறாராக சாப்பிடும் உணவையும் விமர்சிப்பார். மூன்றாவது நாள் சாப்பிட்டபிறகு என் மனைவியின் ரசத்தை புகழ்ந்து தள்ளி விட்டார். நான் அது சொதி என்று நினைத்தி ருந்தேன். அன்றிலிருந்து மனைவிக்கு அவரிடம் பெருமதிப்பு ஏற்பட்டிருந்தது. தொலைக்காட்சியில் அவரைப் பார்த்து அப்படி அலறியதற்கு அதுதான் காரணம். நானும் தொலைக்காட்சியில் மீதி நிகழ்ச்சியையும் பார்த்துவிட்டு வெ.சாவுக்கு அவரைப் பாராட்டி ஒரு கடிதம் எழுதினேன். அவருடைய பதில் மின்னஞ்சலில் மறுநாளே வந்தது. 'அவர்களாகவே அழைத்தார்கள். காரிலே வந்து கூட்டிப் போனார்கள். திரும்பவும் காரிலே வீட்டுக்கு அனுப்பி வைத்தார்கள். ஆனால் சன்மானம் ஒன்றுமே தரவில்லை.' நான் அவருக்கு ஆறுதல் சொல்லி பதில் எழுதினாலும் என் மனம் இதையே சிந்தித்தபடி இருந்தது. நான் 19வது வயதில் எழுதத் தொடங்கினேன். 'எப்படியானாலும் பிரசுரமானால் போதும். சன்மானமே தேவையில்லை' என்றுதான் அந்தக் காலத்தில் நினைப்பு இருந்தது. தினகரனில் வெளிவந்த என்னுடைய சிறுகதைக்கு சன்மானமாக பத்து ரூபாவுக்கு காசோலை வந்ததும் திகைத்துப்போய் நின்றது நினைவுக்கு வருகிறது. எத்தனை பெரிய காசு அது. அன்றிலிருந்து இன்றுவரை சிறுகதைகள், கட்டுரைகள், நாடகங்கள், நேர்காணல்கள், மொழிபெயர்ப்புகள், நாவல் என்று எழுதியாகிவிட்டது. சன்மானம் என்று பார்த்தால் ஒரு பத்து வீதம் எழுத்துக்குக்கூட அது கிடைத்தது என்று சொல்ல முடியாது. சமீபத்தில் என்னுடைய மகன் எழுதிய கட்டுரை ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் பிரசுரமாகி அவனுக்கு சன்மானமாக ஒரு தொகை கிடைத்தது. எவ்வளவு என்று கேட்டேன். சொன்னான். நான் 19 வயதில் இருந்து இன்றுவரை எழுதி எனக்கு கிடைத்த சன்மானத்தின் கூட்டுத்தொகையிலும் பார்க்க மகனுக்கு ஒரு கட்டுரையில் கிடைத்த பணம் அதிகமாக இருந்தது.

நியூ யோர்க்கர் பத்திரிகை மிகப்பெரியது. அதிலே ஒரு சிறுகதை எழுதுபவருக்கு 5000 டொலர் கிடைக்கும். ஓர் எழுத்தாளருக்கு அது எத்தனை பெரிய சன்மானம். அதே சமயம் ஆங்கில சிறுபத்திரிகைகள் ஒவ்வொரு எழுத்தாளருக்கும் சன்மானம் வழங்குகிறது. ஆனால் அது நியூ யோர்க்கர் போல பெரிதாக இருக்காது. பத்திரிகையின் நிதி நிலைமைக்கு தக்கமாதிரி சன்மானம் அமைந்திருக்கும். ஆனால் இலவசமாக ஒரு படைப்பை எழுத்தாளரிடம் இருந்து பெறும் வழக்கம் கிடையாது. தமிழில் இது எப்படியோ வழக்கமாகிவிட்டது. மரவேலை செய்பவருக்கு கூலி கிடைக்கிறது. வண்ணம் பூசுபவருக்கு பணம் கிடைக்கிறது, ரோட்டு வேலைக்காரருக்குகூட சம்பளம் என்று ஒன்று கொடுக்கிறார்கள். ஆனால் எழுத்தாளர் மட்டும் இலவசமாக எழுதித் தரவேண்டும் என்று எதிர்பார்ப்பது தொடர்கிறது. சில காலத்துக்கு முன்னர் ஓர் ஓவியர் எனக்கு அறிமுகமானார். என்னுடைய சிறுகதைகளை தான் படித்திருப்பதாகக் கூறினார். எப்படி, எங்கே படித்தீர்கள் என்று ஆவலோடு கேட்டு மகிழ்ச்சிப் படுவதற்கு தயாரானேன். அவர் பதில் சொல்லாமல் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார். 'ஏன் உங்களுக்கு தெரியாதா? உங்கள் சிறுகதைகளுக்கு ஓவியம் வரைந்திருக்கிறேன்.' என்றார். 'அப்படியா? உங்கள் படங்களுக்கு சன்மானம் கிடைத்ததா?' என்று கேட்டேன். அவர் இல்லை என்று சொல்வார் அவருடன் சேர்ந்து துக்கம் கொண்டாடலாம் என நினைத்தேன். அவர் ஆர்வம் குறையாமல் கிடைக்கிறதே என்று சொன்னதுடன் எவ்வளவு என்றும் சொன்னார். என்னுடைய எந்தச் சிறுகதைக்கும் அப்படியொரு தொகை கிடைத்ததில்லை. எனக்கு பெரும் அதிர்ச்சியாகி விட்டது. எழுதுவதை விட்டுவிட்டு இனிமேல் படம் வரைய ஆரம்பித்தால் என்னவென்று என்னை தீவிரமாக யோசிக்க வைத்தது. அது எப்படி எழுதியவருக்கு ஒன்றுமில்லை ஆனால் அந்தச் சிறுகதைக்கு படம் வரைந்தவருக்கு சன்மானம் கொடுக்கிறார்கள் என்பது புரியாத மர்மமாகவே ஆகிவிட்டது. நான் அவர் குறிப்பிட்ட சிறுகதையை இரண்டு வாரங்களாக எழுதினேன். ஏறக்குறைய 40 மணித்தியாலங்கள். இதற்கு படம் வரைவதற்கு ஓவியருக்கு நாலு மணித்தியாலங்கள் தேவைப்பட்டிருக்கும். இருந்தும் ஓவியருக்கு நல்ல சன்மானம் வழங்கப்பட்டது. பத்து மடங்கு அதிக நேரம் உழைத்திருந்த ஆசிரியருக்கு ஒன்றுமே கிடையாது. இங்கிலாந்தில் 1812ம் வருடம் சார்ல்ஸ் டிக்கின்ஸ் பிறந்தபோது ஆங்கிலத்தில் 66 நாவல்களே இருந்தன. அந்தக் காலத்தில் நாவல்கள் எழுதுவது மரியாதையான தொழிலாகப் பார்க்கப்படவில்லை. சார்ல்ஸ் டிக்கின்ஸ் 1870ல் இறந்தபோது நாவல் இலக்கியத்தைப் பற்றிய உலகப் பார்வை மாறிவிட்டது. நாவலை தொடராக எழுதி பிரபலமாக்கியது சார்ல்ஸ் டிக்கின்ஸ்தான். அவருடைய மூளையில்தான் அவர் எழுதும் கதைகளுக்கு சித்திரம் வரைந்து பிரசுரித்தால் வாசகர்களிடம் நல்ல வரவேற்பு கிடைக்கும் என்று தோன்றியது. அந்தக் காலத்தில் நல்ல சித்திரங்கள் வரைபவர் என்று பெயரெடுத்த Samuel Luke Fildes என்பவரை அணுகி தன்னுடைய கதைகளுக்கு சித்திரம் வரையக் கேட்டுக் கொண்டார். இருவரும் கலந்தாலோசித்து எப்படி சித்திரங்கள் அமையவேண்டும் என்பதை முடிவு செய்வார்கள். அப்படியே கதையுடன் சித்திரமும் வெளிவரும். ஒலிவர் ட்விஸ்ட் நாவலுக்கு சித்திரம் வரைந்தது George Cruikshank என்பவர். சார்ல்ஸ் டிக்கின்ஸ் இறந்தபிறகு தான்தான் ஒலிவர் ட்விஸ்ட் நாவலுக்கு கரு கொடுத்து எழுதவைத்தவர் என்று அவர் அதற்கு உரிமை கோரினார் என்பது வேறு விசயம். இப்படி ஆரம்பித்துத்தான் சிறுகதைகளுக்கு படம் வரையும் மரபு ஏற்பட்டது. இப்பொழுது ஆங்கிலத்தில் சிறுவர் கதைகளுக்குத்தான் படங்கள் வரையப்படுகின்றன. பெரியவர்கள் கதைகளுக்கு படம் வரைவதில்லை ஆனால் புகைப்படங்கள் வெளியாவதுண்டு. ஏனோ இந்த மரபு இன்றும் தமிழ் பத்திரிகைகளில் தொடர்கிறது. ஒருமுறை பத்திரிகாசிரியரிடம் பேசியபோது 'ஏன் சிறுகதைகளுக்கு படம் போடுகிறீர்கள்?' என்று கேட்டேன். அவர் கையிலிருந்த செல்பேசியால் பல்லைத் தட்டிக்கொண்டு சொன்னார் 'படங்களை பார்த்து வாசகர்கள் ஈர்க்கப்பட்டு சிறுகதைகளைப் படிக்கிறார்கள்' என்று. ஒரு படத்தைப் பார்த்து வாசகர்களைக் கவரும் விதமாகத்தான் தற்போதைய சிறுகதைகள் இருக்கின்றன என்று நினைத்துக்கொண்டேன். ஓவியர்களை உற்சாகப் படுத்தவேண்டும். ஊக்கம் கொடுத்து அவர்கள் சித்திரங்கள் பல வாசகர்களைச் சென்றடையவேண்டும். அவர்கள் பொதுவான படங்கள் வரைந்து கொடுக்கலாம். அவற்றை பத்திரிகைகள் வெளியிடலாம். ஆனால் எதற்காக அவர்கள் சிறுகதைகளுக்கு படம் வரைகிறார்கள். அதனால் அவர்களும் சிறுமைப்பட்டு சிறுகதை ஆசிரியர்களும் சிறுமைப்படுகிறார்கள்.

**- அ. முத்துலிங்கம் -**

நான் ஒரு சிறுகதை எழுதி அது பத்திரிகையில் பிரசுரமானால் அதன் தலைப்பை பார்த்துவிட்டு என் சிறுகதையை படிக்க ஆரம்பிக்கலாம். அல்லது என்னுடைய பெயரைத் தெரிந்துகொண்டு சிறுகதைக்குள் நுழையலாம். அல்லது சிறுகதையின் முதல் பத்து வசனங்களைப் படித்துவிட்டு அந்த சிறுகதையை படிப்பதா விடுவதா என்பதை தீர்மானிக்கலாம். ஒரு படத்தை பார்த்து சிறுகதையை வாசிக்கத் முடிவெடுப்பது என்பது ஓர் எழுத்தாளருக்கு எத்தனை அவமானம். அதிலும் பார்க்க கூடிய அவமானம் சித்திரம் வரைந்தவருக்கு சன்மானம் கொடுத்து எழுத்தாளரை கவனிக்காமல் இருப்பது. ஒருமுறை என்னுடைய கதை ஒன்றுக்கு சித்திரம் வரைந்திருந்தார்கள். அதிலே ஒரு பெண் உட்கார்ந்து தலையிலே சீப்பை வைத்து சீவிக்கொண்டிருந்தார். அந்தக் கதையில் எந்த இடத்திலும் ஒரு பெண் தலை முடி சீவவில்லை. ஒருவேளை கதை ஆரம்பிக்க முன்னர் சீவியிருப்பார் அல்லது முடிந்த பின்னர் சீவியிருப்பார். இந்தப் பெண்ணுக்கும் சிறுகதைக்கும் என்ன சம்பந்தம்? வேறு ஏதோ சிறுகதைக்கு கீறிய படம் என்னுடைய சிறுகதைக்கு தவறாக வந்திருக்கலாம். அல்லது பொதுவான சில சித்திரங்களை வரைந்து வைத்து அவ்வப்போது அவற்றை பயன்படுத்துகிறார்களோ தெரியவில்லை. ஒரு வாசகர் படத்தை பார்த்துவிட்டு சிறுகதையை படிக்காமல் போவதையும் நான் கவனித்திருக்கிறேன். இந்த நிலையில் ஒரு சிறுகதைக்கு படம் போடுவதில் பெரிய பயன் எதுவும் இருப்பதாக எனக்குப் படவில்லை. சங்க நூல்களில் என்னை மிகவும் ஆச்சரியப்படுத் தியது ஆற்றுப்படை இலக்கியம்தான். உலகத்தில் வேறு எந்த இலக்கியத்திலாவது இப்படியான படைப்புகள் இருக்கின்றனவா என்று விசாரித்ததில் இல்லையென்றே சொல்கிறார்கள். ஒரு பாணன் அரசனைத் தேடி வருகிறான். பாடிப் பரிசு பெற்று திரும்பும்போது இன்னொரு பாணனை பார்க்கிறான். அவனை அவன் ஆற்றுப்படுத்துகிறான். இன்னமாதிரி ஓர் ஊரில் இன்னமாதிரி ஓர் அரசன் இருக்கிறான். அவனிடம் பாடிப் பரிசு பெற்றுக்கொண்டு நான் திரும்புகிறேன். நீயும் அவ்வாறே போய் பாடி பரிசு பெறலாம் என்று அவனுக்கு எப்படி அந்த ஊருக்கு போவது என்று வழி சொல்கிறான். அந்தக் காலத்தில் வரைபடமோ, திசைப்பலகை களோ, GPS ஓ கிடையாது. இப்படி யாராவது வழி சொன்னால்தான் உண்டு. இந்தப் புலவர் போய் பாடிப் பரிசு பெறுவார். பின்னர் அவர் திரும்பும்போது இன்னொரு புலவருக்கு சொல்வார். அவர் போய் பாடி பரிசு பெறுவார். எறும்புகள் உணவு கண்டதும் ஒன்றுக்கு ஒன்று செய்தி பரிமாறி எல்லா எறும்புகளும் அந்த திசையில் படை எடுப்பதுபோல புலவர்களும் புறப்படுவர். இதிலே ஒரு ரகஸ்யம் இருக்கிறது. அனைத்து அரசர்களும் தேரும், யானையும், பொன்னும், மணியும் கொடுத்து புலவர்களை வழியனுப்புவதில்லை. புறநானூற்றில் ஓர் அருமையான பாடல் உள்ளது. பெருங்குன்றூர் கிழார் வயிறு எரிந்து பாடியது. ஒன்றும் இல்லை என்று அரசன் சொன்னால் புலவர் திரும்பியிருப்பார். அப்படிச் சொல்லவில்லை. பரிசு வருகிறது வருகிறது என்று நம்பிக்கையூட்டியதில், புலவர் பல நாள் வாசலில் நின்று களைத்து வெறுங்கையோடு வீடு திரும்புகிறார். 'நீ பெரிய வள்ளல் என்று நினைத்து உன்னிடம் வந்தேன். தருவாய் தருவாய் என நினைத்துக் காத்திருந்தேன். வீட்டிலே ஒன்றுமில்லை. பசியோடு மனைவியும் என் குழந்தையும் காத்திருக்கிறார்கள். நான் திரும்புகிறேன். நீ வாழ்க.' ஈயாத பல அரசர்கள் இருந்ததால் ஓர் அரசன் தந்தவுடன் புலவர்கள் அவனை ஒருவருக்கொருவர் அடையாளம் காட்டுவது அவசியமாகிறது. அவர்களும்போய் பாடி பரிசு பெறுகிறார்கள். இந்தக் காலத்தைப் போல அந்தக் காலத்திலும் சன்மானம் கொடுக்காமல் அலைக்கழித்த அரசர்கள் பலர் இருந்தார்கள். ஆங்கிலத்தில், சார்ல்ஸ் டிக்கின்ஸ் காலத்தில், ஒரு புத்தகத்துக்கு இவ்வளவு என்று பதிப்பாளர் முன்கூட்டியே பணம் கொடுத்துவிடுவார். புத்தகங்கள் வெளியிட்டு காசு பார்ப்பது சிரமமான காரியம். ஆனால் சார்ல்ஸ் டிக்கின்ஸ் ஆரம்பத்தில் இருந்தே எழுத்துக்கு சன்மானம் வாங்கும் விசயத்தில் எச்சரிக்கையாக நடந்து கொண்டார். அவரிடம் அப்போதெல்லாம் பணம் இல்லை. அவர் Pickwick நாவலை பத்திரிகையில் தொடராக ஒவ்வொரு மாதமும் ஒன்றரை பக்கம் எழுதினார். அதற்கு 15 கினிக்கள் சன்மானம் என்பது ஒப்பந்தம். தொடக்கத்தில் திருமணம் செய்து கொள்வதற்கு பணம் தேவைப்பட்டதால் இரண்டு மாத சன்மானத்தை முன்பணமாக பெற்றுக் கொண்டார். இப்படி பணக்கஷ்டத்தில் ஆரம்பித்த அவர் வாழ்க்கையில் போகப் போக செல்வம் கொட்ட ஆரம்பித்தது. ஒவ்வொரு எழுத்துக்கும் கறாராக பணம் அறவிடத் தயங்கவில்லை. ஓர் ஆங்கில எழுத்தாளர் வாழும்போதே அத்தனை பணக்காரர் ஆனதில்லை. இறந்தபோது அவரது சொத்து மதிப்பு 93,000 பவுண்டுகள். இன்றைய மதிப்பில் 10 மில்லியன் டொலர்கள்.

இப்படி தமிழில் எழுதி பணம் சம்பாதித்தவர்கள் யாருமில்லை. பாரதியும்

தொடர்ச்சி 31ஆம் பக்கம்

# கடல்

உலகின் பள்ளங்களில் நீர் நிரந்தரமாகத் தேங்கி நிற்கின்றது. அவை கடல் அல்லது சமுத்திரம் எனப்படுகின்றன. கண்டங்கள் ஆறாகும். சமுத்திரங்கள் ஐந்தாகும். அத்திலாந்திக் சமுத்திரம், பசுபிக் சமுத்திரம், இந்து சமுத்திரம், வடசமுத்திரம் தென்சமுத்திரம் என்பவையே அவையாம். பரந்த நீர்ப்பரப்பு சமுத்திரம் எனப்படும். ஆழம் குறைந்த நீர்ப்பரப்பு பரவைக்கடல் எனப்படும். இவற்றுடன் தொடுகடலும் உள்ளது. தரையின் கண்டங்களில் மலைகள் இருப்பதைப் போன்று சமுத்திரங்களின் அடியில் ஆழங்கள் உள்ளன. பசுபிக் சமுத்திரத்தில் உள்ள மிண்டியானோ ஆழம் உலகின் மிகப்பெரிய ஆழமாகும். கடலின் ஆழத்தை கண்டறிய முடியும். ஆனால் மனத்தின் ஆழத்தை கண்டறிவது அவ்வளவு சுலபமல்ல. கடல் பலவழிகளில் மனிதனுக்கு உதவுகின்றது. ஆதியில் நீர்ப் போக்குவரத்தே முக்கியம் பெற்றிருந்தது. பொருள்களையும் பண்டங்களையும் அனுப்புதற்கும், மக்கள் பிரயாணம் செய்வதற்கும் கடல் பயன்பட்டது. மிகவும் மலிவான போக்குவரத்திற்கும், காலநிலை சீராக்கத்திற்கும் கடல் பெரிதும் உதவுகின்றது. கடல் நாடுகளின் எல்லையாகவும் திகழ்கின்றது. உப்பு, மீன் போன்ற உணவுப் பொருள்களின் இருப்பிடமாகவும் கடல் உள்ளது. கடல்படு திரவியங்களான முத்து, பவளம், சங்கு, சிப்பி போன்ற பொருள்களும் கடலிலிருந்து பெறப்படுகின்றன. கடல்காற்று, ஈரக்காற்று உடலுக்கு தெம்பு தருகின்றன. கடற்கரை உலாவரும் இடமாகவும் உள்ளது. கடலே வீடாக உள்ளவர்கள் மீனவர்கள். அவர்களினது வாழ்வின் உயிராதாரம் கடலாகும். தரைமேல் பிறக்க வைத்து தண்ணீரில் அவர்களை வாழ வைக்கின்றான் இறைவன். அமைதியாக இருக்கும் இயற்கை ஆவேசம் கொள்வதுண்டு. பூமி நடுக்கம் ஏற்படுகின்றது. எரிமலை மக்களை அச்சுறுத்துகின்றன. நவீன பாதுகாப்பு முறைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ள போதிலும் இவற்றிலிருந்து மனிதன் தன்னை காத்துக் கொள்ள முடியாதுள்ளது. இயற்கையின் சீற்றத்தின் முன் மனிதன் ஒரு சிறு துரும்பே. வாழ்க்கைக் கடலை கடப்பதற்கு நாளாந்தம் மக்கள் படும் வேதனைகளும் சோதனைகளும் சொல்லில் அடங்காதவை.



கக்குகின்றது. கடலில் சுனாமி ஏற்பட்டு நிலத்தையும் மக்களையும் ஏப்பம் விடுகின்றது. காட்டுத்தீ ஏற்பட்டு பெரும் அழிவை ஏற்படுத்துகின்றது. காற்று புயலாக சூறாவளியாக மாற அனர்த்தத்தை உண்டு உண்டுபண்ணுகின்றது. இடிமின்னலும், முழக்கமும், பெருமழையும் ஏற்பட்டு காற்று சுழன்றடித்து கலத்தை கவிழ்ப்பதும் உண்டு. சுறாமீன்கள் புரட்டி விடுவதுமுண்டு. தரை தட்டி கலம் உடைந்து விடுவது முண்டு. நவீன கப்பல்களும் கடலில் சங்கமாகி விடுவதுண்டு. இதுவே கடல் உணர்த்தும் பாடமாகும்.

விரிந்த பரந்த, பெரிய, இடமகன்ற நீர்ப்பரப்பு கடல் என்றாலும் உருவில் பெரிய ஒன்றினை கடல் என்று சொல்வதில் பிழை யில்லையன்றோ! எனவேதான் அறிவுக்கடல், இரப்பவர்கடல், பகைவர்கள் கடல், இன்பக்கடல் என்றும் கூறப்படுவதுண்டு. இக்கரையில் இருந்து அக்கரைக்குப் போவதற்கு கலமும் ஓட்டியும் வலிக்கும் தண்டும் தேவை. அப்பொழுது பயணம் சுகமாகின்றது. தசரதன் நால்வகைக் கடல்களைக் கடந்தான் என்று கம்பர் கவினுறக் காட்டுகின்றார். ஆய்ந்து கடந்தால் அறிவுக்கடல் என்றும் ஈந்து கடந்தால் இரவலர் கடல் என்றும், சாய்ந்து கடந்தால் பகைவர்கள் கடல் என்றும், தோய்ந்து கடந்தால சிற்றின்பக்கடல் என்றும் கூறப்படுவதுண்டு. மிதவையாக இல்லாமல் துறை நோக்கிய பயணத்திற்கு துணிச்சலும் உறுதியும் மிக அவசியமாகும். கப்பல் கரைவந்து சேர்ந்து விட்டால் உணவு நமக்கு. கடலில் கவிழ்ந்து விட்டால் மீனுக்கு உணவு. அறிவுக் கடலாகவும் அன்புக் கடலாகவும் மனிதன் இருக்கும்வரை அகிலம் ஆனந்தம் பொங்கும் இடமாக மாறிவிடும்.



நா. க. சிவராமலிங்கம்

# சன்மானம்

புதுமைப்பித்தனும் அனுபவித்த வறுமை எல்லோருக்கும் தெரியும். கடந்த 50 வருடங்களில் ஒரு சிலர் தமிழில் எழுத்துக்கு நல்ல ஊதியம் பெறும் நிலை வந்திருக்கிறது. ஆனால் அது விதிவிலக்கு. அவர்கள் அடுத்தவரை ஆற்றுப்படுத்த வில்லை. பெரும்பாலான எழுத்தாளர்கள் மதிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. அவர்களுக்கு தகுந்த சன்மானமும் கிடைக்கவில்லை. சங்ககாலப் புலவர் போல பலருக்கு வாசலில் நின்று வெறுங்கையோடு திரும்பிப் போகும் அவலம்தான் இன்றைக்கும். வட அமெரிக்க தொலைக் காட்சிகளில் அடிக்கடி காணப்படும் எழுத்தாளர் ஒருவரை தொலைபேசியில் அழைத்துக் கேட்டேன், 'அவருக்கு ஏதாவது சன்மானம் கிடைக்கிறதா?' என்று. அவர் சொன்ன பதில் எனக்கு முற்றிலும் புதிதாக இருந்தது. அவருடைய நேர்காணல்கள் பல சானல்களில் வந்திருக்கின்றன. நிபுணராக வும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார். செய்தி சானல்களில் அவரை யாராவது பேட்டி கண்டால் அதற்கு சன்மானம் கிடைக்காது. அது செய்தி சம்பந்தமானது, சன்மானம் கொடுத்தால் செய்தியின் தன்மை மாறிப்போய்விட வாய்ப்பிருக்கிறது. ஆனால் நிபுணராகவோ வேறு விதமாகவோ பங்கு பற்றினால் அதற்கு சன்மானம் உண்டு. அப்படிப் பார்த்தால் எழுத்தாளர் வெ.சா ஒரு நிபுணராக தொலைக்காட்சியில் பங்கேற்று ஐந்து நிமிடம் பேசியிருக்கிறார். இந்த தொலைக்காட்சி நிறுவனம் 10 செக்கண்ட் விளம்பரத்துக்கு 30,000 ரூபா அறவிடுகிறது என்று சொல்கிறார்கள். அப்படியானால் வெ.சாவின் 5 நிமிடத்துக்கு அவர்கள் ஊதியமாகத் தரவேண்டிய தொகை ரூபா 900,000. இதை அவர்கள் தரப்போகிறார் களா? 'உங்களால் எங்களுக்கு 5 நிமிடம் வீணாகிவிட்டது. அந்த நேரத்துக்கு நாங்கள் விளம்பரமாக ரூபா 900,000 சம்பாதித்திருப் போம், அது நட்டமாகிவிட்டது. அதை நீங்கள் தரவேண்டும்' என்று நிறுவனத்தினர் பெருந்தன்மையுடன் வெ.சா விடம் கேட்காமல் இருப்பதற்கு மகிழவேண்டும்.

END

## வேலணை திருமதி. வரத சண்முகநாதன் எழுதிய இருநூல்கள் வெளியீடு விழா!

திருமதி. வரதா சண்முகநாதன் (வேலணை மலர் ரீச்சர் முன்னாள் ஆசிரியை, செங்குந்தா இந்துக்கல்லூரி, வேலணை மத்திய கல்லூரி, வேம்படி மகளீர் கல்லூரி), நூலாசிரியர் எழுதிய தமிழில், **'ஒரு மலரின் குரல்'** என்ற கவிதைத் தொகுப்பு, ஆங்கிலத்தில், ***'VERSE AND PROSE'*** என்ற கவிதைகளும், கட்டுரைகளும் அடங்கிய, இருநூல்கள் வெளியீடு விழா, எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 04ஆம் திகதி (04.08.2012), சனிக்கிழமை, பிற்பகல் 3.00 மணி தொடக்கம், மாலை 6.00 மணிவரை ஸ்காபரோ நகராட்சி மன்ற சபா மண்டபத்தில் ***(Scarborough Civic Centre, Council Hall)*** சிறப்பாக நடைபெறும்.

நூலாசிரியரின் பழைய மாணவர்கள், மற்றும் அன்பர்கள் அனைவரையும், விழாவிற்கு அன்புவருகை தந்து, விழாவைச் சிறப்பிக்குமாறு, நூலாசிரியர் அன்புடன் அழைக்கின்றார்.

மேலதிக தொடர்புகளுக்கு -***905.882.4069***

## வியாபாரி மூலை நெல்லண்டை மக்களின் 13ஆவது கோடை கால ஒன்றுகூடல்

**காலம்:** சனிக்கிழமை ஆவணி மாதம் 4ஆம் திகதி, 2012
**இடம் :** மிலிக்கன் பார்க்கிலுள்ள (Milliken park) Area B
**நேரம்:** காலை 10.00 மணி தொடக்கம் மாலை 8.00 மணி வரை நடைபெறவுள்ளது.

வியாபாரி மூலை நெல்லண்டை மக்கள் அனைவரையும் ஒன்று கூடலில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வியாபாரி மூலை நெல்லண்டை ஒன்றியம்.


**905.209.7244 / 416.454.6360 / 416.391.3237**

Super Visa Insurance
Age 65: $2100 - Age 70: $2400
*Full Refund if visa denied*
▸ ஆயுள்காப்புறுதி ▸ Travel Insurance
▸ மருத்துவ சோதனையற்ற காப்புறுதி
Multiple Services
பல்வகை சேவைகள்
416 500 9475

Education Savings Plan
உயர் கல்விக்கான சேமிப்பு
▸ வருமானம் குறைந்தவர்கட்கு $2000
Canada learning bond $2000
▸ அத்துடன் உங்கள் சேமிப்பிற்கு 20 வீத ($7200) வரை அரச உதவி
Canada Education Savings Grant upto $7200
▸ வருமானவரி ▸ Resume writing ▸ ஸ்பொன்சர், PR, பாஸ்போட், விசா, OAS, CPP Applications
T. Munnaiathan BSc (M Eng). Insurance Advisor & RESP Representative, Former Engineer Srilanka Railways

# “உலகின் எந்தச் சினிமாவைப் பார்த்தாலும் அதனது பாதிப்பை அதனது வரலாறு மற்றும் மண் சார்ந்த பின்னணியில் தமிழ் சினிமா பார்வையாளனும் சரி இயக்குனரும் சரி புரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை.”

## யமுனா ராஜேந்திரனுடன் ரதன் உரையாடல்



**உலக சினிமாவின் வளர்ச்சி இன்று பல விடயங்களை ஆய்வுக்குட்படுத்தியுள்ளன. அண்மைக் காலங்களில் நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் நடிப்பு பற்றிய எதிர்மறைக் கருத்துக்கள் வெளி வருகின்றன. அதேசமயம் சிவத்தம்பி போன்றோர் தமிழ் பண்பாட்டின் ஒரு அடையாளமாக சிவாஜியை குறிப்பிடு கின்றார். உங்களது கருத்து என்ன?**

சிவாஜி கணேசனை முன்னிறுத்திய கேள்வி என்பதால் பதிலும் அவரை முன்னிறுத்திய தாவே சொல்ல விரும்புகிறேன். பராசக்தி, பாசமலர், பாகப்பிரிவினை, வியட்நாம் வீடு, தங்கப்பதக்கம், உயர்ந்த மனிதன், முதல் மரியாதை என்கிற படங்கள்தான் சிவாஜி கணேசனை நினைக்கும் போது உடனடியில் ஞாபகம் வருகின்றன. சிவாஜி கணேசன், அவரை தீவிரமாகப் பிரதி பண்ணிய எஸ்.வி.சுப்பையா, வி.எஸ்.ராகவன், அவரை மென்மையாகப் பிரதி பண்ணும் கமல்ஹாஸன் மற்றும் ரஜினிகாந்த் போன்றோரை ஒரு புறமும், ரகுவரன், நாஸர், சத்யராஜ் போன்றோரை பிறிதொரு புறமும் நிறுத்தி தமிழ் சினிமா நடிகர்களின் நடிப்பு சார்ந்த வித்தியாசங்களைப் பேச முனைகிறேன். தாம் ஏற்ற பாத்திரப் படைப்புக்களை ‘மெருகுபடுத்தி’ அல்லது அதீத ‘நாடகீயமாக்கி’ அதனை ஒரு ‘பாணி யாக’க் கடைப்பிடித்தவர்கள் என முன்னவர்களைச் சொல்லலாம். தாம் ஏற்ற பாத்திரங்களை நான் முன்னே சொன்ன எதுவும் செய்யாமல் இயல்பில் அந்தப் பாத்திர மனிதர்களாகவே ஆகும் நடிப்பை ரகுவரன், சத்யராஜ், நாஸர் போன்றவர் களிடம் காணலாம். இவர்கள் மூவரையும் பிற எந்தவொரு நடிகரோடும் வைத்து நாம் ஒப்பிட்டுப்பேச முடியாது. இதேவிதமான பண்பு கொண்ட இளையதலைமுறை நடிகர்கள் என அஜீத்தையும் தனுஷையும் நாம் குறிப்பிடலாம். சிவாஜிகணேசனது நடிப்பு அதீதமாக உணர்ச்சி ஊட்டப்பட்ட நடிப்பு. ரகுவரனின் நடிப்பு பாத்திரத்துக்குத் தேவையான இயல்பான நடிப்பு. சிவாஜி கணேசன் படம் முழுக்க நவரச உணர்ச்சி வசம் கொண்டவராகவே தோன்றுவார். ரகுவரன் காட்சிக்குத் தேவையான உணர்ச்சி களை மட்டுமே இயல்பாக வெளிப்படுத்துவார்.

சிவாஜி குறித்த சிவத்தம்பியின் மதிப்பீடு தமிழ்சினிமாவில் இருக்கிற படங்களில், அதிகமாகப் பார்க்கப்பட்ட படங்கள், எண்ணிக்கையில் அதிகமான தனிப்பட்ட நடிகர் ஒருவர் நடித்த படங்களின் தன்மை குறித்த மதிப்பீடு எனும் அளவிலேயே வருகிறது என நினைக்கிறேன். பி.யு. சின்னப்பா, கிட்டப்பா, தியாகராஜ பாகவதர் போன்றோரின் புராண, சரித்திரப் படக் காலத்தையடுத்து, திரைப்படம் நவீன சமூகம், உறவுகள் சார்ந்ததாக ஆகும்போது, எம்.ஜி.ஆர்-சிவாஜி எனும் பெரும் எதிர்மையில் எம்.ஜி.ராமச்சந்திரனின் படங்கள் அதிகமும் புறநிலைச் சமூகம், சமூகத்திற்கான தனிநபரது பொறுப்புக்கள், சமூகத்திற்கான அவரது கடமைகள், அதற்காக உறவுகளை இரண்டாம்பட்சமாகக் கருதுவது போன்றவற்றையே சித்தரித்தன. சிவாஜி கணேசனின் பெரும்பாலுமான படங்கள் குடும்ப வாழ்வும், உறவுச் சிக்கலும், கூட்டுக் குடும்பச் சிதைவும், கை விடப்பட்ட முதியவர்களும் பெற்றோர்களும் குறித்ததாகவே இருந்தன. குடும்பம் ஒரு சமூகத்தின் பண்பாட்டைப் பேணும், வெளிப்படுத்தும் உடனடி சமூக அலகு எனக் கருதுவோமானால் சிவாஜி கணேசன் ஏற்ற பாத்திரங்கள் அவரைத் தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாக முன்வைத்தது என்பதனைப் புரிந்து கொள்வதில் நமக்குப் பிரச்சினைகள் இருக்காது. பிள்ளைகளால் கைவிடப்படும் வியட்நாம் வீடு ரிடயர் முதியவர், தங்கைக்காகவே வாழ்ந்து அவமானத்தையும் துயரையும் சுமக்கும் பாசமலர் அண்ணன், மனைவியால் அவமானப்படுத்தப்படும் முதல் மரியாதைக் கணவன். இந்த வழியில் முதல் மரியாதையில் சிவாஜி கணேசனின் சித்திரம் அவரது திரைவாழ்வின் உச்சம் என்றே நாம் சொல்ல வேண்டும்.

**மார்க்சிய விமர்சகர்கள் உட்பட பலர் கே. பாலச்சந்தரை பாராட்டுகின்றார்கள். பாலச்சந்தர் நாடக மொழிக்கு அப்பால் தமிழ் சினிமாவிற்கு எதையும் செய்யவில்லை என்ற கருத்தும் உள்ளது. நீங்கள் அவரை எப்படி மதிப்பிடுகிறீர்கள்?**

பாலச்சந்தரின் முக்கியத்துவம் அவர் காட்சிரூப சினிமா எடுத்தவரா அல்லது நாடகமேடைச் சட்டகத்தை திரைச் சட்டகத்திற்குப் பெயர்த்தவரா என்பதில் இல்லை என நினைக்கிறேன். வேலைக்குப் போகிற மத்தியதர வர்க்கத்துக் கூட்டுக் குடும்பப் பெண்கள் எதிர்கொள்கிற பாலுறவு சார்ந்த உளவியல் சிக்கல்களை, பொருளியல் சார்ந்த உறவுச் சிக்கல்களை அவரது படங்கள் பேசின என்பதில்தான் அவரது படங்களின் முக்கியத்துவம் இருக்கிறது. தனித்த ஆளுமையாகப் பெண்கள் சமூகத்தில் இடம்பெறும்போது குடும்பத்தினுள் ஏற்படும் உறவுச் சிக்கல் களையும் அவர் படங்கள் வெளிப்படுத்தின. சுருக்கமாகச் சொல்வதானால் மத்தியதர-வர்க்கப் பெண்களை மையமான கதாபாத்திரங்களாகக் கொண்டதாக அவரது பெரும்பாலுமான படங்கள் இருந்தன. ஆண்மையச் சினிமாவாக இருந்த தமிழ் சினிமாவை பெண்மையப் பாத்திரப் படைப்பு கொண்டதாகவும் நகர்த்தியதில்தான் அவரது முக்கியத்துவம் இருக்கிறது. அவரது படங்களை ஒரு பட்டியலுக்குள் நாம் நிரல்படுத்துவோமானால் தமிழ் மரபுச் சட்டகங்களில் இருந்து பாலுறவு மீறல் புரிய யத்தனித்த பெண்களையும், பாலுறவு மீறல் புரிந்த பெண்களையும் அவரது படங்கள் அதிகமாகச் சித்திரித்தன என்பதனை நாம் பார்க்க முடியும். நாடக மேடைச் சட்டக சினிமாவாகவே தமிழ் சினிமா இருந்த காலகட்டத்தில்தான், அதே நாடக மேடைச் சட்டக சினிமாவுக்குள் பெண்களை மையப்படுத்தியதாக பாலச்சந்தரின் படங்கள் பிரவேசித்தன. தமிழ் சினிமாவின் முக்கியமான பெண் ஆளுமைகளான சிறி வித்யா, பிரமிளா, சிறிப்ரியா, ஜெயந்தி, ஜெயப்பிரதா, ஜெயசித்ரா, சரிதா, சுஹாசினி, கீதா, சுஜாதா போன்றவர்கள் பாலச்சந்தரின் படங்களில் இருந்துதான் தோற்றம் பெற்றார்கள். ரஜினிகாந்த், கமல்ஹாஸன் போன்றவர்கள் நடித்த படங்களிலும் கூட பிர-தான பாத்திரங்களை பெண்களே ஆளுமை செய்தார்கள். இதுதான் பாலச்சந்திரன் முக்கியத்துவம் என நினைக்கிறேன்.

இணையம் என்பது சினிமா பார்க்கும் பார்வையாளர் கலாச்சாரத்திலும், சினிமாவை உருவாக்கும் இயக்குனர் கலாச்சாரத்திலும் நிறைய பாதிப்புக்களைக் கொண்டு வந்திருக்கிறது. முதலில் ஹாலிவுட் படங்களின் வீடியோக்களைப் போட்டுப் பார்த்து கதைகளைத் தயார் செய்தவர்கள் இப்போது ஐரோப்பிய, ஜப்பானிய, ஈரானிய, தென் கொரிய சினிமாக்களின் டிவிடிக்களைப் போட்டுப் பார்த்து அல்லது இணயத்தில் பார்த்து கதைகளைத் தயார் செய்கிறார்கள். இன்றைய இளம் இயக்குனர்களும் உதவி இயக்குனர்களும் காலச்சுவடு, உயிர்மை, உயிர் எழுத்து போன்ற இடைநிலை இதழ்களை வாசிக்கிறார்கள். சுஜாதா, பாலகுமாரன் போன்றோருக்குப் பதில் ஜெயமோகன், எஸ்.ராமகிருஷ்ணன், சாரு நிவேதிதா போன்றவர்களை வாசிக்கிறார்கள். இப்படி மூன்றாம் உலக, ஆசிய-ஆப்ரிக்க-இலத்தீனமெரிக்க நாடுகளின் சினிமா அல்லாத ஹாலிவுட், ஐரோப்பிய, ஜப்பானிய, ஈரானிய சினிமாக்கள் தமிழ் சினிமா இயக்குனர்களின் மீது பாதிப்பைச் செலுத்தியிருக்கின்றன.

இடைநிலை இதழ் இலக்கியவாதிகள் தமிழ் சினிமாவின் மீது பாதிப்புச் செலுத்தி யிருக்கிறார்கள். இலக்கியத்தில் உன்னத மும், அகஎழுச்சியும் பேசுகிற இலக்கியவாதி கள் கடைசியில் சிந்து சமவெளிக்கும், அவன் இவனுக்கும், சண்டைக் கோழிக்கும் வசனம் எழுதுகிறார்கள். இந்த விசுவாசத்துக் காக நிலவும் சந்தைச் சினிமாவை இவர்கள் போற்றிப் பாடவும் செய்கிறார்கள். இவர்களது வாசகர்கள் தாஸ்த்தயாவஸ்க்கியும் இயக்குனர் சாமியும் ஒரே மாதிரி ஆட்கள் எனக் குழப்பம் அடையாமல் இருந்தால் அது தமிழ் இலக்கியத்துக்கும் தமிழ் சினிமாவுக்கும் நல்லது.

யமுனா ராஜேந்திரன் சுமார் 20க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். உலக அர சியல், லத்தீன் அமெரிக்கா, சினிமா, மார்க்சிய விமர்சனம் போன்ற துறைகளில் இவரது நூல்கள் வெளிவந்துள்ளன. புலம் பெயர் தமிழராக இலண்டனில் நீண்ட காலமாக வாழ்ந்து வருகின்றார். கோயம்புத்தூர் இவரது பிறப்பிடம். அண்மையில் ரொரண்ரோவில் நடைபெற்ற தமிழியல் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த இவர் விளம்பரத்துக்காக பிரத்தியேகமாக அளித்த பேட்டி இது.

ஆனால், பாலச்சந்தர் ஒரு இயக்குனராகத் தனது படைப்புக்களில் மிகமோசமாக இடையீடு செய்து, பாத்திரங்களை இயல்பாக வளர்ச்சியடைய விடாமல் செய்து, தனது சமூக நம்பிக்கைகளின் பொருட்டு, மரபார்ந்த சமூகத்தை மீறும் பெண்களை பைத்தியங்க ளாக, நரம்புத் தளரச்சியாளர்களாக, தற்கொலை செய்து கொள்கிறவர்களாக அழித்தொழித்தார் என்ற அவப்பெயருக்குப் பொருத்தமானவராகவும் ஆனார் என நினைக்கிறேன். புதிய தொழில்நுட்பம் தமிழ் சினிமாவில் வளர்ச்சியுற்ற காட்சிரூப சினிமா வின் காலத்தில், பாலுறவு மீறல்கள் என்பது கலாச்சார அதிர்ச்சியாக அல்லாமல் மிக இயல்பாக தமிழ் சினிமாவில் ஆகின காலத்தில் பாலச்சந்தரின் பின்னைய படங்கள் காலப் பொருத்தமற்றவையாக, கவனிக்கப் பெறாமல் போனது என நான் நினைக்கிறேன்.

**அண்மைக் காலங்களில் தமிழ்த் திரைப்படங்களில் ஒரு மாற்றம் தெரிகி ன்றது. இது வெகுஜன சினிமாவின் பெரிய நடிகர்களால் தாங்க முடியாமலும் உள்ளது. இந்த மாற்றம் தொடருமா?**

தமிழ்சினிமா தேர்ந்த தொழில்நுட்பக் கலைஞர்களைக் கொண்டிருக்கிறது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. திரைக்கதைகளை நுட்பமாக அமைக்கிறார்கள் என்பதிலும் சந்தேகம் இல்லை. பாலுமகேந்திரா, மகேந்திரன் போன்ற ஓர்மை கொண்ட கலைஞர்களை அவர்களுக்குப் பின்னான தமிழ் சினிமா உருவாக்கி இருக்கிறதா? சேரன், பாலாஜி சக்திவேல், ஜனநாதன், சற்குணம் என விரல் விட்டு எண்ணத் தக்கவர்களையே நாம் இப்படி ஒப்பிட்டுப் பார்க்க முடியும். குமாரராஜா ஆரண்ய காண்டம் என ஒரு கல்ட் பிலிம் கொடுத்திருக்கிறார். ஆக, தமிழ் சினிமாவில் இன்று நடந்திருக்கும் மாற்றம் என்ன? திரைக கதை எழுதுதலில் புத்திசாலித்தனம் தெரிகிறது. ஒளிப்பதிவில் புதுப்புது சோதனை முயற்சிகள் தெரிகிறது. படத்தொகுப்பில் வேகம் தெரிகிறது. ரஹ்மான் உலகவயமான கலப்பிசையைத் தருகிறார். ஒரு வார்த்தையில் சொல்வதானால், அதியற்புத மான தொழில்நுட்ப நேரத்தியுடன், தேர்ந்த நடிகர்களை வைத்து, வேறு வேறு விதமாகக் கதை சொல்லிப் பார்க்கிற புத்திசாலித்தனம் வந்திருக்கிறது. ஆனால், தமிழ் வாழ்வும், அரசியலும், மாறிவரும் சமூகம் குறித்த


**தொடர்ச்சி 34ஆம் பக்கம்**



## வாசிப்பதால் நீங்கள் முழுமைபெறுகிறீர்கள்!! சிந்திக்கவும் கற்றுக்கொள்கிறீர்கள்!!

# வாசி... நீ வாசி!

சிறுவர்களில் இருந்து பெரியோர்கள் வரை அனைவரும் விரும்புவது நூல்கள். நீங்கள் விரும்பும் தலைப்பு நீங்கள் விரும்பும் வண்ணம் உங்கள் கைகளில். உங்கள் நாளை மகிழ்வூட்டும் பொழுதுபோக்காகவோ அல்லது உங்கள் அறிவை கூர்மைப் படுத்துவதற்காகவோ நூல்களைப் படியுங்கள். சரி படிக்க நினைத்துவிட்டீர்கள், ஆனால் படிப்பதற்கு நூல்கள் இல்லையே என்ற கவலையா? நூலகம்! படிக்க வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டால் உடன் நீங்கள் நாடவேண்டியது உங்கள் நகர நூலகத்தைத் தான். ஒரு நூலில் நீங்கள் உங்கள் மூக்கை நுளைத்து விட்டீர்களானால் உங்கள் 'டென்சன்' எல்லாம் பறந்து விடும்.



இன்றைய உலகம் புத்தகங்களின் கையில். இணையத்தளம் உலகை உங்கள் விரல் நுனியில் அடக்கி இருந்தாலும் இணையத்தளத்திலும் இன்று நூல்களை எடுக்கலாம்! புத்தகங்களில் ஆர்வம் செலுத்தும் மக்கள் விஞ்ஞான வளர்ச்சியினால் அடிமைப்பட்டிருப்பது போல் தெரிந்தாலும் நூல்களின் பெருமை எந்தக் காலத்திலும் அழியாது. புத்தகங்களால் பயன் பெறாதார் எவரும் இருக்க மாட்டார்கள். நீங்கள் ஒரு நூலை படிக்கும்போது ஒவ்வொரு முறையும் புதிதாக எதையாவது கற்று இருப்பீர்கள். அது கதைப் புத்தகங்களுக்கும் இயல்பு. எம்மைப் போன்ற இளஞ்சிறார்கள் கருத்து மிகுந்த கதைகளை கற்று இருப்போம். நாம் வளர வளர உணர்ச்சியும் இரசனையும் கலந்த விரும்பத் தக்க பயன் நிறைந்த நூல்கள் வாசிக்கின்றோம். இல்லையேல் நாம் 'non fiction' நூல்கள் வாசித்தோமானால் பல தகவல்கள் அறிவோம். 'கண்டதும் கற்றவன் பண்டிதன் ஆவான்' என்பார்கள். 'வாசிப்பதால் ஒரு மனிதன் முழுமனிதன் ஆகின்றான்'என்றும் கூறுவார்கள். பிடித்ததை வாசித்து வாசிப்பு பழக்கத்தை வளர்க்க வேண்டும். பின்பு பயன் தருகின்ற அறிவு நூல்களை படிக்க வேண்டும். 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக.' என திருவள்ளுவர் சொன்னது போல் நாம் படித்தால் மட்டும் போதாது அவற்றை வாழ்க்கையிலும் கடைப்பிடிக்க வேண்டும்.

கல்வி ஒரு கருவி. ஆனால் நூல்கள் கல்விக்கு ஒரு கருவி. நல்ல நூல்களைக் கற்போம். அறிவைப் பெற்று அறிவுத் தாகம் போக்குவோம். நாங்கள் எவ்வளவு படித்தாலும் 'கற்றது கையளவு கல்லாதது கடலளவு' என்பதை மறக்கக் கூடாது. கல்விக்கு வயது இல்லை. எல்லோரும் எப்பொழுதுமே படிக்க வேண்டும். 'இளமையில் கல்வி சிலையில் எழுத்து' இளம் வயதில் படிப்பது மூளையில் நன்கு பதியும். எனவே சிறுவர்களாகிய நாங்கள் இளம் வயதிலேயே நிறைய நூல்களை வாசித்து நிறைய அறிவைப் பெறுவோம்.



**திவ்யா பிரபாகரன்**
அகவை 12

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.



# விபுலாநந்தர் வெண்பா

கடவுள் வணக்கம்

பாவின் பரிசருளிப் பாலித் தடியேனின்
ஆவி கலந்திருக்கும் ஐங்கரத்தீர் - ஆவல்
மிகவிபுலா நந்தர்வெண் பாவாக்கு வேற்குத்
தகைமைப் புலமைவரந் தா.


அவையடக்கம்

கடலைக் கடைந்தின் னமுதுகாண் பான்போல்
அடிகள் விபுலாநந் தாழி - கடையத்
துணிந்தேன் பிழையேதும் தோன்றின் பொறுக்கப்
பணிந்தேன் அறிஞர் பதம்.
(ஆழி - மாகடல்)

நூல்

அன்பாளும் ஆன்ற அறிஞர் பதியாய
மன்பேரார் மட்டக் களப்பதிலே - துன்பம்
தலைகாட்ட அஞ்சும் தமிழன்னை மஞ்சம்
கொலுவீற்றி ருப்பாள் குளிர்ந்து. (1)

ஆதவன் தோன்றும் கிழக்கில் அதுபோலத்
தீதிலா மீன்பாடும் தேன்நாட்டில் - சோதிபோல்
உம்பர் பதிகாரை தீவில் உதித்ததுவே
தம்பிப்பிள் ளைக்குழந்தை தான். (2)
(மீன்பாடும் தேன்நாடு - மட்டக்களப்பு. உம்பர் பதி - தேவர் விரும்பி வாழும் திருவிடம்.)



வானம் மழைபெய்ய வங்கக் கடல்துள்ள
கான மயிலாடக் காற்றாட - தேனார்
இசைநீ ரரமகளிர் ஏற்றமுறப் பாட
உசனன் அளித்தான் ஒளி. (3)
(உசனன் - வெள்ளி ஆகிய கோள். மட்டக்களப்புக்கு வெள்ளிதிசை பிறந்தது என்பது குறிப்புப் பொருள்.)

காவி உடைதாங்கக் கன்னித் தமிழோங்கத்
தேவர் மலர்தூவச் சீர்காரை - தீவதிலே

ஊன்றநற் கல்வி ஒழுக்கம் உணர்ந்தோம்பத்
தோன்றியதோர் தெய்வச் சுடர். (4)

தவத்தந்தை தாய்சாமித் தம்பிகண் ணம்மை
சிவத்தந்தை தந்ததெனத் தேர்ந்து - புவிவந்த
தெய்வக் குழந்தையினைச் சீராட்டி இவ்வுலகம்
உய்ய வளர்த்தார் உவந்து. (5)
(தந்தையார் - சாமித்தம்பி. தாயார் - கண்ணம்மை.)

கதிர்காமக் கந்தன் கருணையதாற் பிள்ளை
முதற்பேரைப் பெற்றோர் முருகன் - கதிசேர்
மயில்வா கனனென்று மாற்றினார் வானோர்
வியனார் மலர்தூவ வே. (6)
(வியனார் - சிறப்பு மிகுந்த.)

கதிர்வேலர் காட்டக் கருணை விபுல
மதிவாணர் ஈழத்து மண்ணின் - முதலான
பண்டிதரும் ஆகிப் படைத்தாராம் சாதனையைத்
தண்டமிழும் தானோங்கத் தான். (7)
(விபுலம் - விரிவு, பெருமை)

வாட்டமிலாக் கல்வி வளரப் படித்திலண்டன்
பாட்டுடைய விஞ்ஞானப் பட்டமதும் - ஈட்டியுயர்
ஆசிரியர் மற்றும் அதிபர் பதவிகட்கு
வீசுபுகழ் சேர்த்தார் மிக. (8)
(பாட்டுடைய - புலவராற் பாடத்தக்க பெருமையுடைய.)

கேடில்லாக் கல்வி கிறித்துவத்துச் சூழலிலே
பாடறிந்து பெற்றாலும் பண்பாளர் - பீடார்
தனையாள் சமயம் துறக்காத்தன் மானக்
கனவான் மயில்வா கனர். (9)
(பாடறிந்து - இயல்புகளை உணர்ந்து. பீடு - பெருமை. துறக்காத்தன் மான -துறக்காத தன்மானமுடைய.)

உயர்வான கொள்கை உணர்வான செய்கை
உயிராகப் பேணும் ஒழுக்கம் - துயர்தீர்க்கும்
இன்னலத்தால் சான்றோன் எனமக்கள் ஏத்திவரப்
பொன்மனத்தார் பெற்றார் புகழ். (10)



கவிஞர் வி. கந்தவனம்

# "உலகின் எந்தச்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

பிரச்சினைகளையும் உட்கொண்ட ஓர்மையுள்ள திரைப்பட இயக்குனர்கள் மற்றும் ஆளுமைகள் உருவாகி இருக்கிறார்களா? வங்கத்தின் கௌதம்கோஷ் போல, கேரளத்தின் டி.வி.சந்திரன் போல, கர்னாடகத்தின் கிரிஸ் காஸரவள்ளி போல, தெலுங்கின் நரசிங்கராவ் போல தமிழ் சினிமாவில் நாம் ஒரு ஆளுமையைச் சொல்ல முடியுமா?

அத்திபூத்தார்போல வருகிற ஒரு சில படங்கள் எமக்கு ஆச்சரியத்தைத் தரலாம். ஆளுமைகளைத் தமிழ் சினிமாவில் உருவாக்க முடியாது. இந்தச் சினிமாக்களை உருவாக்குகிறவர்கள் விருது பெற்ற உடனே அப்துல் கலாமிடம் சென்று ஆசி வாங்குகிறார்கள். எனக்குக் கூடங்குளம் மக்கள் ஞாபகம் வருகிறார்கள். அஜீத் நடித்த மங்காத்தா படத்தை நாம் எங்கு வைப்பது? வேகமும் பார்வையின்பம் தரும் படம் அதுபோல வேறு ஏதாவது உண்டா? பத்து நாட்களின் பின் அந்தப்படத்தை மீளநினைவுறுத்திப் பார்ப்பதற்கு அதில் என்ன இருக்கிறது? பாலாவின் நான் கடவுள், அவன் இவன் போன்ற படங்களும் கூட இந்தத் தரத்திலுள்ள படங்கள்தான்.

உலகின் எந்தச் சினிமாவைப் பார்த்தாலும் அதனது பாதிப்பை அதனது வரலாறு மற்றும் மண் சார்ந்த பின்னணியில் தமிழ் சினிமா பார்வையாளனும் சரி இயக்குனரும் சரி புரிந்து கொள்ள முயற்சிப்பதில்லை. தனது அறிவு மட்டத்திற்கே அதனைத் தன்வயப்படுத்தி அந்தப்பாதிப்பினை நீரத்துப் போகச் செய்துவிடுகிறான். சில படங்களை ஒப்பீடுகளுக்காகத் தருகிறேன். தமிழ் சினிமாவில் நேர்ந்த மாற்றத்தை நாம் அப்போது சரியாக எடைபோட்டுப் பார்த்துக் கொள்ளலாம். அறிமுகமற்ற சிறுவனுக்கும் முதிர்ந்த வயதுள்ள ஆணுக்கும் பயணத்தில் நேரும் உறவு குறித்த படம் தியோ ஆஞ்ஜல பெலோசின் எடர்னிடி அன்ட எ டே, பிற்பாடு ஜப்பானியப் படமான கிகுஜிரோ பாருங்கள், அதற்குப் பிறகு மிஸ்கினின் நந்தலாலா பாருங்கள். அனாதைச் சிறுவர்களும் ஒரு கடற்கரை நகர வாழ்வும் பற்றிய ஈரானியப் படம் ரன் பாருங்கள். பிற்பாடு பாண்டியராஜின் பசங்க படம் பாருங்கள். தமிழ் சினிமாவில் ஆளுமைகள் தோன்றியிருக்கிறார்கள் என்றோ அல்லது தமிழ் சினிமாவில் குறிப்பிடத்தக்க மாற்றம் நடந்திருக்கிறது எனவோ என்னால் நம்பிக்கை கொள்ள முடியவில்லை.


## இறுதியாக, கருணாநிதி ஜெயலலிதா இதற்கப்பால் தமிழகம் நகராதா?

கடைசியாக மிகுந்த சோர்வு தரும் கேள்வியைக் கேட்டிருக்கிறீர்கள். இடதுசாரிகள்- தலித்தியர்கள்-பெரியாரியர்கள்- இடதுசாரித் தமிழ்த் தேசியர்கள் இணைந்த ஒரு அரசியல் கூட்டணி தமிழகத்தின் எதிர்காலத்திற்கான இலட்சிய அரசியல் கூட்டணியாக இருக்கும். இன்றைய நிலையில் வைத்துப் பார்க்கிறபோது அதற்கான சாத்தியங்கள் மிகவும் குறைவாகவே இருக்கிறது. இரு கம்யூனிஸ்ட் கட்சிகளும் திமுக-அதிமுக கூட்டணிகளில் அங்கம் வகிக்கத்தான் விரும்புகிறார்களேயல்லாது திருமாவளவன், பா.கிருஷ்ணசாமி போன்றவர்கள் உள்ளிட்ட தலித் கூட்டணிக்கு அவர்கள் முயல்வது கூட இல்லை.

மருத்துவர் ராமதாஸினது மிகப் பச்சையான வன்னியர் சாதி அரசியல். அவர் உருவாக்குகிற தனது கட்சியின் துணை அமைப்புக்களான வெகுஜன அமைப்புக்களைக் கூட சாதி அமைப்புக்களாகவே அவர் உருவாக்குகிறார். மருத்துவர் ராமதாசுடன் ஒப்பிட திருமாவளவன் பேசுகிற அரசியல் இடதுதிசைவழியிலான அரசியலாக இருக்கிறது. தலித் அரசியலை, குறிப்பிட்ட சாதிய அடையாள அரசியலுக்கு அப்பால் ஜனநாயக உரையாடல் அரசியலாக அவர் நகர்த்திச் செல்கிறார். இன்றுள்ள அரசியல் தலைவர்களில் தமிழகத்தின் முன்னோக்கிய அரசியல் என அவருடைய அரசியலையே நாம் சொல்ல முடியும்.

ஈழ அரசியலை மட்டுமே முன்னிறுத்திக் கொண்டு, ஜெயலலிதா ஆதரவு நிலைபாட்டை எடுக்கும் நெடுமாறன், சீமான் போன்றவர்களது அரசியல் தமிழகத்தின் பல்வேறு பிரச்சினைகளில் இடதுதிசையிலான அரசியல் எனச் சொல்ல முடியாது. வை.கோபாலசாமி இளைஞர்களால், சிந்திப்பவர்களால் மதிக்கப்படும் ஆளுமை கொண்ட ஒரு அரசியல்வாதி, எனினும் திராவிட அரசியலின் சாபமான உணர்ச்சி அரசியல்தான் அவரை முழுமையாக வழிநடத்துகிறது என்பது ஒரு அவலம். இன்று அரபுப் புரட்சியையும், வால்ஸ்டீரீட்டைக் கைப்பற்றுங்கள் எழுச்சியையும் நாம் வரவேற்கிறோம். தமிழகத்தில் கூடங்குளம் மக்கள் போராட்டத்தையும் மனித உரிமை அமைப்புக்களின் போராட்டங்களையும், சேவ்தமிழ் போன்ற சிவில் சமூக அமைப்புக்களின் போராட்டங்களையும் நாம் நம்பிக்கையுடன் பார்க்க வேண்டியிருக்கிறது. திராவிட இயக்கங்கள் தொடர்பான விமர்சனங்களை இந்த புதிய சமூக இயக்கங்கள் கொண்டிருக்கின்றன. இவை பிரதான கட்சிகளுக்கு அழுத்தம் தரும் வெகு மக்கள்திரள் இயக்கத்தைக் கட்டியெழுப்பும் எனும் எதிர்கால சாத்தியம் இருக்கிறது என்று மட்டும் சொல்லலாம். இதுவே ஐநா சபையில் இந்தியா மனித உரிமைத் தீர்மானத்தை ஆதரிக்கும் நிரப்பந்தத்தை, தமிழக அரசியல் கட்சிகளின் வழி உருவாக்கியது என்பது நம் சமகால நிகழ்வு. இப்படியான நடவடிக்கைகள் நோக்கித்தான் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும்.

ELECTRICAL WORKS




FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# குவாண்ரத்தின் பின்னால்

## பேரண்டம் - 112

இன்று உலகினில் மிகவும் வெற்றிகரமாகப் பாவிக்கப்படும் பொறிமுறையான குவாண்ரம் மனிதர்களிடையே எவ்விதம் வந்து சேர்ந்தது என்பதனை அறிந்து கொண்டோம். பல சுவாரசியமான பகுதிகளைக் கொண்டதாக அமைந்த இப்பகுதி உங்களை ஈர்த்திருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை. பலரது ஏற்புக்கள் என்னை வந்தடைந்த போது மகிழ்ந்தேன். குவாண்ரத்தின் கதை அவ்வளவுடன் முடியவில்லை. இன்னமும் தொடர்கின்றது. ஆய்வுகள் செய்து கொண்டே போகின்றார்கள். பல ஆச்சரியமான விபரங்கள் வெளிவந்து கொண்டே இருக்கின்றன. சிலவற்றினை நம்பிக் கொள்வது கூடக் கடினமாக இருக்கின்றது. ஆனாலும் கணித முறையிலும், பரிசோதனைகளினாலும் சரி-யெனக் காட்டப்படும் அவற்றினை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. குவாண்ரத்தின் வளர்ச்சியானது விஞ்ஞான உலகின் இன்னொரு வாசலையும் திறந்து விட்டது. டிறெக் என்பவரின் குவாண்ரத்தில் இலத்திரன்களின் இயக்கங்களுக்கான சமன்பாட்டின் தீர்வுகள் பல புதிய



விடயங்களை இயற்பியலுக்குக் கொடுத்தது. அதன் விளைவாக 'அடிப்படைத் துணிக்கைகள்' என்ற புதிய பகுதி உதயமாகி வெகு வேகமாக வளர்ந்து கொண்டு போகின்றது. பேரண்டமும், அதன் உடமைகளும் எவ்விதம் தோன்றின?, எதனால் தோன்றின? போன்ற கேள்விகளுக்கான பதில்களைக் கூட இந்த அடிப்படைத் துணிக்கைகளைக் கண்டறியும் ஆய்வாளர்கள் குவாண்ரத்தின் உதவியுடன் காண முற்படுகின்றார்கள். பாரிய உபகரணங்களுடன் செய்யப்படும் இதற்கான பரிசோதனைகள் மனிதகுலத்தினை அச்சுறுத்தி வருகின்ற போதிலும், ஆய்வுகள் தொடர்கின்றன. விளம்பரம் பத்திரிகையில் டிசெம்பர் 15, 2011ல் வந்த கடவுட் துகள் செய்தி அந்த வகையினதுதான். பேரண்டத்தின் பொருட்கள் அனைத்திற்கும் மூல காரணியாக இருப்பது 'கிக்ஸ் பொசன்' என்கின்ற மிகச் சிறிய துணிக்கைதான் என்பது இந்நாட்களின் எடுகோள். அதன் அடிப்படையில்தான் இப்போதய பௌதீகக் கொள்கைகள் எல்லாம் வலுவாகக் கட்டப்பட்டுள்ளன. இந்த எடுகோட் துணிக்கையைத்தான் ஆய்வாளர்கள் தேடித் திரிகின்றார்கள். அதுவுமோ அகப்பட மாட்டேன் என்று கொண்டு திரிகின்றது. விஞ்ஞானிகளின் 'அதன் சாயலலைத் தெரிந்து கொண்டோம்' என்பதுதான் அன்று விளம்பரத்தில் வந்த செய்தி. 'அடிப்படைத் துணிக்கைகள்' என்றும் பகுதியில் அது பற்றிய விபரங்களை பார்க்கலாம்.

குவாண்ரத்தின் தொடர்ச்சியாக அடிப்படைத் துணிக்கைகள் வரவேண்டும். ஆனாலும், 20ம் நூற்றாண்டின் பௌதீகத்தின் இருபெரும் வெற்றி பெற்ற பகுதிகளாக குவாண்ரமும் சார்பியலும் விளங்குகின்றன. நவீன விஞ்ஞான உலகத்தின் வாசல்களைத் திறந்து விட்ட இவ்விரண்டில் ஒன்றினைப் பற்றி ஓரளவுக்குத் தெரிந்து கொண்டோம். தொடர்ந்து சார்பியல் பற்றியும் தெரிந்து கொள்வோம். அடுத்த தடவையில் இருந்து வழமை போலவே விஞ்ஞானத்தனங்களைத் தள்ளி வைத்துவிட்டு, இயல்பு மொழியில் அந்த சார்பியலைப் பார்ப்போம். சார்பியல் என்றதும் பயந்துவிடாதீர்கள். விளம்பரத்தில் வரப் போகின்ற சார்பியல் பல ஆச்சரியமான விபரங்களைத் தரப் போகின்றது. விஞ்ஞானம் தெரியாத விஞ்ஞானிகளுக்கும் விளங்கும் வண்ணமாய், ஒரு சுவையான, பரபரப்பான தொடர்கதை போன்றே சார்பியலை பார்க்கப் போகின்றோம். பொதுவாக எல்லோருமே விஞ்ஞானிகள்தான். ஏனோ தெரியாது நம்மில் பலருக்கு அது தெரியாது போவதால் விஞ்ஞானம் என்றவுடன் காததூரம் ஓடி விடுகிறோம். அப்பயத்தினைப் புறம்தள்ளி விட்டு இப்பகுதியினைத் தொடர்ந்து வாசியுங்கள். உங்களின் வல்லமையை அறிந்து கொள்வீர்கள். பேரண்டம் பற்றிய புதிய பார்வையை அடுத்த தடவையில் இருந்து சார்பியல் உங்களுக்குத் தரப்போகின்றது. சிக்கலான சமன்பாடுகளைத் தவிர்த்து, எளிமையான தர்க்கரீதியிலான அணுகு முறையிலே இதனைப் பார்க்கப் போகின்றோம். இப்பகுதியை முற்றாக வாசித்ததின் பின்னர், இந்நாளின் அதியுயர் அறிவியற் பகுதி எனப்படும் சார்பியல் பற்றிய விபரங்களும் எங்களுக்கும் தெரியும் என்று நாங்களும் தைரியமாகக் கூறிக் கொள்ளலாம். அட இவ்வளவுதானா எனக் கூட ஒருவேளை நீங்கள் கூறலாம். 13 வருடங்களாக உங்களுக்கும் எனக்கும் இடையே ஒரு வளமான தொடர்பை ஏற்படுத்தித்தந்த விளம்பரம் பத்திரிகையினருக்கு நன்றி கூறுகின்றேன். சரி!, அடுத்த தடவையில் சார்பியலின் ஊடாகச் சந்திக்கிறேன்.

நான் எங்கேயோ கேட்டதுண்டு

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்',




**- கனி -**
416.261.1348
leptons@hotmail.ca


உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


MOHAN
HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



**Dr. J. Mohan**
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4



LOTUS ACADEMY

Teach by Certified and Experienced Language and Academic Teachers.
We can provide best education for your loving kids
We maintain our Quality and Quantity
We show importance on Subject Content & Learning Discipline

| Primary | Elementary | High School |
|---|---|---|
| (JK to Grade 3) | (Grade 4 to Grade 8) | (Grade 9 to Grade12) |
| Math, English, Science, Tamil | Math, English, Science French and Tamil | From Grade (9 to 10) Math, Science, English and French From Grade (11 to 12) Function, Advance Function Calculus and Vectors Data Management English, Chemistry, and Physics |

Don't wait for until University start

Start your University Preparation from now
Advance preparation makes your Life in High Level
We teach University First Year Calculus

Classes held at: 5321 FINCH AVENUE EAST
(Between Markham and Middlefield)

Call 416.738.8824

We do home tutoring also
DON'T WASTE YOUR SUMMER VACATION!!!

# குற்ற உணர்வு
# *(GUILT FEELING)*

‘குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி கொள்வதென்பதே’ என்ற பழைய சினிமாப் பாடலின் வரிகள் இன்றும் நினைவுக்கு வந்து செல்லுகின்றன. ‘குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்’ என்ற பழமொழியும் எம் மனத்தினைக் குடைகின்றது. குற்றம் புரியாதவர்களே குறைவு என்னும் அளவுக்கு மனித மனத்துடன் குற்ற உணர்வும் தப்பிக்க முடிவதில்லை. காரணம் அவரவர்களின் மனம் ஏதோ ஒரு குற்ற உணர்வுக்கு உள்ளாகியிருக்கும். எமக்குள்ள பல்வேறு மன எழுச்சிகளுள் மிகவும் தாக்கத்தினை உண்டுபண்ணுவது இக்குற்ற உணர்வாகும். குற்றமுள்ள மனச்சாட்சிகள் மக்களை எப்போதும் கோழைகளாக்குகின்றன. (Guilty Consciences always make people cowards) என்பதே உளவியல் அறிஞர்களின் கருத்தாகும்.

பலர் தமது குற்றங்களை சில சந்தர்ப்பங்களில் மட்டுமே உணர்ந்து கொள்வர். ஆனால் எந்த நேரமும் தமது குற்ற உணர்வுகளை அனுபவித்துக் கொண்டிருப்பவர்களும் உள்ளனர். மனத்திற்குள், ‘என்னை மன்னித்துவிடு என்னை மன்னித்திவிடு’ என்று வேண்டிக் கொண்டிருப்பவர் பலராவர். தெய்வத்திடம் சென்று மன்னிப்பும் கோருபவர்களும் பலருளர். எமது குற்றங்களுக்கு எம்மை நாமே தண்டித்து வருகின்றமையும் காண முடிகின்றது. நான் குற்றம் புரிந்துள்ளேனா? குற்றம் புரியவில்லையா? என்று எமக்குள் நாமே கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கின்றோம். நீதிமன்றம் போன்று நாமே சிறைக்கைதியாகவும், வழக்காளியாகவும், எதிரி தரப்பு வக்கீலாகவும், நீதிபதியாகவும் பல்வேறு பாத்திரங்களில் மாறி மாறி நடிக்கின்றோம். குற்றம் என்றால் என்ன? என்று தெரியாமல் குழப்ப நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற எம் மனத்தினை தொடர்ந்து அரித்துக் கொண்டிருக்கும் இவ்வுணர்வு எம்மை வாழ விடாமல் செய்து வருகின்றது.

உளவியல் ஆய்வாளர்கள் குற்றம் புரிவது என்பது எம்மை முதல் தர கொலையாளியாக மாற்றி விடுகின்றது என்று கூறுகின்றனர். குற்ற உணர்வு தோன்றுவதால் உடல் நோய்கள் விபத்துக்களைச் சந்தித்தல், மதுவுக்கு அடிமையாதல், தற்கொலை உணர்வுகள் ஏற்படுதல், மற்றவர்களை கொலைசெய்யும் உணர்வுகள், ஆண்மைக் குறைவு போன்றவை தோன்ற வாய்ப்புண்டு. குற்ற உணர்வு எமது படைப்பாற்றல் திறன்களை மழுங்கடித்து விடுகின்றது. நாமே எமது குற்றத்திற்கு மனத்திற்குள் தண்டனை வழங்கிக் கொண்டிருப்பதால் எமது திறன்கள் செத்து மடிகின்றன.



குற்ற உணர்வு சிறு பிள்ளைகள் முதலாக தோற்றம் பெறுகின்றது. பெற்றோர்கள் பலபழக்க வழக்கங்களை கற்பிக்கின்றனர். அவற்றை மீறும் போது நாம் குற்றம் புரிபவர்களாக எண்ண ஆரம்பித்து விடுகின்றோம். சமூகம் பல சமூக உணர்வுகளையும் அறநெறிகளையும் போதிக்கின்றது. அதனை மீறும்போது குற்றம் புரிவதாக எண்ணுகின்றோம். இவ்வாறு உருவாகி வளரும் இவ்வுணர்வு எமது மனத்தில் புகுந்து இரவு பகலாக எம்மை எப்படியெல்லாமோ ஆட்டிப்படைத்து விடுகின்றது. பொதுவாக நாம் குற்றம் புரியாது விட்டாலும் குற்றம் புரிந்தவர்கள் போல் எல்லாவற்றிற்கும் பயந்து கொண்டிருக்கும் கோழைகளாகி விடுகின்றோம். எமக்கு எது சரியான செய்கை அல்லது பிழையான செய்கை என்று தெரிவதில்லை. எது நல்லது? எது கூடாது என்று உணர்ந்து கொள்ளவும் முடிவதில்லை. எமது மனமே எல்லா முடிவுகளையும் எடுப்பதால் வாழ்வு முழுவதும் தடுமாறிக் கொண்டிருக்கின்றோம். எமது மனச்சாட்சியே எல்லாவற்றையும் தீர்மானிக்கின்றது.

சமூகம் கற்றுத் தருகின்ற சட்டதிட்டங்களை மீறுவதற்கு கற்றுக்கொண்டுள்ள நாம் எமக்கு ஏற்படும் கோபம் காரணமாக எதனையும் செய்து விடுகின்றோம். அளவுக்கு மீறிய கோபம் குற்ற உணர்வினை தோற்றுவிப்பதாக உளவியலாளர் கருதுகின்றனர். சிறுவயதில் பெற்றோர்கள் நல்ல பிள்ளை என்று எம்மைத் தட்டிக் கொடுத்து வளர்த்தாலும் பெரியவர்களானதும் நாமே தீர்மானங்களை எடுப்பதால் பல குற்றங்களை இழைத்து விடுகின்றோம். அன்புச் சூழ்நிலையில் வளராத பிள்ளைகளிடம் உருவாகி வளரும் இக்குற்ற உணர்வு படிப்படியாக வன்செயலாக மாற்றம் பெறுகிறது. இறுதியில் குற்றம் செய்யாமல் வாழமுடியாத அளவுக்கு மனித மனங்களை மாற்றியும் விடுகின்றது. நாம் தினசரி தனிமையில் இருந்து செய்த தவறுகள் பற்றி இரை மீட்கின்ற வேளையில் இனம்புரியாத பயம் ஏற்பட்டுவிடுகின்றது. என்ன குற்றம் செய்துள்ளோம்? இதற்கு என்ன தண்டனை என்று எமக்கு நாமே கேட்டுக்கொள்கின்றோம்.

சிக்மன்ட் பிராய்ட் என்ற உளவியலாளர் உணர்வு பற்றி ஆய்வு நடத்தியுள்ளார். அவரது கூற்றுப்படி இட் (ID) எனப்படும் மனஉணர்வு விலங்குணர்ச்சி போன்றது. எமது மனம் இவ்வாறு செயற்படின் நினைத்த காரியத்தினை செய்ய முயல்கின்றது. எந்தவிளைவுகளையும் பற்றி எண்ணாது குற்றம் புரிய தூண்டுகின்றது. மனச்சாட்சியற்ற இவ்வுணர்வினால் கொலை, கற்பழிப்பு போன்ற எந்தப் பாதகச் செயலையும் செய்ய முடியும். இதேவேளையில் அதிகம் (Super Ego) செயல்படுமானால் மனச்சாட்சி கட்டி எழுப்பப்படுகின்றது. தீயவிளைவுகளை சிந்திக்கின்றது. இந்த நிலை செயற்படும் சூழ்நிலையில் நடுநிலையில் நின்று தொழிற்படுவது அகம் (Ego) ஆகும். இறுதி முடிவு இதனால் எடுக்கப்படுகின்றது. நடுவராகத் தொழிற்பட்டு சரியான காரியத்தினைச் செய்யத்தூண்டுகின்றது. இதற்கு அடிபணியாதவர்கள் இத்தொழிற்பாட்டினால் குற்றங்களை செய்கின்றனர். எனவே மனத்தினை தொழிற்படுத்தும் இம்மூன்று நிலைகளும் எவ்வாறு தொழிற்படுகின்றதோ அதற்கு ஏற்பவே குற்றங்களும் ஏற்பட வாய்ப்புண்டு. (The Tension between demands of conscience and the actual attainments of the ego is experienced as a sense of guilt). உதாரணமாக, மனத்தினை ஒரு வாகனம் என்று கொண்டால் இட் (ID) இயந்திரம் போன்றது. Ego சாரதி போன்றது. Super Ego பின்னால் இருக்கும் பிரயாணி போன்றது.

மேற்குறிப்பிட்ட மூன்று வகையான மனத் தொழிற்பாடுகளும் எவ்வேளையிலும் முரண்பட்டுக் கொண்டிருக்கும். எமது ஆசைகளும் முறைப்படுத்தாத கனவுகள் பல ஆழமாக புதையுண்டு உள்ளன. பல்வேறு குற்றங்களைக் கனவுகளில் நிகழ்த்தி முடித்து விடுகின்றோம். பல ஆசைகளை உருவாக்கும் மனம் பல ஆசைகளை மறைத்தும் வைத்திருக்கின்றது. இவ்வாறான ஆசைகளை வெளிவிடும்போது குற்றங்கள் நிகழ்த்தப்பட முடிகின்றது. இந்த வேளையில் தண்டிக்கவும் படுகின்றோம்.

பொதுவாக எமது குற்றங்கள் இரண்டு வகையாக உள்ளன. ஒருவகை நாம் தெரிந்து செய்வது. மற்றையது நாம் தெரியாமல் செய்வது. அசாதாரணமாக ஒரு பொருளை நாம் திருடுகின்றோமென்றால் அது நாம் தெரிந்து செய்யும் குற்றமாகும். ஒருவருக்கு தீங்கு செய்ய முற்படுகின்றோம் என்றால் நாம் திட்டமிட்டுச் செய்கின்றோம். சர்வசாதாரணமாக குற்றங்களை நிகழ்த்துபவரது சிந்தனை மட்டத்தில் குற்றங்களை அறிந்து கொள்வது கடினம். எல்லாரும் தாம் சரியாகவே செய்வதாக நினைத்து தவறுகளைச் செய்து கொண்டிருப்பார்கள். இதனால் அவர்களது வாழ்வில் பல படைப்பாற்றல்கள் சிதறடிக்கப்படுகின்றன. இதேவேளையில் பதற்றம், கோபம், துயரம் காரணமாகத் தம்மையறியாமல் குற்றம் புரிபவர்கள் இன்னொருசாரார் உள்ளனர். இவர்களது கருத்துப்படி மனிதன் கடவுளல்ல. ‘மனிதன் தவறிழைப்பவன் வாழ்க்கை எல்லோருக் கும் முழுமையானதல்ல.’ என்கின்றார்கள். அதாவது சில சந்தர்ப்பம் சூழ்நிலை காரணமாக தவறு செய்வதால் குற்ற உணர்வாக மாற்றம் பெற முடிகிறது எனலாம்.

அடுத்து, தவறு செய்யும் விதத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையில் வேறுபாடுகள் உள்ளதாகவும் ஆராய்ந்துள்ளனர். சிறுவயது முதல் ஆண், பெண் வேறுபாடு தோற்றம் பெறுவதால் பொதுவாக பெண்கள் தாம் தவறிழைத்து விட்டதாக அதிகம் வருந்துகின்றதாக கூறப்படுகின்றது. நீண்ட காலமாக பலவீனமான மனப்போக்குள்ள முறையில் வாழ்ந்து வருகின்ற பெண்கள் பொதுவாக தாம் செய்த குற்றத்திற்காக கூடுதலாக வருந்துகின்றனர். சமூகம், பொருளாதாரம், அரசியல் அம்சங்களில் மிகக் குறைந்த பங்களிப்பினை ஆற்றிவந்த அவர்கள் பிறப்பினையிட்டு வருந்தியும் வருகின்றனர். தற்போதைய சூழ்நிலை மிகவும் மாறிவிட்டது. ஐந்திலொருபங்கு பெண்கள் ஆண்களை தாக்குகின்ற சூழ்நிலை உலகில் ஏற்பட்டுள்ளது. கணவன்மாரின் தொந்தரவுகளைப் பொறுக்கமுடியாமல் கணவனை கொலை செய்கின்றனர். எரியூட்டுகின்றனர். முன்புபோல் பெண்கள் வீட்டு வேலை செய்ய வேண்டும். ஆண்கள் வருமானம் பெறவேண்டும் என்ற நிலை இபபோது இல்லை. இருவரும் சரி சமமாகப் பொறுப்புக்களை பகிர்ந்துகொள்ள வேண்டியுள்ளது. இதனால் தான் எல்லா நாடுகளிலும் குற்றச் செயல்கள் மிகவும் கூடியுள்ளன. அடிக்கடி குற்ற உணர்வுகள் குடும்பங்களில் தலை தூக்குவதால் ஆலோசனை சங்கங்கள் உருவாகி வருகின்றன.

குற்ற உணர்வு எத்தனை குடும்பங்களைச் சீரழித்து வருகின்றது என்பதற்கு உளவியல் ஆய்வுகள் பல ஆதாரங்களாகின்றன. புதிய வகையில் மற்றவர்களை எதிர்க்க முடியாத சூழ்நிலையில் அவர்கள் உணரும்படி தன்னைத் தண்டிப்பவர்களும் உள்ளனர். பல குடும்பங்களில் ஆண் பெண்களுக்கிடையில் சண்டை நிகழும் பொழுது திருப்பித் தாக்க முடியாத பெண் தனது தலையில் அடித்துக் கொள்வார் அல்லது சுவரில் தலையை மோதிக் கொள்வார். இப்படியான செய்கை உள்ளவர்களை Masochist என்று அழைப்பர். பெற்றோர்களை



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 38ஆம் பக்கம்


**AYURVEDA**
**MASSAGE GOOD FOR HEALTH & PAINS**
Back, Leg, Shoulder, Cervical, Heel, Knee and Foot Pain Stiff Neck, Severe Headacke, Migraine, Insommia Weight Problems, Sciatica, Slipped - Prolapsed Disc, Solar Piexus, Disorders Of Joints, Bones And Muscles.
***Women For Women, Men For Men - 416.434.9251***

# பில்லா - 2 திரை விமர்சனம்



பில்லா - 2 என்ற தலைப்புடன் வந்திருந்தாலும் உண்மையில் இந்தப் படம் பில்லா 3ஆம் பாகம் ஆகும். சலீம் ஜாவேத், 1978-ம் வருடம் எழுதிய 'டான்' கதையில் பிறந்த பில்லாவுக்கு முன்னுரையாக வந்திருக்கும் படம் இது. அதாவது, முந்தைய படங்களில் பில்லா பெரிய டானாக வருகிறான் என்றால், இந்தப் படம் அதற்கு முந்தைய அவனது வாழ்க்கையைப் பேசுகிறது. பில்லா எப்படிக் கடத்தல் தொழிலுக்கு வந்தான் என்கிற துவக்க காலக் கதைதான் பில்லா - 2. அந்தவகையில் முதல் பாகத்திற்கு முந்தைய கதை. யுத்த சூழலுடன் படம் ஆரம்பிக்கிறது. யுத்தத்தில் அமைதியாக இருக்கும் ஒரு குடும்பம் சிதைக்கப்படுகிறது. தனியனாகின்ற அக்குடும்பத்தின் சிறுவன், இளைஞனாகி அகதியாக ராமேஸ்வரம் நுழைகிறான். (யுத்தம், இலங்கையில் நடப்பதாகவோ இளைஞன், ஈழ அகதி என்றோ குறிப்பிட்டு காட்டப்படவில்லை. யாரும் ஈழத் தமிழும் பேசவில்லை. ஆனால், ராமேஸ்வரம்

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

மண்டபம் முகாம் அகதி என்றால் ஈழத் தமிழ் அகதிதான் என்றுதானே எடுத்துக்கொள்ள முடியும்) ராமேஸ்வரத்துக்கு அகதியாய் வந்து இறங்கும், ஒரு சாதாரண அகதி, கடத்தல் உலகத்தையே ஆட்டிப் படைக்கும் டானாக (டேவிட் பில்லாவாக) உருமாறுவதே கதை.

கொலை சதியில் இருந்து பில்லா (அஜித்) தப்பிப்பதிலிருந்து ஆரம்பிக்கும் படம், பிளாஸ்பேக்கில் விரிகிறது. இலங்கையில் இருந்து ராமேஸ்வரத்திற்கு அகதியாக வந்து சேர்கிறார் டேவிட் பில்லா (அஜித்). அவருக்கு ஒரு அக்கா. அக்காவுக்கு ஒரு பெண் இருக்கிறாள். அவர்கள் சென்னையில் இருக்கிறார்கள். அகதிகள் முகாமில் நண்பனுக்காக இன்ஸ்பெக்டரை அடிக்கும் பில்லா கொஞ்சம் பிரபலமடைகிறான். மண்டபம் அகதிகள் முகாமில் இருந்து சென்னைக்கு வைரத்தை கடத்தும் தொழிலில் தெரியாமல் இறங்குகிறான் பில்லா. தெரிந்த பின்பு அதையே தொடர்ந்து செய்யக்கூடாது என்று நினைக்கிறார். பிறகு, ஹெராயின் கடத்தல் மூலம் கோவா டான் அப்பாசியுடன் (பாண்டே) அறிமுகமாகிறான். பிறகு, அப்பாசி சம்மதமில்லாமலேயே உலகளாவிய மாபியா தலைவனான டிமிட்ரியுடன் (வித்யுத்) ஆயுதக் கடத்தலில் இறங்குகிறான். இதனால், பில்லாவை வளர்த்துவிட்ட கோவா டான் அப்பாசி, அவன் மீது சந்தேகம் கொண்டு கொல்லப் பார்க்க, அவரையும் போட்டுத் தள்ளுகிறார் பில்லா. அதன்பிறகு, தன் தொழில் சாம்ராஜ்யத்திற்கு இடையூறு செய்வதால் டிமெட்ரியுடனும் மோதுகிறார். இதனால், முதல்வரைக் கொன்ற பழியை பில்லாவின் மேல் விழச் செய்து மாட்டிவிடுகிறார்கள். பழியிலிருந்து மீண்டு டிமெட்ரியையும் கொன்றுவிட்டு கடத்தல் உலகின் முடி சூடா மன்னனாக பில்லா மாறுவதுடன் படம் முடிகிறது.

கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களுக்குப் பிறகு வரும் அஜித்தின் புதிய படம். பெரிய இடைவெளிதான் என்றாலும் அஜித் வழக்கம் போல அழகாக இருக்கிறார் ஸ்டைலாக வருகிறார். அஜித்தின் ஹெலிகொப்டர் ரிஸ்க் சாகசம் அற்புதம். ஆனால், வெகுஜன கதாநாயகன் படமென்றாலும் படம் முழுவதும் அஜித். சகட்டுமேனிக்கு கையில் கிடைத்ததையெல்லாம் (குண்டூசி உட்பட) வைத்துக்கொண்டு எதிரிகளை ரத்த வெள்ளத்தில் வீழ்த்திக் கொண்டே போவது ஒரு கட்டத்துக்கு மேல் போரடிக்கிறது. புருனோ அப்துல்லா, ஓமனக்குட்டன் என்று இரண்டு கதாநாயகிகள். பார்வதி ஓமனக் குட்டன், அஜித்தின் அக்கா மகளாக வருகிறார். "மாமா... மாமா..." என்று திரைக் கதையில் சில இடங்களை நிரப்ப மட்டுமே பயன்படுத்தப்பட்டிருக்கிறார். புருனா அப்துல்லாவை, குளோஸப்பில் தாங்க முடியவில்லை! அப்பாஸியாக வரும் சுதன்சனு பாண்டே நல்லதொரு தேர்வு. கோவா மாநிலத்தை கையில் வைத்திருக்கும் டானாக காட்சியளித்திருக்கிறார். இந்தியாவிலேயே கோவா மாநிலத்தில்தான் முதல் அமைச்சர், துணை முதல் அமைச்சர்கள், மந்திரிகள் ஆகியோர் போதை மருந்து கடத்தல் கும்பலுடன் தொடர்பு என்ற குற்றச்சாட்டின்கீழ் சிறைக்குச் சென்றுள்ளார்கள். அரசியல்வாதிகளுடனான தொடர்பில் இன்னமும் அங்கே அப்பாஸி போன்ற டான்கள் இருப்பது சாத்தியம்தான்..!

ஜார்ஜியாவில் சர்வதேச ஆயுத வியாபாரியாக அடையாளம் காட்டப்பட்டுள்ளார் டிமிட்ரியாக நடித்துள்ள வித்யூத் ஜாம்வெல். மிகச் சிறந்த ஸ்டண்ட் கலைஞரான

தொடர்ச்சி 40ஆம் பக்கம்


**CONDO. FOR SALE**

**100 Prudential Drive, Scarborough**



- *Very Large Three Bedrooms*
- *Two Washrooms*
- *Large Living Room and Kitchen*
- *Close to Kennedy Subway*
- *Swimming Pool Open 7 Days a Week*
- *One Parking Spot With the Unit*

**416.285.0249 / 416.509.4599**

**ARE YOU SLEEPING WITH THE ENEMY?**



*Almost half of all Americans suffer from Allergies and a Dirty Mattress may be the Cause!*

If you're suffering from Asthma, Bronchitis, inflammation of the Mucous Membranes, Eczema, Itchy Red Eyes and a whole host of other Allergy related conditions, the culprit could be the dust mites living in your mattress. There's only one way to effectively defeat this enemy.

*Call Selvam @Hygenitech Southern Ontario*

**King or Queen $59.95**

Ask about our discounts on additional mattresses

Call today to schedule your **free**

No Obligation In - Home AllergenTest

**416.300.4775**

Auhorized Dealer

HYGIENITECH MATTRESS CLEANING SYSTEMS

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

நகைச்சுவைத் தொடர் 251

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



## பேசப் படாத அனுபவங்கள்

அன்றைய நாட்களை மறக்க முடிவதில்லை. இன்றைய நாட்களை நினைத்துப்பார்க்க முடிவதில்லை. தமிழில் கதைக்கும்போது பலவிதமாகக்கதைப்பார்கள்.

கலியாணவீடு, பூசைவீடு, நல்லநாள் பெருநாள்... சொந்தம் பந்தம் என படித்தவர்களும் படிக்காதவர்களும் தமிழை இப்படியே கதைக்கப்பழகிவிட்டனர்.

சாதாரண குடும்பங்களில் தீபாவளி புதிய உடைகள் மட்டும் என முத்திரை பதித்த தினமாகும். கொஞ்சம் வசதி கூட இருந்தால் தைப்பொங்கல் சித்திரை புதுவருடம் போன்ற தினங்களுக்கு புது உடைகள் எடுப்பார்கள். முதல் குறிப்பிட்ட நல்ல நாள் பெருநாட்களுக்கு கோவில் குளமென செல்லும்போது நல்ல உடை கஸ்டத்தின் மத்தியிலும்... சுருக்கமாக சொன்னால் உண்ணாமல் தின்னாமல் வாயைக்கட்டி வயிற்றைக் கட்டி வாங்கிய சங்கிலி காப்புடன் சென்றால் ஆலயத்தில் பக்தகோடிகளை விட பக்தர்கள்போல கேடிகளே அதிகமாக சங்கிலி காப்பு திருட்டில் ஈடுபடுகின்றனர். அன்றுதொட்டு இன்றுவரை மாறவில்லை.



மாறாதையா! மாறாது நிறமும் குணமும் மாறாது.

திருட்டு என்பது மாங்காய், தேங்காய், வாழைக்குலை, சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார், லொறி, ரெயின், பிளேன் என பல வகையுண்டு. அவரவர் கெட்டித்தனத்திற்கேற்ப திருடப்படுகிறது.



யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு யாழ்தேவி அல்லது இரவு மெயில்ரெயினில் செல்லும்போது மோதிரத்திற்காக விரலும் தோட்டுக்காக காதும் வெட்டப்பட்ட கதைகள் ஏராளம். பணத்திற்காக எத்தனை கொலைகள். இடம்பெயர்ந்து வந்துவிட்டோம். எதைக்கற்றோம்?? எதை விட்டோம்???

திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது. திருடாதே பாப்பா திருடா...... எம்.ஜி.ஆர்..படப்பாடல்.



கழுதைக்கு உபதேசம் காதிலே செய்தாலும்.... அவலக்குரலன்றி ஆவதொன்றுமில்லை.

ஒலிம்பிக் ஆரம்பவிழா தடல்புடலாக லண்டனில் ஆரம்பிக்க மணிக்கணக்காக ரி.வி.க்குப்பக்கத்தில் இருந்த ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கண்ட்புளோர் செல்லம்மாவும் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். உலகரின் வழமையான பக்தித்திருவிழா கதாப்பிரசங்கம் பார்க்க முடியவில்லை. ஆட்டிலறி அன்னம்மாவின் ஒன்றுவிட்ட சகோதரி வெம்லி வேதா அதாவது வந்தகாலத்தில் அவ வெம்லி என்ற பகுதியில் இருந்தபடியால் அந்தப்பெயர் ஒட்டிக்கொண்டது ஒலிம்பிக் எங்கடை வீட்டுக்குக்கிட்டத்தான் நடக்குது. நானும் போவனெண்டு சொன்னதாலை ரண்டுபேரும் ரி.வி.யை விட்டு அசைமல் றெக்கோட்பண்ணி திரும்பத்திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தனர். ஒலிம்பிக்குக்கு வந்த லட்சக்கணக்கான மக்களில் அவர்களை எங்கே தேடுவது.



கோவிலில் அரோகரா சத்தத்தோடு சங்கிலி அறுக்கும் நேர்த்தி வைத்தவர்களும் தங்கள் நேர்த்தியை பூர்த்தி செய்தனர்.

தொலைத்தவர்கள் சுடச்சுட இறைவனிடம் உடனேயே முறையிட்டனர்.




அரசன் அன்றுகொல்லும். தெய்வம் நின்றுகொல்லும்.
ஏழை அழுத கண்ணீர் கூரியவாளையொக்கும்.

உலகர் இங்குள்ள கோவில் திருவிழாவிலும், தேரிலும் பல நாட்களாக காணாத முகங்களை கண்டு கதைத்துச் சிரித்தாலும் பல இழந்த முகங்களையும் நினைத்துப்பார்த்தார். ராசம்மா எப்போதோ கொடுத்த சங்கிலியை சால்வையால் கழுத்தை மூடிக்கொண்டு நடந்தார்.
யாகாவாராயினும் நகை காக்க!

........................................................

## ஞாபகம் வருதே....ஞாபகம் வருதே
## ஓகஸ்ட் 1-15




2. அலெக்சாண்டர் கிரகாம் பெல் நினைவுதினம் (ரெலிபோனைக் கண்டுபிடித்தவர்) (மார்ச் 03 1847- -ஒகஸ்ட் 02 1922)

4. பொன் கணேசமூர்த்தி (நினைவு தினம்) (ஓகஸ்ட் 04, 2006) எழுத்தாளர் வானொலி கலைஞர்

6. சிவிக் விடுமுறை

14. ஆடிக் கடைசிச்செவ்வாய்




# குற்ற உணர்வு

### 36ஆம் பக்கத்தொடர்ச்சி


திருத்துவதற்காகத் தம்மை தண்டிக்கும் பிள்ளைகள் உள்ளனர். இதற்காகப் பலகடும் நடவடிக்கைகளை எடுக்கின்றனர். நெருப்பில் தன்னைச் சுட்டுக்கொள்ளுதல் சுவரில் தலையை அடித்தல், பிளேட்டினால் உடலை வெட்டிக் கொள்ளுதல் மூலம் மற்றவர் குற்றத்திற்கு தனக்குத் தானே தண்டனை வழங்குகின்றனர்.

குற்ற உணர்வுக்கு உள்ளானவர்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றனர் என்று ஆராயப்பட்டுள்ளது. சிறுவர்களிடம் ஏற்படும் குற்றம் இளவயதினரின் குற்றம் காதலில் நிகழும் குற்றம் திருமணத்தில் நிகழும் குற்றம் வெற்றி பெறுவதில் ஏற்படும் குற்றம் தொழிலில் ஏற்படும் குற்றம் நண்பர் மீது ஏற்படும் குற்றம் அந்நியர் மீது ஏற்படும் குற்றம் என்று பல வடிவங்களில் குற்றங்கள் தினசரி நிகழ்த்தப்படுகின்றன. இவ்வாறான குற்றங்களுடன் பல உள நோயாளர்களை உருவாக்கி வருகின்றது. உடல் நோய்கள் போதைவஸ்துக்கு அடிமையாதல் கூடுதலாக உண்ணுதல் குறைத்து உண்ணுதல் மேலதிக வேலைசெய்தல், சூதாட்டம், ஆண்மைக்குறைவு, மனச்சோர்வு, தற்தண்டிப்பு, தற்கொலை போன்ற பல எதிர் விளைவுகள் ஏற்பட்டு வருகின்றன. பலரது நிதானம் தவறுகின்றமையால் விபத்துக்கள் ஏற்பட்டு வருவதாகவும் அறியப்பட்டுள்ளது. குற்றம் என்பது தனிப்பட்ட ரீதியில் மட்டுமன்றி சமூக ரீதியில் நாடுகள் ரீதியில் நிகழ்த்தப்படுவதும் உண்டு. இதனால் பல அழிவுகள் ஏற்படுகின்றன.



இவ்வாறு ஏற்பட்டு வருகின்ற குற்ற உணர்வினைக் குறைப்பது எப்படி? என்பதே இன்றுள்ள பிரச்சினையாகும். நித்திரை யின்றி பயத்துடன் வாழ்ந்து வரும் பலருக்கு விடுதலை தேவையாக உள்ளது. இதற்கு உளவியலாளர்கள் சில முக்கிய முடிவு களை வெளியிட்டுள்ளனர். முக்கியமாக பதற்றத்தினையும் கோபத்தினையும் குறைக்க முயல்வதே முதலில் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். சுயமதிப்பினை உயர்த்திக் குற்றங்களைத் தவிர்த்தல் அடுத்துள்ள வழிமுறையாகும். பொதுவாக மனத்தில் எரித்துக் கொண்டிருக்கும் குற்ற உணர்வினைத் தவிர்ப்பதற்குப் பலதிடமான முடிவுகளை எடுக்க வேண்டியுள்ளது. முக்கியமாக எமது குற்ற உணர்வுகளை நாம் இனம்கண்டு அதனை அகற்ற வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். எமக்குள் மறைந்திருக்கும் ஆசைகள் எவை என்பதனை அறிந்து கொள்ள வேண்டும். எமது உள்ளத்தினை ஒரு குழந்தை போல மாற்றிக்கொள்ள வேண்டும். கடந்தகால எமது கோபஉணர்வுகளைப் புரிந்துகொள்ள வேண்டும். எமக்குள் உள்ள பால் உணர்வுகள் எவை என்பதனைப் புரிந்து அறிந்து மேலும் வளரவிடாமல் தடைசெய்ய வேண்டும். சமூக நீதியைத் தெரிந்து கொண்டு அதற்கேற்ப வாழப்பழக வேண்டும். புத்தியாகத் தெரிவுகளை செய்துகொள்ள வேண்டும். நாமே எமது வாழ்வுக்குப் பொறுப்பு என்பதனை உணர்ந்து செயற்பட வேண்டும்.

இறுதியாக மகிழ்ச்சியான வாழ்வுக்கு எம்மை அழைத்துச் செல்வதற்கு நாம் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. எமக்குள் நாமே கொண்டிருக்கும் குற்ற உணர்வுகளை குறைப்பதற்கு முயலுதல் வேண்டும். நாமே எல்லா தீர்மானங்களுக்கும் பொறுப்பு என்பதால் சரியான தீர்மானங்களையே எடுக்க வேண்டும். எமக்குள் மறைந்து கிடக்கும் எல்லா ஆசைகளையும் விலக்கிக் கொள்ள வேண்டும். மிகச் சிறந்த மனப் பான்மையும் மனச்சாட்சியும் கொண்டு மனோபலத்தினை நாம் வளர்க்க முயலவேண்டும்.



YARL WINDOW
BLINDS & DRAPERY
Since 1991



VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORMWOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS
We have experience to make your home more beautiful
Tel: 416.806.5397
905.201.7733
CALL: N. SELVAM

நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 12ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமையன்று தொம்சன் பூங்காவில் (BRIMLEY & LAWRENCE) நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்க ஒன்றுகூடல் நடைபெறவுள்ளது. அனைத்துப் பழைய மாணவர்களையும் அவ் ஒன்றுகூடலில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்கின்றோம்.

நடேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடா)

647-237-3619 / 647-401-2853

# தென் இந்தியாவின்...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

அபிஷேகத்துக்கான நீர் இங்கிருந்தே எடுக்கப்படுகிறது. குருவும் வாயுவும் வருணனை பூஜித்ததை அடிப்படையாகக் கொண்டு இந்தக் கிணற்றில் வருணனை ஆவாஹனம் செய்துள்ளதாக ஐதீகம். சுவாமி புறப்பாட்டின்போது பரிவார தேவதைகளுக்கு நடப்பது போன்றே இந்தக் கிணற்றுக்கும் பூஜை




நடைபெறும். இதன் நீர் வற்றுவதில்லை. இதற்குள் எண்ணற்ற சாளக் கிராமங்கள் இருப்பதாக நம்புகின்றனர். இதன் தீர்த்தம் நோய் அகற்றும் அருமருந்தாகவும் விளங்குகிறது. கருவறையில் அணையாமல் எரியும் நெய் விளக்கு ஒளியில் ஜோதியாக மின்னுகிறான் ஸ்ரீகுருவாயூரப்பன். குருவாயூரப்பனை, உண்ணி (குழந்தை) கிருஷ்ணன் என்கிறார்கள் பக்தர்கள். மேலிரு கரங்களில் சங்கு சக்கரமும், கீழிரு கைக-ளில் கதாயுதமும் தாமரையும், கழுத்தில் துளசி, முத்து மாலைகள் தவழ, கிரீடம், மகர குண்டலம், கேயூரம், கங்கணம், உதர பந்தனத்துடன் வலப்புற மார்பில் ஸ்ரீவத்ஸம் என்ற சந்தனமும் வைஜயந்தி மாலையும் கௌஸ்துபமும் அணிந்து 'ஸ்தானகம்' எனும் நின்ற நிலையில் அருள் புரிகிறான் குருவாயூரப்பன். இந்த விக்கிரகம் வைகுண்டத்தில் மகாவிஷ்ணு வால் உருவாக்கி வணங்கப்பட்ட பின் பிரம்மன், கண்ணன் ஆகியோரால் பூஜிக்கப்பட்டது. 'பாதாள அஞ்சனம்' என்ற உயர் தர கல்லில் வடிவமைக்கப்பட்டது என்கிறார்கள். இப்பொழுது உற்சவர் விக்கிரகம் பொன்னால் செய்யப்பட்டுள்ளது. குருவாயூர் கோயில் விசேஷங்களில் முக்கியமானது, ஆதிசங்கரர் வகுத்த பூஜை முறைப்படிகள் மிகவும் கண்டிப்புடனும் விட்டுக் கொடுக்காமலும் இக்கோயிலில் இன்றும் நிறைவேற்றப்படு கின்றன என்பதுதான். இதை கவனித்துக் கொள்வதற்காகவே இக்கோவிலின் தந்திரி எந்நேரமும் கோவிலிலேயே காணப்படுகிறார்.

ஆதிசங்கரர் வகுத்த அந்த பூஜை முறைகளை அடுத்த இதழில் பார்ப்போம்...

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough



# பில்லா...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

இவருக்கு ஸ்டண்ட்டில் மட்டும் தீனி கிடைக்கவில்லை..! மற்றபடி அஜீத்தின் கெத்துக்கு ஏற்ற வில்லனாகத்தான் தென்படுகிறார்..! இளவரசு, கொஞ்ச நேரம்தான் வருகிறார் என்றாலும், கலக்குகிறார். வசனம்: எழுத்தாளர் இரா.முருகன். நிறைய இடங்களில் வெகு கச்சிதமாக இருக்கிறது. “தீவிரவாதிக்கும் போராளிக்கும் ஒரே வித்தியாசம்தான்! ஜெயிச்சுட்டா போராளி! தோத்துட்டா தீவிரவாதி!” “ஆயிரம் எதிரியை விட்டு வைக்கலாம் ஒரு துரோகியை விட்டு வைக்கக்கூடாது!” “சொன்ன நேரத்துக்கு முன்னாலேயே போனா வேற வேலை இல்லாதவன்னு நினைச்சிடுவாங்க. லேட்டா போனா பொறுப்பில்லாதவன்னு சொல்லிடுவாங்க, அதனால சொன்ன டைமுக்கு போனாத் தான் நம் மேல ஒரு நம்பிக்கை வரும்.” போன்ற வசனங்கள் எல்லாமே கரகோஷங்களை அள்ளுகின்றன. ஆனால், பில்லாவின் உலகம் முட்டாள்களே அற்றது என்பது ஏற்றுக்கொள்ளும்படி இல்லை. அஜித் என்ன பேசினாலும், அது பஞ்ச்’ ஆகத்தான் இருக்கவேண்டும் முடிவு செய்துதான் எழுதினார்களோ என்னவோ தெரியவில்லை.

நிஜமான படத்தின் கதாநாயகர்கள் ஒளிப்பதிவாளர் ஆர்.டி.ராஜசேகரும் எடிட்டிர் சுரேஷ் அர்ஸூம்தான். பில்லாவை போலவே பில்லா - 2வும் மேக்கிங்கில் படு ஸ்டைலாக இருக்கிறது. அதற்காக இயக்குனர் சக்ரிக்கு ஒரு சபாஷ் போடலாம். ஆனால், 1983-ல் வெளிவந்த அல்பாசினோ நடித்த SCAR-FACE படத்தின் கதை அமைப்பையும் காட்சிகளையும் காப்பி அடித்திருப்பதை தவிர்த்திருக்கலாம். அதுபோல், 2008-ல் வெளிவந்த BODY OF LIES படத்தில் இடம் பெற்ற ஒரு காட்சி இதில் அப்படியே படமாக் கப்பட்டுள்ளது! ஆரம்பக் காட்சிகள் எல்லாம் அப்படியே நாயகன் படத்தின் ரீமேக்!



படத்தின் ஆரம்பத்தில், டைட்டில் காட்சி நேரடியாக ஈழத்தில் நடத்தப்பட்ட இந்திய ராணுவ அமைதிப்படையின் கொடூரங்களை பட்டியலிடுகிறது. அதுபோல், அகதிகளை தமிழ்நாட்டு அதிகாரவர்க்கம் எதற்காகவெல்லாம் பயன்படுத்துகிறார்கள் என்பதையும் பிரசார நெடி ஏதுமின்றி இயல்பான முறையில் காட்டியிருக்கிறார்கள். ‘சென்ஸாரில் தட்டி விடுவார்களோ?’ என்றெல்லாம் அச்சப்படாமல் நேரடியாக இவற்றை சொல்ல நினைத்ததை பாராட்டலாம்.

லாஜிக் பார்க்க மாட்டீர்கள் என்றால் ஒரு முறை பார்க்கலாம்..! அஜித் ரசிகர்களுக்கு பிடிக்கலாம்!

## SENIOR TAMIL'SCENTRE ONTARIO

### BOARD OF DIRECTORS & STAFF 2012 - 2013



Seated: S.M. J. Emmanuel (Past President), Sinniah Sivanesan (Secretary), Maya Kandiah (President) M.V. Jeganathan (Treasurer), Kohila Vivegananthan (Vice President), Rani Ganagarajah (Director)

*Standing (Left-Right): R.L. Xavier (Asst. Secretary), C. Santhirasekari (Editor), K. Kamalanathan (Director), K. Saravanabavan (Director), A. Shanmugarajah (Asst. Treasurer), M. Karunakaran (Director), T. Ponnambalam (Director), W. S. Jeevaratnam (Director)*













